திருவாரூர் மாவட்டச் சிறப்பிதழ்

# தமிழரசு





மே 16 - 31, 1998 ரூ.3








## ஒரு சொல் கேளீர் !

அன்பார்ந்த 'தமிழரசு' வாசகப் பெருமக்களே! - விற்பனையாளர்களே! - விளம்பரதாரர்களே! - வணக்கம்!

1970-ல் துவக்கப்பட்ட உங்கள் 'தமிழரசு' ஏட்டின் 28ஆம் ஆண்டுப் பயணம் இனிதே நிறைவடைகிறது.

பவளவிழாக் காணும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் திருக்கரங்களால் அன்று வெளியிடப்பட்ட தமிழ் - ஆங்கிலத் தமிழரசு, எப்போதும் போல மாவட்டச் சிறப்பிதழை மணக்க மணக்கத் தொடர்ந்து வெளியிட்டு மகிழ்ந்திட விருக்கின்றது.

புதிதாக மலர்ந்த மாவட்டங்களில் ஒன்றான திருவாரூர் மாவட்ட இதழை சிறப்பிதழாக வெளியிட்டுள்ளோம். அடுத்த இதழிலும் ஆரூர்ச் செய்திகள் தொடரும்; அடுத்தடுத்து மற்ற மாவட்டச் சிறப்பிதழ்களும் தொடர்ந்திடும். வாழ்த்துங்கள்!!

- ஆசிரியர்


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2029

வைகாசி

மே 16-31, 1998

மலர் : 28 இதழ்:22

விலை ரூ.3


### திருக்குறள்

சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தி னூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு

சிறப்பையும், செழிப்பையும் தரக்கூடிய அறவழி ஒன்றைத்தவிர ஆக்கமளிக்கக் கூடிய வழி வேறென்ன இருக்கிறது? (கலைஞர் உரையிலிருந்து)



# தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி

## இரண்டே ஆண்டுகளில் இந்தியாவிலேயே மூன்றாம் இடம் - முதல் இடத்தை நோக்கி முன்னேற்றம் !

### கலைஞர் ஆட்சியில் தொழில் தொடங்கச் செய்துகொண்ட ஒப்பந்தங்கள்

| ஒப்பந்த நாள் | தொழிற்சாலையின் பெயர் | முதலீடு (ரூபாய் கோடியில்) | முன்னேற்றம் |
|---|---|---|---|
| 18-7-96 | ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் தொழிற்சாலை | 2,450 | 1998, அக்டோபரில் உற்பத்தி தொடங்கப்படும் |
| 2-8-96 | ஆப்டிகல் ஃபைபர் கேபிள்ஸ் தொழிற்சாலை | 40 | 10.25 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது |
| 29-8-96 | எம்.சி.சி. ஸ்கிராப் அக்ரோ தொழிற்சாலை | 38.42 | 44 ஏக்கர் நிலப்பரப்பில் அமையும் - 1999 ஜூனில் உற்பத்தி தொடங்கும் |
| 18-11-96 | வணிக மலர் வளர்க்கும் புளுமிங்மீடோவ் தொழிற்சாலை | 5.42 | 1997 ஜனவரியில் உற்பத்தியைத் தொடங்கி ஏற்றுமதி செய்து வருகிறது |
| 1-1-97 | குருதி சேமிப்புப் பைகள் தயாரிக்கும் தொழிற்சாலை | 14.5 | 12 ஏக்கர் நிலப் பரப்பில் அமையும், இயந்திரங்கள் உபகரணங்கள் இறக்குமதி செய்ய நடவடிக்கை - பணிகள் தொடங்கப் படவுள்ளன |
| 6-1-97 | செயிண்ட் கோபைன் கண்ணாடித் தொழிற்சாலை | 450 | கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 1999 இறுதியில்உற்பத்தியை தொடங்கும் |
| 3-3-97 | இன்டக்கிரேட்டட் அயர்ன் அண்டு ஸ்டீல் பிளாண்ட் தொழிற்சாலை | 3,300 | திட்டத்திற்கான ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது |
| 10-3-97 | மெட்டல் ஹலைடு லேம்ப் தொழிற்சாலை | 28.6 | 1998 மார்ச்சில் உற்பத்தி தொடங்கப் பட்டுள்ளது |
| 10-3-97 | பி.வி.சி. ரெசின் தொழிற்சாலை | 350 | பணிகள் தொடங்கப் படவுள்ளன |
| 30-5-97 | டவுரஸ் நாவல்டீஸ் லிமிடெட் தொழிற்சாலை | 10.2 | உற்பத்தி தொடங்கப் பட்டுள்ளது |
| 31-5.97 | எஸ்.ஜி. அயர்ன் தொழிற்சாலை (இன்சில் இண்டஸ்ட்ரீஸ்) | 12.5 | உற்பத்தி தொடங்கப் பட்டுள்ளது |
| 2-6-97 | இல்ஜின் ஆட்டோமேட்டிவ் தொழிற்சாலை | 18 | கட்டுமானப் பணிகள் முடிவுற்று இயந்திரங்கள் பொருத்தப்படுகின்றன |
| 9-6-97 | கரூர் யான் லிங்க்ஸ் லிமிடெட் தொழிற்சாலை | 45 | 1998 மார்ச்சில் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது |

#### தொழில்துறையில் தமிழகம் மீண்டும் 3வது இடம்

- ★ கலைஞர் ஆட்சியில் 1989-90 ஆம் ஆண்டில் 24,067 கோடி ரூபாய் அளவுக்குத் தொழிற்சாலைகளில் உற்பத்தி ஏற்படுத்தி, அகில இந்திய அளவில் மூன்றாவது இடம்.
- ★ 1991 ஜூலை முதல் 1996 ஏப்ரல் வரை சுமார் 60 மாதங்களில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்த முதலீடு 90,609 கோடி ரூபாய் அகில இந்திய அளவில் 5 வது இடம்.
- ★ கலைஞர் ஆட்சியில் 1998 ஜனவரி வரை இருபதே மாதங்களில் முதலீடு 33,560 கோடி ரூபாய். அகில இந்திய அளவில் 3வது இடம்.
- ★ இது நாட்டின் மொத்த மூலதனத்தில் 17.6%

ஆதாரம் CMIE

#### ஏற்றுமதி

- ★ 1991-92ல் ஏற்றுமதி
- ★ 6,781 கோடி ரூபாய்
- ★ 1996-97ல் ஏற்றுமதி
- ★ 18,500 கோடி ரூபாயாக உயர்வு
- ★ 1997-98ல் 20,000 கோடி ரூபாயைத் தாண்டியுள்ளது.
- ★ இது நாட்டின் ஏற்றுமதியில் 17%

| ஒப்பந்த நாள் | தொழிற்சாலையின் பெயர் | முதலீடு (ரூபாய் கோடியில்) | முன்னேற்றம் |
|---|---|---|---|
| 12-6-97 | ஆட்டோ உதிரி பாகங்கள் தயாரிக்கும் மஹிந்திரா இண்டஸ்ட்ரீஸ் பார்க் லிமிடெட் தொழில்வளாகம் | 150 | 1,200 ஏக்கர் நிலப்பரப்பில் தொழிற்சாலைகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. |
| 19-6-97 | ரமணசேகர் ஸ்டீல்ஸ் லிமிடெட் தொழிற்சாலை | 10.18 | உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது |
| 16-7-97 | பிஸ் பினால் - ஏ இரசாயனத் தொழிற்சாலை | 250 | பணிகள் தொடங்கப்பட்டுள்ளன |
| 16-7-97 | பை ஆக்ஸியலி ஓரியண்டெட் பாலிபிளான் தொழிற்சாலை | 150 | திட்ட அறிக்கை தயாரிக்கப்படுகிறது |
| 14-8-97 | ஆடைகள் தயாரிக்கும் பாரத் டெக்ஸ் ஃ பாஷன்ஸ் லிமிடெட் தொழிற்சாலை | 5.1 | 1997 அக்டோபரில் உற்பத்தி தொடங்கப் பட்டுள்ளது. |
| 12-9-97 | மட்சுசிட்டா தொழிற்சாலை | 59.4 | 2 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் முடியும் நிலை |
| 3-10-97 | கும்ஹோ டயர்ஸ் தொழிற்சாலை | 350 | பணிகள் தொடங்கப்படவுள்ளன |
| 7-1-98 | ஸ்ரீராம் ஆட்டோ காம்போனன்ட்ஸ் லிமிடெட் தொழிற்சாலை | 21 | 1998 ஏப்ரலில் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது |
| 7-1-98 | 100 சதவீதம் ஏற்றுமதியைக் கொண்ட கோழி இறைச்சி பதப்படுத்தும் தொழிற்சாலை | 32 | தேவையான நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது |
| 7-1-98 | 100 சதவீதம் ஏற்றுமதி செய்யும் ஃப்ரோசன் ஃப்ரெஞ்ச் பிரைஸ் நிறுவனங்கள் | 32 | பணிகள் தொடங்கப்படவுள்ளன |
| 7-1-98 | டேரிம் எண்டர்பிரைசஸ் கம்பெனி | 4 | கட்டுமானப் பணிகள் முடிவடைந்து இயந்திரங்கள் பொருத்தும்பணி நடைபெறுகிறது. |
| 7-1-98 | ஜே.கே.எம். டெரீம் ஆட்டோமேட்டிவ் தொழிற்சாலை | 17 | கட்டுமானப் பணிகள் முடிவடைந்து இயந்திரங்கள் பொருத்தும் பணி நடைபெறுகிறது |
| 7-1-98 | யாம்கோ இண்டஸ்ட்ரீஸ் | 2 | கட்டுமானப்பணிகள் விரைவில் தொடங்கும் |
| 7-1-98 | மார்க்குயூப் இந்தியா தொழிற்சாலை | 36.5 | 3ஏக்கர் நிலப்பரப்பில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படவுள்ளன |
| 9-1-98 | நாகார்ஜுனா ரிஃபைனரீஸ் லிமிடெட் தொழிற்சாலை | 3200 | நிலம் வாங்கும் பணி முடிவடையும் நிலை - கட்டுமானப் பணிகள் ஜூனில் தொடங்கும் |
| 9-1-98 | மேண்டோ பிரேக் சிஸ்டம்ஸ் தொழிற்சாலை | 30 | கட்டுமானப் பணிகள் முடிவடைந்து இயந்திரங்கள் பொருத்தப்படுகின்றன |
| 9-1-98 | போஸ் ஹூண்டாய் ஸ்டீல் மேனுபேக்சரிங் தொழிற்சாலை | 44.19 | கட்டுமானப் பணிகள் முடிவடைந்து இயந்திரங்கள் பொருத்தப்படுகின்றன |
| 21-1-98 | டிரான்ஸ்ரூட் இன்டர்நேஷனல் நிறுவனம், சி.சி.எப்., ஐ.எல்.எப்.எஸ் (சாலை மேம்பாடு மற்றும் நிர்வாகத் திட்டம்) | 160 | பணிகள் தொடங்கப்படவுள்ளன |
| 24-2-98 | உயர்தரத் தொழில்நுட்பத் தொழில் பூங்கா. (ஹைடெக் இண்டஸ்டிரியல் பார்க்) | 800 (அடிப்படை வசதிகள்) 12,000 (தொழில் நிறுவனங்கள்) | 2,500 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்யும் பணி ஜூன் மாதத்தில் முடிவடையும் |
| 25-2-98 | பி.வி.சி. ஃபோம் சீட்ஸ் தொழிற்சாலை | 45.69 | 6 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது - கட்டுமானப் பணிகள் தொடங்கப்படவுள்ளன |

**கலைஞர் ஆட்சியில் புதிய தொழில் வளாகங்கள்**

திருப்பெரும்புதூர் - 2,469 ஏக்கர் பரப்பளவில்
இருங்காட்டுக்கோட்டை - 1,829 ஏக்கர் பரப்பளவில்
நெமிலி - 2,429 ஏக்கர் பரப்பளவில்
வடமங்கலம் - 1,408 ஏக்கர் பரப்பளவில்
கடலூர் மாவட்டம், சிலப்பிமங்கலம் (தோல் பதனிடும் தொழில்வளாகம்) - 300 ஏக்கர் பரப்பளவில்
மாமண்டூர் - பழமத்தூர் - 860 ஏக்கர் பரப்பளவில்
காஞ்சிபுரம் மாவட்டம் - ஒரகடம் - 2043 ஏக்கர் பரப்பளவில்
வரதராஜபுரம் தொழில் வளாகம் -1989 ஏக்கர் பரப்பளவில்

**கலைஞர் ஆட்சியில் நடவடிக்கையில் உள்ள புதிய மின் திட்டங்கள்**

★ 2,750 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய 20 சிறு மின் திட்டங்கள்

★ 2,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யத் திரவ நிலை எரிவாயுத் திட்டம்.

★ பழுப்பு நிலக்கரி மூலம் முதல் கட்டமாக 500 மெகாவாட் உற்பத்தி செய்யும் திட்டம்.



# திருவாரூர் மாவட்டம்

திரு. எம். ஆர். மோகன், இ.ஆ.ப.
(மாவட்ட ஆட்சித் தலைவர்)

ஒரு நாடு எத்தகைய வளங்கள் எல்லாம் பெற்றதாக இருக்கவேண்டும் என்பதற்குத் திருக்குறளிலே விளக்கம் காணப்படுகிறது.

ஆனால், ஒரு மாவட்டம் எவ்வாறு அமைந்திடவேண்டும் என்று, எனக்குத் தெரிந்து - எவ்வாறான வளங்களும் நலங்களும் பெற்றதாக அது இருக்க வேண்டும் என்று யாரும் வரையறை செய்து வைத்திருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால் ஒன்று, தமிழ்நாடு அரசின் தனிப்பார்வையில், எமது திருவாரூா மாவட்டம், வருங்காலத்தில் அதற்கான எடுத்துக்காட்டு மாவட்டமாக விளங்கப்போகிறது என்பதை என்னால் மிக உறுதியாக இப்போதே சொல்லமுடியும்.

அண்ணா மறுமலர்ச்சி, நமக்கு நாமே, சமத்துவபுரம் போன்ற அண்மைக்காலத் திட்டங்கள் மட்டுமல்ல; அரசின் எல்லாத் திட்டங்களுமே இலக்கையும் மிஞ்சி விரைந்து நடைபெற்றுவரும் மாவட்டமாகத் திகழ்ந்துவரும் பெருமை இந்தத் திருவாரூர் மாவட்டத்திற்கு உண்டு.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களை அவனி அறியச் செய்தது போன்ற பல சிறப்புக்களும் இன்னும் பல தொன்மைச் சிறப்புக்களையும் திருவாரூர் மாவட்டம் ஏற்கெனவே பெற்றிருக்கிறது என்றாலும் கூட, அந்தச் சிறப்புகளெல்லாம் முனையளவும் குறையாத அளவிலே, அரசின் வழிகாட்டுதலோடும் அறிவுறுத்தலோடும் இம் மாவட்டத்தை நிர்வகித்து வரும் பெரும் பொறுப்பு எமக்கிருக்கிறது.

வளர்ச்சி பெற்றுவரும் புதிய மாவட்டம் என்பதால், எந்த ஒரு செயல்பாட்டு நடவடிக்கையிலும் மிகவும் நிதானத்துடன் நாங்கள் அளந்து அளந்தே அடியெடுத்து வைத்து வருகிறோம்.

## சட்டம் ஒழுங்கு

எந்த ஒரு மாவட்டமானாலும் சட்டம் -ஒழுங்கு மிகவும் கவனமாகப் பாதுகாக்கப்பட வேண்டும். மாநில நிர்வாகத்திற்கு மகுடம் போன்றது அது.

திருவாரூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை சட்டம் ஒழுங்கு சீராகவே உள்ளது. திருவாரூர், திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில், இருந்த முரடர்களின் அட்டகாசம், காவல்துறை அதிகாரிகளின் அதிரடி நடவடிக்கைகளால் குறிப்பிடப்படும் வகையில் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டுவிட்டது. ஆகையால், குற்றங்களும் கணிசமாகக் குறைந்துள்ளன.

முத்துப்பேட்டை கந்தூரி விழாவின்போது, முன்பெல்லாம் சட்டம் ஒழுங்கு நிலைமை பரிசோதனைக்கு உள்ளாகி வந்தது. அங்கேயும் இப்போது கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருக்கிறது. கூத்தாநல்லூர், திருத்துறைப்பூண்டி பகுதிகளிலும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏற்பட முற்பட்டபோது கூட, தீவிர நடவடிக்கை மேற்கொண்டு கட்டுப்படுத்தினோம். இதற்காக எல்லாத்தரப்பு மக்களுமே ஜாதி, மத பேதமின்றி மாவட்ட நிாவாகத்தைப் பெரிதும் பாராட்டினர்.

அரசியல் உணர்வுகள் அதிகமுள்ள குடவாசலில், அண்மைக்காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டமொன்றில் ஏற்பட இருந்த பெரும் சண்டையைக் காவல்துறை அதிகாரிகளே விரைந்து செயல்பட்டுத் தவிர்த்து, அமைதி நிலவச் செய்தனர்; பலருடைய போற்றுதலையும், புகழுதலையும் பெற்றனர்.

## வெள்ள நிவாரணம்

மாவட்ட நிர்வாகம், மக்களுடன் ஒன்றிச் செயல்படுகிறது. இதனால்தான் சென்ற ஆண்டு நவம்பா் மாதம் ஏற்பட்ட எதிர்பாராத மழைவெள்ளத்தின் போது, நானே நேரில் இந்த மாவட்டத்தில் பெரிதும் பாதிக்கப்பட்ட சுமார் எழுபது சதவீத கிராமங்களுக்குச் சென்று மக்களிடம் நேரடியாகவே குறைகளை, கண்டும் கேட்டும் அறிய முடிந்தது. ஏழை எளிய மக்களுக்கு ஏற்ற வகையில் உடனுக்குடன் உதவ - திறம்பட சக அதிகாரிகளோடு செயல்பட்டு மக்களைத் திருப்திப்படுத்த முடிந்தது. மழை வெள்ளத்தின்போது 350 உணவு மையங்கள் இப்பகுதியில் விரைந்து அமைக்கப்பட்டன. மக்களிடமிருந்து புகார் வரும்முன்பே அவர்கள் குறைநீக்கிட மளமளவென்று நாங்கள் செயல்பட்டோம்.

அந்த வெள்ளப்பெருக்கின்போது 29,734 குடிசைகள் திருவாரூர் மாவட்டம் முழுவதும் பாதிக்கப்பட்டன. 1,32,146 குடிசைகள் தண்ணீரால் சூழப்பட்டன; அவைகளுக்கான வெள்ள நிவாரணமாக ரூ. 6,93,77,800 செலவிடப்பட்டது.



*என்னைப் பெற்றது*
*திருக்குவளை ஆயினும்,*
*நான் உலகத்தைக் கற்றது*
*திருவாரூரில்தான்!*

- 2.8.92ல், 'முரசொலி' வெளியிட்ட கலைஞர் கடிதத்திலிருந்து.

பயிர்ச் சேதத்திற்காக மட்டும் ரூ.5,30,99,000 தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு, வழங்கப்பட்டது.

வெண்ணாறு பிரிவு (Vennar Division), பாசனப் பணிக்காக 1.46 கோடியும், காவிரி பிரிவு ரூ.54 இலட்சமும், மொத்தம் 2 கோடி ரூபாய் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகளைச் சரிசெய்து மேம்படுத்திட மட்டும் ரூ.1.1கோடி ஒப்பளிக்கப்பட்டு அதற்கான ஆக்கப் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன.



*திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர்*

**மாவட்டப் பெருந்திட்ட வளாகம்**

திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் விரைவிலேயே தனிப்பட்ட மாவட்டப் பெருந்திட்ட வளாகமாக அமையவிருக்கிறது.

இத் திட்டத்திற்காக 234.78 ஏக்கர் திருவாரூர் அருகில் உள்ள விளமல் கிராமத்தில் இடம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதில் 88.60 ஏக்கர் நிலம் கோயிலுக்குச் சொந்தமானதாகும். 146.18 ஏக்கர் தனியார் நிலம்.

நிலத்தைக் கையகப்படுத்தும் பணி முறைப்படி தொடங்கப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது.

இந்த வளாகத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், காவல்துறைக் கண்காணிப்பாளர் அலுவலகம், மாவட்ட நீதிமன்றம், மாவட்டக் கருவூலம், தமிழ் வளர்ச்சி அலுவலகம், நில அளவைப் பதிவேடு துறை, மாவட்ட வளர்ச்சி முகமை, குடிநீர் வடிகால் வாரியம், முன்னாள் இராணுவத்தினர் நலம் காப்பு அலுவலகம், சமூக நலத்துறை, நுகர்பொருள் வாணிபக் கழகம், ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்ககம், கல்வி ஆணையம், நூலக அலுவலகம், மாவட்ட விளையாட்டு அலுவலகம், கோட்டத் தீயணைப்பு இயக்ககம், மாவட்டத் தொழில் மையம், மாவட்டக் கூட்டுறவுத் துறை, மாவட்டக் கூட்டுறவு வங்கி, வணிக வரித்துறை, புள்ளியியல் துறை மற்றும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்படவிருக்கும் குடியிருப்புகள் எல்லாம் அடங்கும்.

இதற்கான நிலத்தைக் கையகப்படுத்தும் வகையில் மட்டும் ரூ.1.4 கோடி செலவாகும் என்று எதிர்பார்க்கிறோம்.

**திருவாரூர் நகர் வளர்ச்சி**

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தைப் போலவே, திருவாரூர் நகரின் மேம்பாட்டுக்கான பொது வளர்ச்சிக்கென ஒரு தனித்திட்டம் தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

**குடும்ப அட்டை**

நியாயவிலைக் கடைகளில், மக்கள் தேவையான உணவுப் பொருட்களைப் பெறப் புதிய முறையில் குடும்ப அட்டை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது அல்லவா? திருவாரூர் மாவட்டத்தில் குடும்ப அட்டை வழங்குவதற்கான ஆரம்பப் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கின்றது. அவற்றை அச்சிடும் பணி முடிவடைந்து, அட்டை தயார் செய்யும் பணிகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டிருக்கிறது. இப்பணியை 'எல்காட்' செய்துவிட்டது.

ஒரு மாதத்திற்குள் 2,60,000 குடும்ப அட்டைகள் விரைவில் மக்களுக்கு வழங்கப்படும். அதன்பின் எவ்விதச் சிக்கலும் இல்லாமல் மக்கள் உரிய குடும்ப அட்டைகள் மூலம் தட்டுப்பாடின்றி உணவுப் பொருட்களைப் பெறலாம்.

**மண்ணெண்ணெய் பங்க்**

பெட்ரோல், டீசல் பங்க்கைப் போலவே, மண்ணெண்ணெய் பங்க் அமைக்கும் பணியும் முடிவடைந்து திருவாரூர் மாவட்டத்தில் இப்போது நடைபெற்று வருகிறது.

மன்னார்குடி கோட்டத்தைப் பொறுத்து, அந்நகரிலும் கூட இத்தகைய ஒரு பங்கை அமைக்க இடம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

**தொழில்வளம் ஓங்கும்**

திருவாரூரைப் பாரம்பரிய நகரங்களில் ஒன்றாகச் சேர்த்துக்கொள்வதற்கான கோரிக்கையும் இப்போது தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளது.

அருங்காட்சியகம் ஒன்றையும் திருவாரூர் பெரிய கோயிலான தியாகராசர் கோயிலிலேயே அமைக்க உத்தேசித்திருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிறந்த சிறப்பினதான இந்த ஜூன் திங்களுக்குள் அழகிய வகையில் அது அமைக்கப்பட்டுவிடும்.

ஒரு மாவட்டத்தின் வளர்ச்சிக்குப் பெருந்தொழில்களின் வளர்ச்சி மிகவும் முக்கியமாகும். வேலை வாய்ப்பு, பொருளாதார மேம்பாடு போன்ற பல நன்மைகள் அதனால்தான் அமையும். ஆகவே, திருவாரூர் மாவட்டத்தைத் தொழில் வள்ர்ச்சியில் முன்னேற்றத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தொழில் தொடங்குவற்குத் தக்க பல சூழ்நிலையை உருவாக்கிட மாவட்ட நிர்வாகம் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

அதற்கு அடிப்படைத் தேவையான சாலை வசதிகள் ஏற்படுத்தப்பட்டு இப்போது மாவட்டச் சாலைகள் சிறந்த முறையில் அமைக்கப்பட்டு வருகின்றன. திருவாரூர், நீடாமங்கலம், திருத்துறைப்பூண்டி நகரப் பகுதிகளில் - போக்குவரத்து நெரிசல் இல்லாதிருக்க "பை-பாஸ்" சாலைகள் அமைக்கவும் திட்டமிட்டிருக்கிறோம்.

அடுத்துத் தேவைப்படுவது, மின்சக்தியாகும். புதிய மாவட்டம் என்பதால், தற்பொழுது சீராக இல்லாமல் இப்பகுதியில் மின்சாரமானது சற்று ஏற்றத்தாழ்வோடு இருந்துவருகின்றது. மிக விரைவில் இதைச் சரி செய்திடத் தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அடுத்ததாகத் தேவைப்படும் அடிப்படை வசதி தண்ணீர் ஆகும். பெருந்தொழில் தொடங்கினால் தேவைப்படும் அளவுக்கு நிறைய தண்ணீர் வேண்டியிருக்கும்; அதை அடுத்து மனித சக்திதான்; அதையும் பரிசீலித்து வருகிறோம்.

புதிய மாவட்டம் என்பதால் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை முன்நிறுத்தி, திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறோம்.

# திருவாரூர் மாவட்டம்

1. மக்கள்தொகை: (1991 கணக்கெடுப்பு)

| | | |
|---|---|---|
| ஆண் | - | 5,67,530 |
| பெண் | - | 5,61,002 |
| மொத்தம் | - | 11,28,532 |

| | | |
|---|---|---|
| வருவாய்க் கோட்டங்கள் | - | 2 |
| வட்டங்கள் | - | 7 |
| உள்வட்டம் | - | 27 |
| வருவாய் ஊர் | - | 575 |
| ஊராட்சி ஒன்றியம் | - | 10 |
| ஊராட்சி | - | 430 |
| நகராட்சி | - | 4 |
| பேரூராட்சி | - | 7 |
| சட்டப்பேரவைத் தொகுதிகள் | - | 7 |
| நாடாளுமன்றத் தொகுதிகள் | - | 2 |
| ரயில் சந்திப்பு நிலையங்கள் | - | 2 |




மன்னார்குடி அருகில் உள்ள கோவில் களப்பால் கிராமத்தில் 'கேஸ்' கிடைப்பதாக அறியப்பட்டுள்ளது. அதைக் கொண்டு திருமக்கோட்டையில், மின் உற்பத்தி செய்யலாமா என்றும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

ONGC யில் தேவைக்குமேல் கிடைக்கும் எரிவாயுவை வீட்டுச் சமையல் வேலைக்குப் பயன்படுத்தவும், தொழிற்சாலைகளில் பயன்படுத்தவும், திருவாரூரில் உள்ள வியாபாரிகளிடம் விருப்பம் கேட்கப்பட்டுள்ளது. ஆனால், அவர்களிடம் இதற்குப் பெரும் அளவில் ஆதரவு இல்லை; ஏனோ தயங்குகிறார்கள்.

'Gail' நிறுவனத்தார் தன் சொந்தச் செலவில் குழாய் மூலம் எரிவாயுவைக் கொண்டுவர முன்வந்துள்ளனர். ஒரு கிலோமீட்டர் குழாய் அமைக்க ரூ.15 இலட்சம் செலவாகும். பயனடைவோர்க்கு, மாதக்கட்டணம், சர்வீஸ் கட்டணம், போக்குவரத்துக் கட்டணம், பைப் அமைக்கும் செலவு போன்ற இனங்களின் செலவாகச் சில ஆயிரங்கள் ஆகும்.

கியாஸ் கட்டிங் தொழிற் கூடங்கள் வைத்திருப்போர் சிலர் இத்திட்டத்தின் மூலம் பலனடைய விண்ணப்பித்துள்ளனர். இது தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் என்ற முறையில் வணிகப் பெருமக்களைச் சந்தித்து, அதன் மூலம் கிட்டும் பலன்களை எடுத்துரைத்து இத்திட்டத்திற்கு ஆதரவு திரட்டிவருகிறேன்.

திருவாரூரில் எம்.ஆர்.எம்.குழாய் மூலம் தனிநபர் வீட்டிற்கும் அதைக் கொண்டுவரும் திட்டமும் உள்ளது.

### ஆலைகளும் சாலைகளும்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், 262 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை அமைத்து, சம்பா பயிரில் மட்டும் 2,95,000 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்து சாதனை படைத்துள்ளது.

திருவாரூர் மாவட்டத்தில், திருவாரூரிலும், சுந்தரக்கோட்டையிலும், நவீன அரிசி ஆலைகள் நன்முறையிலே இயங்கிவருகின்றன.

புதிய மாவட்டங்கள் தொடங்கியதில் - திருவாரூரைப் பொருத்தவரை தொடக்கத்திலிருந்தே வெகுசிறப்பான வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், மற்ற சில முக்கிய அலுவலகங்கள், தேசியத் தகவல் மையம் (NIC-NET) ஆகியவைக்கு உடனடியாக இடம் ஒதுக்கப்பட்டு, நிர்வாகம் செம்மையாகச் செயல்பட்டு வருகின்றது.

திருவாரூர் தனி மாவட்டம் ஆக்கப்பட்டபின், உடனடியாகச் சாலைப்பணிகள் பெரும் அளவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. முக்கியச் சாலைகள் முதல் கட்டமாகச் சிறப்பாக அமைக்கப்பட்டு வருகின்றன. இணைப்புச் சாலைகளுக்கும், இப்பகுதியில் முதன் முதலாக மைய சுடுகளவை இயந்திரம் மூலம் தார் மற்றும் ஜல்லிக்கலவை தயார்செய்து லாரிகள் மூலம் எடுத்துச்சென்று நவீன முறையில் சாலைகள் போடப்பட்டுள்ளன.

### மக்கள் குறை கேட்பு

மக்கள் குறை கேட்கும் நாள், வாரந்தவறாமல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலே நடத்தப்பட்டு வருகிறது. ஆர்வத்தோடு அதற்காகவே வருகை தரும் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள், உடனுக்குடன் பரிசீலிக்கப்பட்டு, தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அப்படி வரும் மனுக்களில் 50 சதவீதம், தங்கள் சொந்தக் காரணங்களுக் கானவைகளாகவே இருக்கின்றன. எனினும், உடனுக்குடன் மனு மீது அவ்வப்போது உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதால், ஒரே காரணத்திற்காக இரண்டாவது முறை மக்களால் மனு செய்யப் படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகவே, மிகவிரைவிலேயே, தமிழகத்தில் உள்ள குறிப்பிடத்தக்க வளர்ச்சி பெற்ற மாவட்டங்களில் முதலிடம் வகிப்பதாகத் திருவாரூர் மாவட்டம் திகழ்ந்திடப்போவது உண்மை - வெறும் புகழ்ச்சியில்லை!



# பரவசமூட்டும் பழைய நினைவுகள்

**இராம. அரங்கண்ணல்**



சிரித்த முகத்தோடு நகைச்சுவையாகப் பேசும் நண்பர் தென்னனோடு தென்படுவார் என் சகோதரர், திருவாரூரில் சிலபல ஆண்டுகளுக்கு முன்பு! அந்தச் சகோதரர் 'குடியரசோ' 'திராவிட நாடோ' 'பச்சையட்டைப் பகுத்தறிவோ' தான் இருக்கும் கலைஞரது கரங்களில்!

சுயமரியாதைக்காரர்கள் என்றால் உறவினர் உள்பட ஊரார் எல்லாம் முகஞ்சுளித்த காலம். நமக்கென்று ஒரு மரியாதையே கிடையாது என்று அலட்சியப்படுத்தப்பட்ட நாட்கள் அவை. அணாக்கள்தான் பையில் இருக்குமேயொழிய ரூபாய் நோட்டுகளைப் பார்க்கமுடியாத வயது. பத்தாவது வரை படித்த பிள்ளை ஏதாவது உத்யோகத்தைத் தேடக்கூடாதா என்பது அக்காக்களின் கவலை. 'எங்கே கூட்டம்?', 'எப்போது நாம் கூட்டம் போடலாம்!' என்பதே இலட்சியமாகச் சுற்றுவார், கலைஞர்!

'முரசொலி' எனும் பெயரில் திங்களுக்கொரு 'பிட் நோட்டீஸ்' போட்டு ஊரெல்லாம் வழங்குவார்; தமிழ் நாடெங்குமுள்ள முக்கியமானவர்களுக்குத் தபாலிலும் போகும். அச்சடிக்கவும் தபால் செலவுக்கும் எப்படியெப்படியெல்லாம் நிதி வசூல் செய்தார்கள் என்பதை எண்ணினால் ரசமான காட்சிகளாகக் கண்முன் வருகின்றன அவை! சூடுபறக்கும் 'முரசொலி'யில். அப்போது, சிதம்பரம் கோயிலில், ஏதோ ஒரு விழா. என் சகோதரர் எழுதினார், முரசொலியில் படிப்போர் ரசிப்பர். நடையழகு அப்போதே மிளிரும். இன்றைய 'விடுதலை' ஆசிரியர் தோழர் கி.வீரமணி - அன்று சிறுவர் - அதை அப்படியே படித்து ஒப்புவித்துக் கைத்தட்டுதலைப் பெறுவார், பல மேடைகளில் அன்று.

கூட்டங்கள் நடத்த வசூலுக்குச் செல்வார் இவர். காங்கிரஸ்காரனாயிருந்து அவருடைய சகோதரனாக ஆனபிறகு நானும் செல்வேன். ஆரூரில் ஒரு பணக்காரர். நீதிக்கட்சிக்கு மிகவும் வேண்டியவர். "ஒரு ரூபாயாவது எப்படியும் கொடுப்பார்!" என்பது துணிச்சல்காரரான தென்னன் கணக்கீடு. போனோம் அவரிடம்.

நோட்டை நீட்டினார் என் சகோதரர். அந்தப் பெரிய மனிதர் நாலணாவைக் கொடுத்துக் கையெழுத்திட்டார். என் சகோதரருக்கு எப்போதுமே தன்மான உணர்வு அதிகம். அப்போதைய நிலையில் நாலணாகூடப் பெரிதுதான்! ஆனால் அதை வாங்க மறுத்துவிட்டு, வெளியே வந்தார். வெளியே, அந்தப் பெரிய மனிதருடைய பேத்தி - சிறுமி - ஒரு சிறிய பையை எடுத்துநீட்டி, தான் 'சேர்த்தது' இருப்பதாகவும் எடுத்துக் கொள்ளும்படியும் சொன்னார். இன்றும் மறக்க முடியவில்லை - நமதியக்கம் எப்படியெல்லாம் வளர்க்கப்பட்டது தெரியுமா என்பதை எண்ணும்போது!

டாக்டர் விசயராகவனின் 'ராயல்' சோடாக்கடை! நிழலுக்கு அதுதான் எங்கள் இருப்பிடம். ஏதாவது கூட்டம் என்றால் அங்கிருந்துதான் மேசையும் நாற்காலியும் கிடைக்கும். என் சகோதரர், எங்களைப் போன்றோர் உதவியுடன் தானே தூக்கிச் சென்று போடுவார். ஒரு கூட்டம் நடத்தியதும் ஏதோ பெரிய இலட்சிய சித்தி பெற்றவர் போல் மகிழ்ச்சியடைவார். அப்படியெல்லாம் இந்த இயக்கம் வளரப் பாடுபட்டவர் என்பதால்தான் இன்றும் அந்த வேகத்தைக் காண்கிறோம், கழகம் வளர்ப்பதில் கலைஞரிடம்!

ஒரு சமயம், திருவாரூருக்கு அருகாமையிலுள்ள நன்னிலத்துக்குப் பக்கத்தில் ஒரு கிராமத்தில் கூட்டம். சகோதரர் ஒரு தோழரோடு போயிருந்தார். (அவருக்கு அண்ணன் தம்பி கிடையாது! அதனால்தான் போலும் எப்போதும் பார்த்தாலும் யாராவதுகூட இருக்கவேண்டியிருக்கிறது!). கூட்டம் முடிந்ததும் 'வணக்கம்' சொல்லி அனுப்பிவிட்டார்கள் தோழர்கள். கூட வந்தவரிடம் ரயிலுக்குக் காசு இருக்கும் என்பது இவர் நினைப்பு. 'இவ்வளவு அருமையாகப் பேசிய இவனை சும்மாவா அனுப்பியிருப்பார்கள். வழிச்செலவுக்குப் பணம் கொடுத்திருப்பார்கள், என்பது நண்பரின் கணிப்பு.

இரயிலடிக்கு வந்து 'டிக்கெட்'டுக்காகச் சென்றபோதுதான் இருவர் பையும் காலி என்பது ஒருவருக்கொருவர் புரிந்தது. நேரமோ இரவு! இரயில் வர இன்னும் ஒரு மணி இருந்தது. இரண்டு பேரும் சட்டைப் பையில் எவ்வளவு காசு இருக்கிறது என்று தடவினால், இரண்டு பேருக்கும் வேண்டிய டிக்கெட்டை வாங்க ஒரே ஒரு காலணா குறைகிறது. என்ன செய்வது? அந்த நள்ளிரவில் நண்பர்களிருவரும் ரயில் வருவதற்குள் அடுத்த ஸ்டேஷக்கு நடந்துவந்து, ரயிலேறி ஊருக்கு வந்தார்கள்.

என் சகோதரர் கலைஞருக்குத் திருமணம். எங்களுக்கெல்லாம் குதூகலம். சிதம்பரம் இசைமேதை ஜயராமன் அவர்களின் தங்கை, என் சகோதரி, பத்மாவுக்கும் இவருக்கும். சினிமாவில் மட்டுமின்றி சங்கீதத் துறையிலும் பெயர் பெற்ற சி.எஸ்.ஜயராமனுக்கு 'இவர்' மைத்துனராகிறார் என்பதில் நண்பர்களான எங்களுக்குத் தனி ஆனந்தம். ஓடி ஓடி ஒவ்வொரு அச்சகமாகத் தேடிப் பலர் வாழ்த்துப்பாக்களைத் தயாரித்தோம். அதே நாளில் 'சி.எஸ்.ஜே'க்கும் திருமணம்.



ஒரு பக்கத்தில் அப்பரோடு அவர் மணம்; இன்னொரு பக்கத்தில் எங்களோடு இவர் திருமணம். அங்கே 'வெள்ளி' மயமான அன்பளிப்புகள்! இங்கே அச்சடித்த எங்கள் வாழ்த்துக்கள்தான் அன்பளிப்புகள்!! இரவு, கலைவாணர் என்.எஸ்.கே.யின் 'கிந்தனார்' காலட்சேபம். தாங்கமுடியாத கூட்டம். எங்க 'மாப்பிள்ளை' எங்கேயிருந்து கேட்டார் தெரியுமா? எங்களோடு எதிர்த் திண்ணையில்!!

'இவர்' வீட்டுக்கு அடிக்கடி போவேன். ஒருநாள் கூட இவரைப் பார்க்காமலிருக்க முடியாது. தொடர்பு கொண்டவரைத் தொத்திக் கொள்ளச் செய்யும் வசீகரம் இவருடையது! அப்போதெல்லாம் இவரது துணைவியார் எனது சொந்தத் தங்கைபோல ஒரு பிரமை எனக்கு. சொந்த வாழ்வில் எனக்குச் சகோதர சகோதரிகளே கிடையாது. அதனால்தான் இவர் என் சகோதரரானார். இவரது துணைவியான என் தங்கை இறந்த செய்தி சென்னையில் 'விடுதலை' துணை ஆசிரியனாகயிருந்த எனக்குக் கிடைத்தபோது நான் விம்மி விம்மி அழுதேன்! இவரைப் போய் திருவாரூரில் பார்த்து நான் தேறுதல் சொல்லச் சென்றபோது...அப்பப்பா! வாழ்க்கையின் எல்லாக் கொடுமைகளையும் கண்டவர் என் சகோதரர் கலைஞர்.

எனது இன்னொரு தங்கையாக விளங்கும் தயாளு அவர்கள் மட்டும் அச்சமயம் இவருக்குத் துணைவியாக வாய்க்காமலிருந்திருந்தால்...? மனிதனை வெற்றி வீரனாக ஆக்குவது அவனுக்கு வாய்த்த மனைவியைப் பொறுத்தது என்பார்கள். என் சகோதரர், 'கொடுத்து வைத்தவர்'. இன்று, எது கேட்டாலும், இவருக்குக் காலடியில் விழும்! ஆனால் அன்று...சுட்ட நாட்கள்...கொட்டிய வினாடிகள்...வாழ்க பல்லாண்டு என் தங்கை...சுமங்கலியாக...என்று மனதார வாழ்த்துகிறேன்.

## தமிழே உயிர்

| | | | |
|---|---|---|---|
| அன்னைத் | தமிழின் | அரிய | செல்வன் |
| ஆன்ற | மதிநிறை | அஞ்சா | நெஞ்சன் |
| இன்பம் | நல்கும் | வெற்றிகள் | குவித்தோன் |
| ஈன்றாள் | புகழுறச் | செயலால் | உயர்ந்தோன் |
| உலகோர் | மெச்சும் | உரைநடை | தந்தோன் |
| ஊழ்வினைக் | காப்பியம் | ஒளிபெற | வடித்தோன் |
| எங்கும் | தமிழ்மணம் | பரப்பி | மகிழ்வோன் |
| ஏங்கிய | பாரதி | கனவை | முடித்தோன் |
| ஐதிக | உலகில் | புரட்சி | விளைத்தோன் |
| ஒத்துக் | கொள்ளும் | புதுமை | படைத்தோன் |
| ஓர்குலம் | தமிழினம் | ஓங்குக | என்றே |
| ஔவை | மண்ணில் | அயரா | துழைப்போன் |

நம் கலைஞர் - அவர்

வாழ்க! நலமாய்!! வாழ்க! வளமாய்!!

வாழ்க! தமிழுயிர்!! வாழ்க! வாழ்கவே!!

- முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

குடும்பமே இவருக்காகத் தானிருந்தது. இரண்டு சகோதரிகள் - அப்பா, அம்மா - செல்லப்பிள்ளையான இவர்! இவரது தந்தையார் நாங்கள் நண்பர்களானபோது நோய்வாய்ப்பட்டிருந்ததால் எனக்கெல்லாம் அதிகம் பரிச்சயம் கிடையாது.

ஆனால் இவரது அம்மா? 'கோமல் தம்பி' என்று கன்னத்தில் குழிவிழச் சிரித்தபடி என்னை அழைக்கும்போது பாசமும் அன்பும் வழியும். அதேபோலத்தான் அக்காக்களும். அரசியலைத் தொழிலாக எண்ணுவோரும் உண்டு. பட்டும்படாமலும் நடந்துகொள்வார்கள். ஆனால் இவரது குடும்பம், இவரைச் சேர்ந்த எங்களையெல்லாம் சொந்தத் தம்பிகளாக ஆக்கிக் கொண்டதாகும். இந்தப் பாசம்தான், 'இவர்' மீது சில சமயம் எனக்கெல்லாம் கோபம் வந்தாலும், உடனே ஓடிப்போகச் செய்துவிடுகிறது. தம்பி மாறன் - அவர் தம்பி செல்வம் - அமிர்தம் - இவரது பிள்ளைகள் எல்லாம் 'கழகம், கழகம்' என்றல்லவா இருக்கின்றன?

இப்படியொரு குடும்பம் தமிழக அரசியல் வரலாற்றில்! இப்படிக் குடும்பமே கொள்கைக்கூடம் ஆனதால்தான், என் சகோதரரும் உலகத் தலைவரானார்.

இதெல்லாம் பழைய நினைவுகள்! குறித்து வைக்காவிடில் காலத்தோடு அழிந்துவிடுமேயென்று எழுதினேன். எல்லாத் தகவல்களையும் எழுதுவதென்றால், பெரிய நூலாகிவிடும். ஆனால் அந்தநூல், வளரும். கழகத் தோழர்கள் ஒருவருக்கொருவர் எப்படிப் பழகவேண்டும் என்பதற்கான விளக்கவுரையாக நிச்சயம் அமையும்.

சாதாரண 'மு.க.' எப்படி இவ்வளவு பெரிய தலைவரானார்? அன்பு - அனைவரையும் சகோதரர்களாக்கிக் கொள்ளும் பண்பு - குடும்பத்தாராக எண்ணும் குணம் - இயற்கையாக இவருக்கென்று வாய்த்த திறமை - திறமையைத் தூங்கப் போடாமல் பம்பரம் போலப் பணியாற்றும் உணர்ச்சி...இவைதான் என்பது என் கருத்து. இதே உணர்வு மட்டும் எல்லோருக்கும் ஏற்பட்டுவிடுமானால், நமது கழகத்தை அழிக்க எந்தச் சக்தியாலும், இயலாது.

இன்று இவர் முதலமைச்சர் - எட்டாத நிலாவெனக் கருதப்பட்ட இந்தியத் தலைவர்கள் இவர் கருத்தைக் கவனத்தோடு கேட்கிறார்கள் - வெளிநாட்டுத் தூதுவர்கள் இவர் 'பேட்டி'க்காகக் காத்திருக்கிறார்கள் - அதிகாரிகள் ஆலவட்டம் சுற்றுகிறார்கள்...ஆனாலும் இவர் நம்மோடுதான் இருக்கிறார்! நம்மில் தான் மகிழ்ச்சி காண்கிறார்!!

தமிழ்நாடு இவரைக் கண்டு பூரிக்கிறது. என் போன்றோர், இவரால், பூரிப்படைகிறோம். ★

### அட்டைப்பட விளக்கம்

**முதல் பக்க அட்டை :**

தமிழ்த்தென்றல் திரு.வி.க., பேராசிரியர் கல்கி நூல்களை அரசுடைமையாக்கி அவர்களது குடும்பத்தாருக்குப் பரிவுத் தொகை வழங்குதல் மற்றும் சிவகங்கையில் அரசு வளர்ச்சித் திட்டங்கள் தொடக்க விழா - நலத்திட்ட விழா - நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா (17.5.98).

**கடைசிப் பக்க அட்டை:**

திருவாரூர் ஆழித்தேர்



# எங்கள் ஊர்ச் சிங்கம்

## ஆரூர் தாஸ்

திருஆரூரான் ஆன தியாகேசப்பெருமானை வழிபடுவதற்காக வந்த சைவ சமயக்குரவர் நால்வருள் ஒருவரான திருஞானசம்பந்தர் ஆலயத்தின் ஒரு கோபுரத்தில் ஏறி உச்சியில் நின்று நான்கு திசைகளிலும் தன் பார்வையைச் சுழலவிட, விழிகளுக்கு எட்டிய தூரம் பசும் பச்சைப்படுதா விரித்தாற் போன்று நெற்பயிரைக்கண்டு வியந்து பரவசமுற்று, 'அன்னவயல் சூழ்ந்த ஆரூரான்' என்று ஈசனைப் போற்றிப் புகழ்ந்து துதித்திருக்கின்றார்.

நெல்வயல் - கரும்புவயல் என்று தான் கூறுவது வழக்கம்.

'சோற்றுவயல்' என்று சொன்ன தமிழ், சம்பந்தருடையது!

சோழ வளநாடு சோறுடைத்து!

திரு + ஆர் + ஊர்.

ஆர் என்ற சொல், அழகு, ஆத்திமரம், சரக்கொன்றை. பூமி, செவ்வாய் எனப் பல்வேறு பொருள்படுகின்றது.

அழகிய பூமியான ஊர் என்பதனாலோ, அழகுமிகு ஆத்தி மரங்கள் - சரக்கொன்றை, நிறைந்த ஊர் என்பதனாலோ திருஆரூர் என்று பெயர்பெற்று, நாளடைவில் திருவாரூர் என வழங்கப் பெற்றிருக்கிறது!

அத்தகைய அழகு நிறை ஆரூரைத் தலைநகரமாகக் கொண்டு, 'கடல்கிழக்கு, வெள்ளாறு தெற்கு, கோட்டைக்கரை மேற்கு, ஏணாடு வடக்கு, இருபத்து நாற்காதம் எல்லையாகக் கொண்ட பூமியும், தென்னிந்தியாவின் பெரும்பாகமுமான சோழ நாட்டை மங்காப்புகழ் படைத்த மனுநீதிச் சோழன் ஆண்டான்!

நீதிவிசாரணை அழைப்பிற்கென்றே அரண்மனைக்கு வெளியில் 'ஆராய்ச்சி மணி' கட்டி ஆட்சி செலுத்திய மாண்பு, மனுநீதிச் சோழ மன்னனுக்கு மட்டுமே உரித்தானது!

கன்றை இழந்து கண்ணீர் மல்கிய ஒரு காராம் பசுவிற்கு நீதி வழங்குவதன் பொருட்டு - அதற்குக் காரணமான தன் மகனையே சக்கரத்தின் அடியில் இட்டு, தானே அமர்ந்து தேரினைச் செலுத்தி, கோணாத கோலுக்கும், தாழாத குடைக்கும், சாயாத சிங்காதனத்துக்கும் பெருமை சேர்த்தான் அப் பெருமன்னன்!

அதன் சின்னமாக ஒரே கருங்கற்பாறையில் செதுக்கப்பெற்ற 'கல்தேர்' இன்றைக்கும் வடக்கு வீதியின் கண் இருக்கக் காணலாம்.

அக்காலத்தில், தெற்குவீதியின் மேலக்கோடியில், அரண்மனை இருந்த இடத்தின் ஒரு பகுதியில், பிற்காலத்தில் நகராண்மைக் கழகமும் தொடக்கப் பள்ளியும் அமையப்பெற்றன.



விஜயாலய சோழன் ஆரூரை ஆட்சி புரிந்ததன் நினைவாக, அழகிய ஓடம் போக்கி ஆற்றைக் கடந்த தென்பகுதி 'விஜயபுரம்' என வழங்கலாயிற்று.

ஓடம்போக்கி ஆறு!

தோண்டத்தோண்ட பொன்னும் வைரமுமாக மின்னும் வண்டல் மண்ணையன்றி துளியும் கல்லே காணமுடியாத ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தின் மையப்பகுதியான திருஆரூரில்,

தியாகேசனுக்குத் திருக்கோயில் எழுப்புவதற்கென, தஞ்சைக்கு மேற்குப் பகுதியில் பெயர்த்தெடுக்கப்பட்ட பெரியபெரிய கருங்கற் பாறைகளை ஆரூருக்குக் கொண்டு வருவதற்காகவும், அதேசமயம் பாசன வசதிக்காகவும் திட்டமிட்டு வெட்டப்பெற்ற வெட்டாற்றின் ஒரு கிளை நதி வழியே ஓடங்களில் அக் கருங்கற்பாறைகளை, ஏற்றி வந்த காரணத்தால், அந்த ஆறு 'ஓடம்போக்கி' என்று பெயர் பெற்றது!

பலருக்கு அவர்களது ஊரினால் பெருமை! சிலரால்தான் ஊர் பெருமை பெறுகின்றது!

அந்த வகையில் - தன் ஊருக்குப் பெருமை சேர்த்தவர் தமிழகத்தின் முதல்வரும், தமிழ்த்தாயின் தவப் புதல்வருமான நமது கலைஞர் மு.கருணாநிதி அவர்கள்!

ஒரு மனிதன் கொண்டிருக்க வேண்டிய அனைத்துப் பாசங்களிலும், மூன்று பாசங்கள் மிக முக்கியமானவை.

**தாய்ப்பாசம்!**

**தாய்மொழிப் பாசம்!**

**தன் ஊர்ப்பாசம்!**

இம்மூன்று பாசங்களையும் முழுமையாகக் கொண்டவர் நமது முதல்வர்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" - என்ற புறநானூறு கூற்றுக்கு உட்பட்டவராயிருந்தாலும்

திருவாரூரின் தென்கிழக்கே, அவர் பிறந்த திருக்குவளை!

மேற்கே, அவரது அருமை அன்னையார் அஞ்சுகம் அம்மையார் நினைவிடமும், அவர் வயிற்றுக்குச் சோறு வழங்கும் நிலமும் அமைந்துள்ள காட்டூர்!

வடக்கே, நஞ்சை நிலங்களிலேயே முதல்தர நல்ல நிலங்களைக்கொண்ட ஊரான நந்நிலம் - அதாவது நன்னிலம்!

தெற்கே ஊரின் எல்லையான புலிவலம்! இவற்றிற்கு இடைப்பட்ட எங்கள் அழகிய ஊரின் கலைமண்ணில், அவரது காலடிபடாத அங்குல இடம் கூட கிடையாது எனலாம்.

கூட்டங்களில் பேசுவதற்காக, கொள்கையைப் பரப்புவதற்காக, கொண்டிருக்கும் நண்பர்களின் மங்கல விழாக்களில் கலந்துகொண்டு தன் புதிய தமிழைப் பொழிவதற்காக.

சுற்றிச்சுற்றி அலைந்து திரிந்தவர் அவர்! அறிவும், ஆற்றலும், ஆர்வமும், ஆளுந்திறனும், எழுத்தில் அழுத்தமும், சொல்லில் வன்மையும் ஒருங்கே அமையப்பெற்ற, அகவை எழுபத்தைந்தைத் தொடும் -

என்றும் இளமை குன்றாத ஒரு அற்புதப் பிறவியைத் தன் மண்ணின் மைந்தனாகக் கொண்ட எங்கள் ஊர் மாண்புமிக்கதல்லவா!

உருக்கினால் உருவாகி, பழுக்கக் காய்ச்சப்பட்ட பரிமேல் அமர்ந்து, 'அழகர்' என்ற அருந்தமிழ்ப் புலவர், அரசர் முன்னிலையில் திருக்குறளுக்கு உரைசெய்து, 'பரிமேலழகர்' என்று பெயர் பெற்றதாகப் படித்திருக்கின்றேன்.

இந்தியத் திருநாடு விடுதலைபெற்ற இந்த ஐம்பது ஆண்டுகளில், நம் தமிழகத்தில், இதற்கு முன்பு ஆட்சிபுரிந்த எந்த ஒரு முதல்வரும் இப்படி ஒரு கடினமான காலக்கட்டத்தைக் கண்டதில்லை - என்று கூறும் அளவுக்கு, மோசம், வஞ்சகம், சூழ்ச்சி, துரோகம் ஆகிய கொடிய தீ நாக்குகள் சுற்றிச்சுழல, அவற்றின் நடுவில் அமர்ந்து நிலைகுலையாமல், நெஞ்சுரத்துடன் ஆட்சி செலுத்தும் எங்கள் அருமைக் கலைஞரை எந்தச் சிறப்புப் பெயரால் அழைப்பது?

நட்டம் வந்தாலும் வரட்டும் என்று திட்டம் போட்டு நிறைவேற்றும் துணிவு கொண்ட அவருக்குப் பட்டம் என்ன சூட்டுவது?

தமிழகத்திற்குக் கிடைத்த இந்தத் தங்கம் - 'எங்கள் ஊர்ச் சிங்கம்' என்று கூறிக்கொள்வதில் எனக்குக் கொள்ளை மகிழ்ச்சி! பெருமை! ஏன்? சற்றுக் கர்வமுங்கூட!

பவளவிழாக் காணும் நமது முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ வேண்டுமென வாழ்த்தி வணங்குகிறேன்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

## பாவேந்தர் காட்டும் திருவாரூர்

❑ *தண்பொழிலில் குயில்பாடும் திருவா ரூரில்*
*தமிழ்நாடு தமிழ்மாண வர்மன்றம் காண்!*
*வண்மையொடும் உண்மையொடும் வாழ்ந்திடும் காண்!*

❑ *மக்களிடை எழுச்சிக்கு மருந்தா கும்காண்!*
*கண்மூடிக் குறிமறந்து தமிழர் தங்கள்*
*கலைமறந்த நெஞ்சத்தில் ஒளிஎய்தும் காண்!*

❑ *புண் வாய்ந்தோர் அல்லர்காண்! திருவா ரூரின்*
*புலிஇளைஞர் காண்! தோள்கள் பூரித்தார்காண்!...*



- பள்ளிப் பருவத்தில், கலைஞர் திருவாரூரில் அமைத்து நடத்திய தமிழ் மாணவர் மன்றத்திற்குப் **புரட்சிக் கவிஞர்** எழுதிய வாழ்த்துப்பாவில் இருந்து.

## திருவாரூர் மாவட்டம்

# வளர்ச்சிப் பாதையில்



நிர்வாக வசதிக்கெனத் தமிழகத்தில் உள்ள சில பெரிய மாவட்டங்கள் பிரிக்கப்பட்டன; 1.1.1997-ல், முதலமைச்சர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட திருவாரூர் மாவட்டம், பெறற்கரும் பெருமை பெற்றதாகச் சிறப்படைந்து வருகிறது.

இம்மாவட்டத்தில் அங்கிங்கெனாதபடி எங்கும் ஆக்கப்பணிகள் அடுக்கடுக்காகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.ரா.மோகன், மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி சோமதுமதி ஆகியோரிடம், அவை பற்றிக் கேட்டறிந்து . இங்கே பாங்குறப் பட்டியலிட்டுக் காட்டப்படுகின்றன!

**அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்**

திருவாரூர் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் திருவாரூர், மன்னார்குடி, வலங்கைமான் மற்றும் திருத்துறைப்பூண்டி ஆகிய நான்கு ஒன்றியங்களில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் சிறப்புறச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் விவரம் வருமாறு:

**திருவாரூர் ஒன்றியம் - புலிவலம் கிராமம்**

புலிவலம், காந்திநகர், திரு.வி.க. நகர், திருவாசல் தெரு, விளவனம் படுகை, தனிக்கொண்டான் இருப்பு, விஷ்ணுதோப்பு - ஆக மொத்தம் 7,376 மக்கள் தொகை கொண்ட குக்கிராமங்கள்.

**வலங்கைமான் ஒன்றியம் - கோவிந்தகுடி கிராமம்**

கோவிந்தகுடி, நெடுவாசல், வாணியக்கரம்பை - ஆக மொத்தம் 4,646 மக்கள்தொகை கொண்ட மூன்று குக்கிராமங்கள்.



**மன்னார்குடி ஒன்றியம் - பரவாக்கோட்டை கிராமம்**

பரவாக்கோட்டை, ராஜசாம்பாள்புரம், குடிகாடு, கருவேப்பிலை நத்தம் - ஆக மொத்தம் 8,337 மக்கள்தொகை கொண்ட நான்கு கிராமங்கள்.

**திருத்துறைப்பூண்டி ஒன்றியம் - தில்லைவிளாகம் கிராமம்**

தில்லைவிளாகம், கீழக்கரை, மேலக்கரை, மேலக்காடு, துரைத்தோப்பு, அமரங்காடு, தில்லை தெற்குப்பகுதி 6, தெற்குப்பகுதி 7, ஓமன்காடு, கழுவன்காடு ஆக மொத்தம் 7,039 மக்கள்தொகை கொண்ட 11 குக்கிராமங்கள் தோறும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்ட அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் அற்புதமாகச் செயல்படுத்தப்படுகிறது.

இந்த இணையற்ற திட்டத்திற்கெனத் தில்லைவிளாகத்திற்கு ரூ.24.58 இலட்சமும், பரவாக்கோட்டைக்கு ரூ.28.30 இலட்சமும், கோவிந்தகுடிக்கு ரூ.15.77 இலட்சமும், புலிவலத்திற்கு ரூ.25.04 இலட்சமும் மொத்தம் ரூ.93.69 அரசின் சிறப்பு நிதியாக அளிக்கப்பட்டு, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ரூ.283.33 இலட்சத்தில் செயலாக்கம் பெற்றுவருகின்றது.

இத்திட்டத்தின்மூலம், குடிநீர் வசதி, கல்வி, பொதுச்சுகாதாரம், சத்துணவு, குடியிருப்பு, கிராமச்சாலைகள், பொது விநியோகம், சமூகநலன், நிலப்பட்டா வழங்குதல் - ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், ஆதி திராவிடர் - பழங்குடியினர் மயான சாலை வசதி, கூட்டுறவு சங்கக் கடன் வசதி, பொருளாதார

முன்னேற்றத் திட்டம், தொலைபேசி மற்றும் துணை அஞ்சல் நிலைய வசதி, பொது நூலகம், படிப்பகம் மற்றும் பொதுத்தொலைக்காட்சிப் பெட்டிக்கெனத் தனி அறை, கழிவு நீர் வடிகால் வசதி, மத்திய கிராமப்புறச் சுகாதாரத் திட்டம், மதுவிலக்கு, குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு, சிறுசேமிப்பு, தனிநபர் வீடுகளுக்குச் சுகாதாரக் கழிப்பிடம், மரம் வளர்ப்பு போன்ற 21 அம்சங்கள் நிறைவேற்றப்பட்டு - சாதாரணக் கிராமங்கள் கூட நகரங்களுக்கு இணையாக எல்லா வசதிகளும் பெற்றதாகப் பெருமை பெறும்.

### சமத்துவபுரம்

திருவாரூர் மாவட்டத்தில் சமத்துவபுரம் திட்டத்தை நிறைவேற்றிட இரண்டு கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. திருவாரூர் வட்டத்தில் அலிவலம் கிராமத்திலும் மன்னார்குடி வட்டத்தில் நொச்சியூர் கிராமத்திலும் சமத்துவபுரம் அமைக்கப்படும். இரண்டு கிராமங்களிலும் தலா 10 ஏக்கர் புறம்போக்கு நிலம் இதற்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. அலிவலம் கிராமத்தில் பயனாளிகளும் கூட தகுதியினடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு விட்டனர்.

### நமக்கு நாமே

திருவாரூர் மாவட்டத்தில் மொத்தம் உள்ள 10 ஊராட்சி ஒன்றியங்களில் ஒன்றே ஒன்று தவிர 9 ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கின்ற 32 கிராமங்களில் நமக்கு நாமே திட்டம் நல்லமுறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. அவற்றில் எடுத்துக்கொண்ட பணிகளின் எண்ணிக்கை 42.

மக்களின் பங்குத்தொகையாக ரூ.8,09,935ம் அரசின் பங்காக ரூ.18,93,315ம் சேர்த்து மொத்தம் ரூ.27,03,250ல் நமக்குநாமே திட்டம் நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது.

### வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்

- ★ திருவாரூர் மாவட்டத்தில் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தில் 1997 - 98 நிதியாண்டில் 116 சாலைப் பணிகள் ரூ.457.882 இலட்சம் ஒதுக்கீட்டில் எடுக்கப்பட்டு, மொத்தம் 154.46 கி.மீ. தூரம் சாலை போடப்பட்டிருக்கிறது.
- ★ ரூ.186.48 இலட்சம் செலவில் 38 பள்ளிக் கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.
- ★ ரூ.49.48 இலட்சம் செலவில் 38 நியாய விலைக்கடைகள் அமைக்கப்பட்டன.
- ★ 79 சத்துணவுக்கூட சமையல் அறைகள் ரூ.23.65 இலட்சம் செலவில் கட்டப்பட்டன.



- ★ 9 சிறுபாலங்கள் ரூ.5.68 இலட்சம் செலவில் கட்டப்பட்டன.
- ★ 7 சத்துணவு மையப்பணிகள் ரூ.9.88 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன.
- ★ 27 பள்ளிகளில் கழிவறைகள் ரூ.4.26 இலட்சத்தில் கட்டப்பட்டன.
- ★ 6 கால்நடை கிளை நிலையங்கள் ரூ.6.98 இலட்சத்தில் உருவாக்கப்பட்டன.
- ★ ரூ.7.58 இலட்சம் செலவில் 5 ஊராட்சிக் கட்டடங்கள் கட்டப்பட்டன.
- ★ ரூ.4.58 இலட்சத்தில் 5 தடுப்புச்சுவர் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
- ★ 4 அங்கன்வாடி கட்டடப் பணிகள் ரூ.3.96 இலட்சம் ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டன.

- இவற்றுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்தப் பணிகள் 334 ஆகும். ஒதுக்கப்பட்ட தொகை ரூ.679.852 இலட்சம்.

### மக்கள் நல்வாழ்வுத் திட்டப்பணிகள்

கூடுதலாக 48 படுக்கைகள் கொண்டதாகத் திருவாரூர் அரசு மருத்துவமனையை விரிவாக அமைக்க ரூ.1.255 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இதில் விபத்து அவசரகால உதவி வார்டும் தனிப்பட அமைக்கப்படும்.

இரத்ததான வங்கி அமைக்கும் பணி முடிவுறும் தருவாயில், அரசின் ஒப்புதலுக்காக உள்ளது.

ஆம்புலன்ஸ் வண்டிகள் இயங்கிவருகின்றன.

இவை தவிர - திருவாரூர் மாவட்டத்தில் அடியக்கமங்கலம், திருவீழிமிழலை, பூந்தோட்டம், உள்ளிக்கோட்டை மற்றும் சித்தமல்லி ஆகிய இடங்களில் 24 மணிநேரமும் செயல்படும் ஆரம்ப சுகாதார மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன.

**மகளிர் நலம்**

திருவாரூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மகளிர் மேம்பாட்டிற்குப் பெரிதும் வகைசெய்யப்பட்டுள்ளது.

★ மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித்திட்டத்தில் 1.4.97 முதல் 31.3.98 வரை 1,266 நபர்களுக்கு ரூ.10,000 வீதம் மொத்தம் ரூ.1,26,60,000 வழங்கப்பட்டது. 1996 - 97ல் விட்டுப்போன 133 நபர்களுக்கு ரூ.13,30,000 வழங்கப்பட்டிருக்கிறது.



★ ஆதரவற்ற மகளிர் திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ் மூன்று நபர்களுக்கு ரூ.3,000 வீதம் மொத்தம் ரூ.9,000 வழங்கப்பட்டது.

★ அன்னை அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித்திட்டத்தில் மொத்தம் ரூ.1,40,000 வழங்கப்பட்டது.

★ விதவைப் பெண்டிரின் மகள் திருமண உதவித் திட்டத்தில் 21 நபர்க்கு ரூ.3,000 வீதம் மொத்தம் ரூ.63,000 வழங்கப்பட்டுள்ளது.

★ விதவை மறுமண நிதிஉதவித் திட்டத்தில் 9 நபர்க்கு ரூ.7,000 வீதம் ரூ.63,000 வழங்கப்பட்டது.

★ விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர், ஊனமுற்ற மகளிர் ஆகிய 70 பேருக்குத் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

★ டாக்டர் முத்துலெட்சுமிரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தில், 2,800 மகளிர்க்கு ரூ. 500 வீதம் மொத்தம் ரூ.14 இலட்சம் வழங்கப்பட்டது.

★ பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தில் 166 நபர்க்கு அரசு வைப்புத்தொகையாக தலா ரூ.3000 அளிக்கப்பட்டுள்ளது.

★ தேசியப் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், ரூ.500 வீதம் 200 நபர்களுக்கு மொத்தம் ரூ.1 இலட்சம் வழங்கப்பட்டது.

**திருவாரூர் மாவட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்**

சட்டமன்றத்தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள ஏழு சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டிற்காக மொத்தம் ரூ.119 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் விவரம் வருமாறு -

திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதிக்கு ரூ.25 இலட்சம், நீடாமங்கலம் தொகுதிக்கு ரூ.12.50 இலட்சம், வலங்கைமான் தொகுதிக்கு ரூ.12.50 இலட்சம், குத்தாலம் தொகுதிக்கு ரூ.12.50 இலட்சம், நன்னிலம் தொகுதிக்கு ரூ.16.50 இலட்சம், திருவாரூர் தொகுதிக்கு ரூ.15 இலட்சம், மன்னார்குடி தொகுதிக்கு ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் குடிநீர் வசதிக்காக ரூ.3.90 இலட்சமும் சாலைப்பணிகளுக்காக ரூ. 39.85 இலட்சமும் மற்ற பணிகளுக்கு ரூ.75.25 இலட்சமும் செலவிடப்படும்.

**நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்**

நாகை நாடாளுமன்றத் தொகுதியின் கீழ், ரூ.56.30 இலட்சமும், தஞ்சை நாடாளுமன்றத் தொகுதிக்கு ரூ.10 இலட்சமும் ஒதுக்கப்பட்டு, மொத்தம் ரூ.66.30 இலட்சத்தில் 9 பள்ளிக் கட்டடங்கள், 4 சாலைகள் மற்றும் 12 பணிகள் ஆகியவை செய்து முடிக்கப்படும்.

திருவாரூர் மாவட்டத்தில் 1997 - 98 ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட மத்திய திட்டங்கள்:

★ இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தில் ரூ.611.22 இலட்சத்தில் 1986 பணிகள் எடுத்துக் கொள்ளப் பட்டன.



★ ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் ரூ.166.897 இலட்சத்தில் 781 வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

★ மத்திய கிராமப்புறச் சுகாதாரத் திட்டத்தின் கீழ், தனிநபர்களுக்குக் கழிவறை கட்டும் திட்டத்தில் ரூ.32,80,000 செலவில் 1640 கழிவறைகள் கட்டப்பட்டன. இதில் 20 கழிப்பறைகள் பள்ளிக்கூடங்களில் ரூ.12,40,000 செலவில் கட்டப்பட்டன.

★ மில்லியன் கிணறு திட்டத்தில் 160 ஜீவன்தாரா கிணறுகள் ரூ.67.20 இலட்சத்தில் அமைக்கப்பட்டன.

★ 50 பாசனக்குளங்கள் ரூ.75.30 இலட்சத்தில் அமைக்கப்பட்டன.

★ ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் கடன் வழங்கிட நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 4,614 ஆகும். இதன் மூலம் இதுவரை 4,250 பேர் பயனடைந்துள்ளனர்.

★ 1998 - 99 ஆம் நிதி ஆண்டில் ஜவகர் வேலைவாயப்புத் திட்டத்திற்கு ரூ.517.69 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ வீட்டிற்கு ரூ.29,000 என்ற வீதத்தில் 1,095 தொகுப்பு வீடுகள் இந்த நிதியாண்டில் கட்டப்படும்.

★ வேலைவாய்ப்பு உறுதியளிக்கும் திட்டத்தில், நடப்பாண்டில் ரூ.11.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 40 சதவீதம் குடிநீர் வசதிகளுக்காகவும், 40 சதவீதம் சாலைப் பணிகளுக்காகவும், 20 சதவீதம் கட்டடப் பணிகளுக்காகவும் என்ற வகையில் ஒதுக்கீடு செய்யப்படும்.

★ தனிநபர்களுக்குக் கழிவறை கட்டும் திட்டத்தில் 1784 நபர்களுக்குக் கழிவறை கட்டித்தரப்படும். இதில் 20 நடுநிலைப்பள்ளிகளும், 24 தொடக்கப் பள்ளிகளும் அடங்கும்.

★ 1998 - 99ல் - 208 ஜீவன்தாரா கிணறுகள் வெட்டப்படும். இதில் 138 கிணறுகள் ஆதிதிராவிடர்களுக்கும், 70 கிணறுகள் மற்றவர்களுக்குமாக இருக்கும்.

★ மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் 1998 - 99 ல் 55 குழுக்கள் அமைக்கப்பட்டு ஒரு குழுவுக்கு ரூ.25,000 வீதம் வழங்கப்படும்.

**நிலுவைப் பணிகள் நிறைவேற்றம்**

திருவாரூர் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் - 1.7.96 அன்று அனைத்துத் திட்டங்களிலும் முடிக்கப்படாமல் நிலுவையில் இருந்த பணிகளின் எண்ணிக்கை 6,245 ஆகும். இப்பணிகள் செயலாக்கம் பெற்று, இதுவரை 6,100 பணிகள் தொடர்ந்து செய்து முடிக்கப்பட்டன.

- இவ்வாறாகப் புதிதாக மலர்ந்த திருவாரூர் மாவட்டம் வளர்ச்சிப் பணிகளில் வியத்தகு வண்ணம் வெற்றிநடை போட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

- ஆர். ராஜசேகரன்



**வைரம் குப்பையிலே கிடந்தாலும், எடுத்துக் கொஞ்சம் தூசியைத் தட்டினால் மீண்டும் ஒளிவிடும். ஆனால், இழிநிலையில் மங்கிப்போன பித்தளைகளை யாரும் தீண்டமாட்டார்கள்!**

- கலைஞர்

# கர்ப்பச் சுமையானவன்



- தன்நாவும் பேனாவும் ஆயுதங்களாம் - சுவைத்
தமிழும் திறமும் அவன் கேடயங்களாம்
முன்னேற்றப் படைக்கென முரசொலிப்பான் - நல்ல
முத்தாரம் தமிழ்க்கெனப் பரிசளிப்பான்

- வாளின் நிழல்களிலே வளர்ந்துவந்தவன் - போர்
வரலாற்று வாழ்க்கையிலே கிளர்ந்துவந்தவன்
தோளின் தொடர்கதைகள் நெய்துவந்தவன் - புகழ்ச்
சுடருக்கு வேர்வைநெய் பெய்துவந்தவன்

- பரணிகளே அவனுக்குத் தாலாட்டு - பகைப்
பச்சைரத்த மேபிடித்த நீராட்டு
மரணத்தோ டெப் பொழுதும் விளையாட்டு - அவன்
வாய்பாடும் பாட்டெல்லாம் போர்ப்பாட்டு

- படுத்துக் கிடந்ததொட்டில் பாசறைகளே - அவன்
படித்த கலாசாலை வெஞ்சிறைகளே
தொடுத்துக் கொடுத்ததெல்லாம் காவியங்களே - காலத்
தொல்லைக்கும் அழியாத ஓவியங்களே

- தமிழென்னும் கண்ணுக்கு இமையானவன் - கலைச்
சரித்திரத்தில் கர்ப்பச் சுமையானவன்
கமழ்கின்ற புகழ்மண்ணில் வேர் கொண்டவன் - எங்கள்
கலைஞர் எனக்கலையாய்ப் பேர்கொண்டவன்.

**- கவிக்கோ.அப்துல் ரகுமான்**

## திருவாரூர் மாவட்டம்:

# நெய்வேலி காட்டாமணக்கு அழிப்புத் திட்டம் 1998-99



திருவாரூர் மாவட்டத்தில் 1998-99-ஆம் ஆண்டில் பி முதல் ஜி வகுப்பு வாய்க்கால்கள் மற்றும் ஏரி, குளங்களில் உள்ள நெய்வேலி காட்டாமணக்குச் செடிகளை 2, 4டி சோடியம் உப்பு, களைக்கொல்லி மருந்து தெளித்து அழிக்கும் திட்டம் தற்போது தொடங்கப்பட்டு உள்ளது.

இத்திட்டத்தின்கீழ், வாய்க்கால்களில் நீர்ப்பாசனத்திற்கும், மழை வெள்ளக் காலங்களில் தண்ணீர் வடிவதற்கும், முற்றிலுமாக அழிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதற்காக ரூ.27,74,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வாய்க்கால்கள் மற்றும் வடிகால்களில் உள்ள நெய்வேலி காட்டாமணக்கினை அழிப்பதன்மூலம், குறைந்த காலத்தில் அதிகப் பரப்பிற்கு நீர்ப்பாசனம் செய்ய வழி ஏற்படுகிறது. மழை வெள்ளக் காலங்களில் நீர் விரைவாக வடிவதால் பயிருக்குச் சேதம் ஏற்படுவது தடுக்கப்படுகிறது.

பாசன வாய்க்கால்களில் நெய்வேலி காட்டாமணக்கினை அழிக்க, விவசாயிகள் பெருமுயற்சி செய்தும், இச்செடிகள் தனது விரைவாக வளரும் தன்மை, கடுமையான வறட்சியையும் அதிக நீர் தேங்கியுள்ள நிலையையும் தாங்கி வளரும் ஆற்றல் கொண்டுள்ளதால் இதனை முற்றிலும் அழிக்க இயலவில்லை.

களைக்கொல்லியுடன் யூரியாவைக் கலந்து தெளிப்பதால் களைக்கொல்லிச் செடியின் நுனி குருத்து முதல்வேர்ப்பகுதிவரை ஊடுருவிச் சென்று நெய்வேலி காட்டாமணக்குச் செடியினை 21 நாட்களுக்குள் முற்றிலும் வாடி கருகச் செய்துவிடுகிறது.

இதனால் செடிகள் திரும்பவும் துளிர்க்காமல் பட்டுப் போய்விடுகிறது.

இத்திட்டத்தின்கீழ், கீழ்க்கண்ட விகிதங்களில் மருந்துக் கலவை தெளிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| (1) 24டி சோடியம் சால்ட் | - 2 கிராம் | ஒரு லிட்டர் தண்ணீருக்கு |
| (2) சோப்புக் கரைசல் | - ஒரு மிலி. | |
| (3) யூரியா | - 10 கிராம் | |

களைக்கொல்லி தெளித்து மூன்று வாரங்களுக்குப் பிறகு காய்ந்த, பட்டுப்போன செடிகளை வேருடன் பிடுங்கிக் குவித்து மண்ணெண்ணெய் கொண்டு கொளுத்தி அழிக்கவும் இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் வாய்க்கால்கள், வடிகால்கள் மற்றும் ஏரி குளங்களில் இடையூறாக உள்ள நெய்வேலி காட்டாமணக்குச் செடிகள் முற்றிலும் அழிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ★

# திருவாரூரில் பிறந்து சிறந்த சங்கீத மும்மூர்த்திகள்

சொ.பா



தியாகராச சுவாமிகள், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாத்திரிகள் ஆகிய மூன்று இசை மேதைகளைக் கருநாடக சங்கீத மும்மூர்த்திகள் என்று குறிப்பது ஓர் அண்மைக்கால மரபாகும்.

இம்மூவருமே கி.பி.18 ஆம் நூற்றாண்டிலும் 19 - ஆம் நூற்றாண்டிலும் வாழ்ந்தவர்கள்; திருவாரூரில் பிறந்தவர்கள். தியாகையர், இராமம் பிரம்மம் - சீதம்மா ஆகியோருக்கு மகனாய் கி.பி. 1761 - இல் பிறந்தார். முத்துசாமி தீட்சிதர் இராமசாமி - சுப்பம்மாள் ஆகியோருக்கு மகனாய் கி.பி. 1775 ஆம் ஆண்டிலும், சியாமா சாத்திரிகள் விசுவநாதையர் - வெங்கட லட்சுமி ஆகியோருக்கு மகனாய் கி.பி. 1762 - ஆம் ஆண்டிலும் பிறந்தனர்.

மூவருமே நிறைவாழ்வு வாழ்ந்த பெருமக்கள். தியாகையர் 80 ஆண்டுகளும், முத்துசாமி தீட்சிதர் 69 ஆண்டுகளும், சியாமா சாஸ்திரிகள் 65 ஆண்டுகளும் வாழ்ந்தவர்கள். இம்மூவரும் தாங்கள் காலமாகும் நாளை முன்னதாகவே கூறி மறைந்தனர் என்று கூறப்படுகின்றார்கள்.

மூவருமே அவர்கள் வாழ்ந்த காலத்துக் குறுநில மன்னர்களால் போற்றப்பட்டவர்கள்; இந்து பிராமண வகுப்பில் எளிய குடும்பத்தில் பிறந்து துன்ப துயரங்களில் எதிர் நீச்சலடித்து முன்னேறியவர்கள்; குருமுகமாக முறையாகப் பாடங்கேட்டவர்கள்; மனிதரைப் புகழ்வதனை வெறுத்தவர்கள். இம்மூவருக்குமே முதல் ஆசிரியர் அவர் தம் தந்தையரே. நல்ல மாணவப் பரம்பரை இம் மூவருக்குமே உண்டு. தியாகையர் திருவையாற்றிலும், சியாமா சாத்திரிகள் தஞ்சை நகரத்திலும், முத்துசாமி தீட்சிதர் எட்டயபுரத்திலும் தம் இறுதிநாட்களைக் கழித்தனர். தீட்சிதர், சாத்திரி ஆகிய இருவரின் சந்ததியிலும் இசை மேதைகள் தோன்றினர். மகாகவிபாரதி போற்றிப் பாடிய சுப்புராம தீட்சிதர் முத்துசாமி தீட்சிதரின் பேரர் ஆவார்.



திருவாரூரிலுள்ள தியாகராயர் பிறந்த வீடு

தியாகையர் இயற்றிய கீர்த்தனைகளே எண்ணிக்கையில் மிகுதி. தியாகையருக்கே மாணவர் எண்ணிக்கையும் மிகுதி. தியாகப் பிரமம் எனப்போற்றப் பெறும் தியாகையர் மற்ற இருவரை விட மிகுதியான மொழிகள் கற்றவர். தெலுங்கு, சமசுகிருதம், மராத்தி, தமிழ், கன்னடம், இந்தி ஆகிய ஆறு மொழிகள் அறிந்தவர் அவர்.

மூவருமே தேவார மூவரைப் போலப் பல ஊர்களுக்குச் சென்று அவ்வவ்வூரில் எழுந்தருளியிருக்கும் இறைவனைப் பாடிப் பரவும் வழக்கத்தை மேற்கொண்டனர். தியாகையர் திருப்பதி வரை சென்றவர்; முத்துசாமி தீட்சிதர் காசி வரை சென்றவர். சியாமா சாத்திரிகள் சென்ற இடங்கள் குறைவே. தியாகையர் சென்று வந்த இடங்களுள் சில : திருப்பதி, புத்தூர், சென்னை, கோவூர், திருவொற்றியூர், சோளிங்கர், திருவரங்கம், இலால்குடி, நாகப்பட்டினம். முத்துசாமி தீட்சிதர் காசி, காளத்தி, திருத்தணி, காஞ்சி, வைத்தீசுவரன்கோயில், மதுரை, எட்டயபுரம், திருச்செந்தூர், சாத்தூர், இராமேசுவரம் ஆகிய ஊர்களுக்கும், சியாமா சாத்திரியார் காஞ்சி, திருவானைக்கா, நாகை, மதுரை, வைத்தீசுவரன் கோயில் ஆகிய ஊர்களுக்கும் சென்றுள்ளனர்.

அற்புதங்கள் நிகழ்த்தியதாக மூவரைப் பற்றியும் நிரம்பக் குறிப்புகள் உண்டு. மூவரும் வெளியூர்களுக்குச் சென்றுவந்தபோது நிகழ்ந்தனவாகச் சொல்லப்படும் கதைகளும் நிரம்ப உண்டு. தியாகையர் இராமனையும், முத்துசாமி தீட்சிதர் முருகனையும், சியாமா சாத்திரிகள் தேவியையும் வழிபடு கடவுளாகக் கொண்டவர்கள். தியாகையர் புதிய ராகங்களைக் கண்டுபிடித்துப் பாடியவர். தேவாமிருத வருசனி, கடேவாணி, செஞ்சுகாம்போசி, கம்பீரவாணி, பகுதாரி, சாரமாதி, பாலரஞ்சனி, உமாபரணம் ஆகிய இராகங்கள் அவருடைய படைப்புகளே. சியாமா சாத்திரிகள் மட்டும் தமிழிலும் சில சாகித்தியங்கள் இயற்றியுள்ளார்.

கருநாடக இசையில் இராகம், தாளம், பாவம் ஆகிய மூன்றும் உயிர் நாடியாகும்.



முத்துசாமி தீட்சிதர் பிறந்த விடு

தியாகையர் படைப்புகளில் பாவமும் தீட்சிதர் படைப்புகளில் இராகமும், சாத்திரியார் படைப்புகளில் தாளமும் சிறப்பிடத்தைப் பெற்றுள்ளன. மற்ற இருவரின் படைப்புகளை நோக்கத் தியாகையரின் படைப்புகள் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் எளிமையானவை.

பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அமைப்பு கிருதிகளில் இடம்பெற்று நிலைத்தமை இம்மூவர் காலத்தில்தான், பத்ராசலம் இராமதாசு, கோபால கிருட்டிண பாரதியார், சுவாதித்திருநாள் ஆகியோர்க்கும் இதில் பங்கு உண்டு.

தீட்சிதர் தம் கிருதிகளில் இராகத்தின் சொரூபம் வெளிப்படையாகத் தோன்றுமாறும், இராகபத்தியும் ஆலாபன கிரமமும் செறிந்திருக்குமாறும் அமைந்திருப்பதைக் காணலாம். சாத்திரியார் படைப்புகளைக் கற்பது சிறிது கடினமாகும்.

இம்மூவரில் சியாமா சாத்திரியாரும், தீட்சிதரும் சந்தித்தமைக்கும், தியாகையரும் சாத்திரியாரும் சந்தித்தமைக்கும் வரலாற்றுச் சான்றுகள் உண்டு. ஆனால், தியாகையரும், தீட்சிதரும் சந்தித்தனர் என்பதற்கு மறுக்கமுடியாது அமையும் சான்றுகள் இல்லை. திருவையாற்றில் எழுந்தருளியிருக்கும் அம்பாள் தருமசம்வர்த்தனியைப் பற்றிய தீட்சிதர் கிருதிகள் இருப்பதனால் அவர் திருவையாற்றிற்குச் சென்றிருக்கவும், தியாகையரைச் சந்தித்திருக்கவும் வாய்ப்பு உண்டு.

தியாகையரின் நாட்டை, கவுளை, ஆரபி, வராளி, சிரீ ஆகிய கனராகங்களில் அமைந்த கீர்த்தனகளைப் பஞ்சரத்தினக் கீர்த்தனைகள் எனக் குறிப்பிட்டு வழங்குவதுபோல், தீட்சிதரின் நவரத்தினக் கீர்த்தனைகளும், நவக்கிரகக் கீர்த்தனைகளும் குறிப்பிடத்தக்கவையே.

தீட்சிதரால் மட்டுமே கையாளப்பட்ட இராகங்கள் உண்டு. அவற்றுள் சில சாரங்க நாட்ட, சாயகவுள, பூர்வி, பாடி, மகூரி, சுத்த வசந்தா, அமிருதவர்சனி என்பனவாகும்.

தியாகையரும் சியாமா சாத்திரிகளும் பெரும்பாலும் தெலுங்கிலும், தீட்சிதர் பெரும்பாலும் சமசுகிருதத்திலும் கிருதிகள் இயற்றியுள்ளனர். தியாகையரைப் போல மற்ற இருவரும் இசை நாடகங்கள் எழுதியதாகத் தெரியவில்லை. தீட்சிதர் காசியில் வாழ்ந்த காரணத்தினால் அவருடைய கிருதிகளில் இந்துசுத்தானி இசையின் செல்வாக்கு உண்டு.

இம்மூவரும் தெலுங்கிலேயே நிரம்பச் சாகித்தியங்கள் இயற்றியமைக்கு ஒரு காரணம் சொல்லப்படுகிறது. தெலுங்கில் எல்லாச் சொற்களும் உயிரீறாக இருப்பதனால் சாகித்தியங்கள் இயற்றுவதற்குத் தெலுங்கு மிகவும் ஏற்றதாக இருக்கிறது என்பதே அக்காரணம். இது ஒரு மொழியியல் காரணமேயாகும். தியாகையர் இராமாயணக் கதையைத் தம் கிருதிகளுக்குரிய உள்ளடக்கமாகக் கொண்டமையால் அவரால் எளிதாக மக்களை ஈர்க்கும் பாடல்களைப் பலவாகப் பாடமுடிந்தது, தீட்சிதர் கிருதிகள் பற்றற்ற தன்மையைப் போதிக்கும் நிலையில் உள்ளன.

சாத்திரியாரின் படைப்புகள் ஆழமானவை; நுட்பமானவை; மக்களிடம் மிகுதியாகப் பரப்பப்படாதவை. சியாமா சாத்திரியார் சாகித்தியகர்த்தா என்பதை விடவும் பாடகர் என்றே பெரிதும் அங்கீகரிக்கப்பட்டுள்ளார். தீட்சிதர் கிருதிகள் நிறைய இருப்பினும் அவரது இராக அமைப்பு புரிந்துகொள்ளச் சிக்கலானது.

தீட்சிதர் ஒரு வேதாந்தி. தியாகையரும் சாத்திரியும் பக்தர்கள். மூவரும் வாக்கேயக்காரர்கள் என்பதில் அடங்குவர். எது எப்படியிருப்பினும் இம்மூன்று வாக்கேயக்காரர்களும் தென்னக இசையின் தூண்கள் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. தியாகராசர் தம் கிருதிகளில் தம் பெயரையே முத்திரையாகவும், முத்துசாமி தீட்சிதர் 'குக குக' என்ற தொடரை முத்திரையாகவும், சாத்திரியார், சியாம கிருட்டினன் என்பதை முத்திரையாகவும் பயன்படுத்திப் பாடியுள்ளனர்.

முத்திரை என்பது பாட்டின் இறுதியில் ஓரடியில் குறிப்பிட்ட தொடர் தவறாது இடம்பெறுமாறு அமைத்துப் பாடுவது. இந்த வழக்கம் தேவார காலத்திலும் உண்டு. இது ஆக்கியோன் பெயரைக் கண்டுகொள்ள உதவும்.

தியாகையர் கி.பி.1847-ஆம் ஆண்டிலும், தீட்சிதர் கி.பி.1834-ஆம் ஆண்டிலும், சியாமா சாத்திரிகள் கி.பி.1827-ஆம் ஆண்டிலும் காலமானார்கள். ★



சியாமா சாத்திரிகள் பிறந்த வீடு

# கால்நடைப் பண்ணை கொருக்கை

திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த மிகப்பெரிய வட்டங்களில் திருத்துறைப் பூண்டி ஒன்றாகும். வேளாண்மையையே மிகவும் நம்பியிருக்கும் இந்த மாவட்டத்தில் - திருத்துறைப்பூண்டிக்கு அருகே உள்ள கொருக்கை என்ற இடத்திலிருக்கும் கால்நடைப் பண்ணை குறிப்பிடத்தக்க ஒன்றாக விளங்குகிறது.

அதைப் பார்த்துவர அங்கே பயணம் சென்ற எங்களைத் திருத்துறைப் பூண்டியிலேயே வரவேற்று வழிகட்டினார், கால்நடை மருத்துவரான டாக்டர் எஸ்.ரங்கநாதன். இவர் பொறுப்பில்தான் அந்தக் கால்நடைப் பண்ணை இருக்கிறது.

மன்னார்குடி கோட்டத்தைச் சேர்ந்த திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில் மட்டும் சுமார் 15,000 மாடுகள், சுமார் 5,000 வெள்ளாடுகள் இருக்கின்றன.

பொதுவாக எங்கும் உள்ளதுபோல் இந்தப் பகுதியிலும், அதிகம் பால்கறக்கும் கால்நடைகளுக்கு மடிநோய் வருவது உண்டாம்.

"நோய்கண்டதுமே கொண்டுவந்துவிட்டால் பாதிக்கப்பட்ட கால்நடைகளைக் காப்பாற்றி விடலாம்; பால் மரத்தபின் வந்தால் கொஞ்சம் சிரமம். இருந்தாலும், முன்னெச்சரிக்கையாக எங்கள் கிளை நிலையங்கள் மூலம் ஊர் ஊராகப் போய் ஆறு மாதத்திற்கு ஒருமுறை ஊசி போட்டு வருகிறோம்".

''அப்படியானால் நடமாடும் மருந்தகம் உண்டா என்ன?"

"மன்னார்குடியில இருக்கு".

''ஆடுகளுக்கும் குறிப்பிட்ட நோய் ஏதாவது?..."

''வரும். புது மழை பெய்து, புதுசா முளைக்கிற புல்லை அதிகம் திங்கற ஆடுங்களுக்குப் பெரும்பாலும் குடற்புழு உண்டாகி, கழிச்சல் நோய்ன்னு ஒண்ணு வர்றதுண்டு. இதுவும் அப்படித்தான் சார், நோய் கண்ட ஆரம்பத்துலயே வந்தா காப்பாத்திடலாம்; இல்லைன்னா ஆடுங்களோட உயிருக்கே ஆபத்துதான்."

- மருத்துவமனைக்கு வந்த கால்நடைகளைப் பரிசோதித்தவாறே பேசினார் மருத்துவர்.

ஆடுகளுக்குச் செயற்கை முறைக் கருவூட்டல் முறை என்பது அவ்வளவாக வெற்றிபெறவில்லை என்றாலும், மாடுகளுக்கு இந்தப் பகுதியில் செயற்கைமுறைக் கருவூட்டலுக்கு நல்ல வரவேற்பிருக்கிறது. இதற்கென்றே திருத்துறைப்பூண்டி கால்நடை மருந்தகத்திற்கு நாள்தோறும் குறைந்தது 50 மாடுகளாவது கொண்டு வரப்படுகின்றனவாம்.




## கொருக்கையில்...

திருத்துறைப்பூண்டியை விட்டு ஏழெட்டுக் கிலோமீட்டர் விலகியுள்ள உம்பளச்சேரி கிராமத்தருகே இருக்கும் திருவாரூர் மாவட்டக் கால்நடைப் பண்ணையான கொருக்கைக்கு வந்து சேர்ந்தோம்.

"இந்தக் கால்நடைப் பண்ணைக்கு இவர்தான் சார் மேலாளர்" - என்று கூறி, திரு.ராஜேந்திர கணேஷ் என்பவரை நமக்கு அறிமுகம் செய்துவைத்தார்கள்.

495.68 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப் பட்டிருக்கும் அந்த கொருக்கைப் பண்ணை முழுவதையும் நமக்கு மிகுந்த உற்சாகத்தோடு சுற்றிக் காட்டி - அதுபற்றிக் கேட்ட விவரங்களை உடனுக்குடன் சொல்லிவந்தார் பண்ணை மேலாளர்.

## ஜம்னாபாரி - உம்பளச்சேரி

"உம்பளச்சேரி மாடு, ஜம்னாபாரி ஆடுன்னு ரெண்டு புதுமாதிரியான இனங்களை இங்கே நாங்க பாதுகாத்து வளர்த்து வர்றமுங்க..."

"புது மாதிரின்னா?"

"உம்பளச்சேரி வகையறாவுல இருக்கிற பசுமாடுங்க கூட வேலைக்குத்தான் ஒதவும்; அவ்வளவா பால்தராதுங்க. வண்டி இழுக்கிறது...ஏர் உழறது மாதிரி முரட்டுத்தனமான காரியங்களை இந்த மாடுங்க இலகுவா செய்யும். எந்தச் சீதோஷ்ண நிலையையும் தாங்கும்; அவ்வளவு திடகாத்திரம்! நல்ல வளர்ச்சி!"

''பார்த்தா...எலும்பும் தோலுமா இருக்கு?..." - அந்த மாடுகளைப் பார்த்த பிறகு இப்படிக் கேட்டோம்.

"இயற்கையாகவே இந்த இனத்தோட உடல்வாகு அப்படித்தானுங்க; மடிகூட எடுப்பா வராது".

பார்த்தோம்; அவர் சொல்லியது போல்தான் இருந்தது.

"ஜம்னாபாரி ஆடுங்கிறது?"

''முகத்தைவிட காதுங்க ரொம்ப நீளமாயிருக்கும்!'' - தூர இருந்து பார்த்தாலே அது தெரிந்தது என்றாலும், அவர் தூரத்திப் பிடித்து ஓர் ஆட்டுக் குட்டியை நம்மிடம் காட்டினார்; அதேபோல்தான் இருபுறமும் நீண்டு தொங்கின, காதுகள்.

## தாமரை பூத்த தடாகங்கள்

கால்நடைப் பண்ணை என்பதால் - கோல் கிராஸ், வேலி மசால், மக்காச் சோளம், பெஃபலோகிராப், ஆஃப்ரிகன், காசாமணி போன்ற புல் வகைகள் நிறைய விளைச்சல் செய்யப்பட்டிருக்கின்றன. இதற்கென்றே 70, 80 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கொருக்கைப் பண்ணை உள்ள இடம் ஏதோ கடலோரம் போல மணல்வெளியாக இருந்தாலும், பசுமைச் சோலைபோல் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. இதன் உள்ளேயே பதினொரு தாமரைக் குளங்கள் கண்ணைக் கவருவதாக நீர்நிறைந்து காணப்படுகின்றன. வெண்தாமரைப் பூக்களும், அகன்ற அதன் இலைகளும் தண்ணீர்த் தடத்திற்கு மேலேயே தலைதூக்கியபடி நின்று அழகுகாட்டி அசைந்தாடின.

மேனி வியர்க்கக் கொளுத்தும் வெயிலிலும், மெய்மறந்து ஒரு குளக்கரையில் நின்றிருந்த



நம்முன் வந்து, புதிதாகப் பறித்த இரண்டு தாமரைப் பூக்களை நீட்டினார் ஒரு முதியவர்.

''இந்தக் குளத்துலல்லாம் கானாங் கோழியாட்டம் 'சிரவி'ன்னு ஒரு புதுவகைப் பறவை இருக்குதுங்க; ஒடம்புல எலும்பே இருக்காது; சமைச்சு சாப்புட்டா அற்புதமா இருக்கும்க!''

''அப்படியா!'' - என்றவாறே அந்தப் பூக்களை வாங்கிக்கொண்டு, ஜம்னாபாரியையும் உம்பளச்சேரியையும் உள்ளுக்குள் வியந்தபடி நாங்கள் எங்கள் வண்டிக்கு வந்தோம்.

''வேறே எங்கேயும் இந்த ஜம்னாபாரி, உம்பளச்சேரி இனம் கிடையாதுங்க. அரசாங்கம் மனசு வெச்சு, இன்னம் உதவி பண்ணினா, இதுங்களெ நல்லபடி பெரிய அளவுல விருத்தி பண்ணலாமுங்க'' - என்றார் தலையில் புல் கட்டோடு வந்த ஒரு பெண்மணி.



## பண்ணையின் கதை

இந்த கொருக்கைப் பண்ணை 25.3.1959-ல் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இங்கே கால்நடைப் பிரிவு, பால் பிரிவு, விவசாயப் பிரிவு என மூன்று பிரிவுகள் உள்ளன.

உம்பளச்சேரி மாடுகள் ஒருவழிச் சேர்க்கைக்கு மட்டும் என்று வைத்து அதன் தனித்தன்மை கெடாமல் பாதுகாக்கப்படுகின்றன. தரமான காளைக் கன்றுகள், பால், தீவனப்புல் போன்றவை தனியாருக்கும் முறைப்படி விற்கப்படுகின்றன.

இதனுள்ளே உள்ள மேய்ச்சல் நிலம் மட்டும் 233.86 ஏக்கரில் உள்ளது; சாலைகள், கால்நடைகள் அடைக்கப்படும் கொட்டகைகள் போன்றவை 85 இருக்கின்றன.

இங்கே உம்பளச்சேரி கறவைப் பசுக்கள், கிடேரிகள், பொலிகாளைகள், வேலை மாடுகள்






எல்லாமுமாக 349 இருக்கின்றன. ஜம்னாபாரி ஆடுகள், கிடாக்கள் எல்லாமுமாக 78 இருக்கின்றன.

அலுவலரிலிருந்து, தினக்கூலிப் பணியாளர்கள் வரை சுமார் 60 பேர் இந்தப் பண்ணையில் இருக்கிறார்கள்.

வேளாண்மைத் தொழிலையே தமது முக்கியத் தொழிலாக நம்பியிருக்கும் மாவட்டம் திருவாரூர் மாவட்டம். இப்படிப்பட்ட இந்த மாவட்டத்தில் இதுபோன்ற கால்நடைப் பண்ணைகளைச் செவ்வனே பராமரிப்பதும் பாதுகாப்பதும் மிக முக்கியமான ஒரு பணிதானே!

- ராஜா

# திருவாரூர் மாவட்டத்தில்
# வெண்ணாறு வடிநிலக் கோட்டம்-பணிகள்



காவிரித் தாய் கர்நாடக மாநிலத்தில் குடகு மலையில் உற்பத்தியாகி, தமிழகத்தில் தவழ்ந்து, பூம்புகாரில் - வங்காள விரிகுடாவில் சங்கமமாகிறது. இப் பொன்னி நதி கர்நாடக - தமிழக மாநிலங்களில் 802 கிலோமீட்டர் பயணம் செய்து ஆங்காங்கே வாழும் மக்களுக்குக் குடிநீராகவும், நீர் மின்சக்தியாகவும், விவசாயத்திற்குத் தேவையான தண்ணீராகவும், சுற்றுலாத் தலமாகவும் பயன்பட்டு வருகிறது.

காவிரி டெல்டா நீர்ப்பாசனம் மேட்டூர் அணையிலிருந்து பெறும் தண்ணீரைக் கொண்டும், டெல்டாவில் பொழியும் வடகிழக்குப் பருவமழையைக் கொண்டும் நடைபெறுகிறது. மேட்டூர் அணைக்குக் கீழ் உள்ள பாசனப் பரப்பின் விவரம் பின்வருமாறு:

| | ஏக்கர் |
|---|---|
| மேட்டூர் அணையிலிருந்து மேலணை (முக்கொம்பு) வரை உள்ள பாசனப் பரப்பு ... | 1,90,336 |
| காவிரி வடிநிலப் பகுதியில் உள்ள பாசனப் பரப்பு (காரைக்கால் பகுதி 27,000 ஏக்கர் உள்பட) ... | 4,93,837' |
| வெண்ணாறு வடிநிலப் பகுதியில் உள்ள பாசனப் பரப்பு | 4,96,814 |
| கல்லணைக் கால்வாய் பகுதியில் உள்ள பாசனப் பரப்பு | 2,27,471 |
| ஆகமொத்தம் பாசனப் பரப்பு ... | 14,08,458 |

கீழ்க்காவிரி வடிநில வட்டம்–காவிரி வடிநிலப் பகுதி, வெண்ணாறு வடிநிலப் பகுதி, கல்லணைக் கால்வாய்ப் பகுதிகளில் உள்ள 12,18,122 ஏக்கர் நிலங்களின் நீர்ப்பாசனத்தை நிர்வகிக்கிறது. கல்லணையில் ஆரம்பித்து வங்காள விரிகுடா வரை 110 கி.மீ. நீளமும் கடற்கரையை ஒட்டி தெற்கு வடக்காக 125 கி.மீ. தூரம் உள்ள நிலப்பரப்பில் இப் பாசனப் பரப்பு அடங்கியுள்ளது.

வெண்ணாறு, அதன் கிளை ஆறுகள் மற்றும் வாய்க்கால்களின் நீர் நிர்வாகம் செய்யும் பணியும் மற்றும் ஆறுகள், வாய்க்கால்கள், வடிகால்கள், ஏரிகளின் பராமரிப்பு மற்றும் அவைகளின்மீது அமைந்துள்ள பாசனக் கட்டுமானங்களையும் பராமரிப்பு செய்யும் பணியும் வெண்ணாறு வடிநிலக் கோட்டத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வெண்ணாறு வடிநிலப்பகுதி தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் அமைந்துள்ளது. வெண்ணாறு பகுதியில் மொத்தம் 759 கி.மீ. நீளம் கொண்ட 16 ஆறுகள் 583 ஏ. பிரிவு வாய்க்கால்கள், 44 பாசன ஏரிகள், 37 (சி.எம்.பி.) வடவாறு நீட்டிப்பு வாய்க்காலின் கிளை வாய்க்கால்கள் மற்றும் 73 பெரிய அளவு வாய்க்கால்கள் இப்பகுதியில் அமைந்துள்ளன. வெண்ணாற்றின் மொத்தப் பாசன பரப்பு 4,96,814 ஏக்கர் அல்லது 2,01,058 எக்டேர் ஆகும்.

**திருவாரூர் மாவட்டம்:**

புதிதாக அமைந்துள்ள திருவாரூர் மாவட்டத்தில், மொத்தம் 446 கி.மீ. நீளம் கொண்ட 16 ஆறுகள் உள்ளன. மேலும்

இம்மாவட்டப் பகுதியில் மொத்தம்; 1399 கி.மீ. நீளம் கொண்ட 396 'ஏ' பிரிவு வாய்க்கால்களும், 70 கி.மீ. நீளம் கொண்ட 30 சி.எம்.பி. கிளை வாய்க்கால்களும் மற்றும் 28 ஏரிகளும் அமைந்துள்ளன. இவற்றின் மூலம் இம்மாவட்டத்தில் மொத்தம் 2,93,164 ஏக்கர் அல்லது 1,18,642 எக்டேர் பரப்பு பாசனம் பெறுகின்றன.

காவிரி டெல்டாவில் முக்கியப் பயிர் நெல் சாகுபடியாகும். ஒரு போக சாகுபடி (சிங்கிள் கிராப்) மற்றும் இருபோக சாகுபடி (டபுள் கிராப்) என இருவகைச் சாகுபடிகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. குறுகிய காலப்பயிர்கள் "குறுவை" சாகுபடிகள் ஜூலை முதல் ஆகஸ்ட் வரை பயிரிடப்பட்டு நவம்பர் முதல் மற்றும் இரண்டாம் வாரத்தில் அறுவடை செய்யப்படுகின்றன. அறுவடைக்குப் பின்னர் அதே நிலங்களில் "தாளடி" நடவு செய்து, பிப்ரவரி மாதத்தில் அறுவடை ஆகின்றன. ஏனைய நிலங்களில் ஒரு போக சாகுபடியாகச் சம்பா நடவு செய்யப்பட்டு செப்டம்பர் மாதத்தில் துவங்கப்பட்டு ஜனவரி இறுதியில் அறுவடை செய்யப்படுகின்றன.

**வேலைகளின் விவரம்:**

ஆண்டுதோறும் வழங்கப்படும் மராமத்து நிதி ஒதுக்கீட்டைக் கொண்டு, பாசனக் கட்டுமானங்களுக்குச் சிறப்புப் பழுதுபார்த்தல், கரைகளைச் சீரமைத்தல், மண்வாரி இயந்திரங்கள் மூலம் ஆறுகள், வடிகால்கள் மற்றும் பெரிய அளவு வாய்க்கால்களில் அடர்ந்துள்ள சீமைக் காட்டாமணி செடிகள் அகற்றுதல் மண் திட்டுகளை அகற்றுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் அவ்வப்போது வழங்கப்படும் 'ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம்', வேலை வாய்ப்பு உறுதி அளிக்கும் திட்டம்', 'நமக்கு நாமே திட்டம்' மற்றும் 'மாவட்டப் பரவலாக்கத் திட்டம்' போன்ற சில திட்டங்களின் கீழ் வழங்கப்படும் நிதி ஒதுக்கீட்டைக் கொண்டு குடிமராமத்து, கரைகளைப் பலப்படுத்துதல், தூர் வாருதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1997-98ஆம் ஆண்டு மராமத்து நிதிஒதுக்கீட்டைக் கொண்டு திருவாரூர் மாவட்டத்தில் 69.65 இலட்சம் மதிப்பில் 186 சிறப்புப் பழுதுபார்க்கும் பணிகளும் மற்றும் இம்மாவட்டத்திலுள்ள சமநிலைப் பொறிகள் மற்றும் தலைமதகுகளின் அடைப்புகளுக்கு எண்ணெயிடுதல் தார் அடித்தல் போன்ற ஆண்டு பராமரிப்புப் பணிகள் 13.55 இலட்சம் செலவிலும் செய்யப்பட்டுள்ளன.

திருவாரூர் மாவட்டத்தில் வேலை வாய்ப்பு உறுதி அளிக்கும் திட்டத்தின்கீழ் 1996-97ஆம் ஆண்டு 10 வேலைகள் 3.95 இலட்சத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவரால் ஒப்புதல் வழங்கப்பட்டு, பணி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின்கீழ் 202 வேலைகள் ரூ.1,75,94,000 மதிப்பீட்டில் செயல்படுத்தப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவர் ஒப்புதலும், நிதியும் பெறப்பட்டவுடன் வேலைகள் செயல்படுத்தப்படும்.

**மண் வாரி இயந்திரப் பணிகள்:**

காவிரி டெல்டா பகுதியில் ஆறுகள் வடிகால்கள், வாய்க்கால்கள் மற்றும் ஏரிகள் முதலியவற்றில் வளர்ந்துள்ளதும் மற்றும் நீரோட்டத்திற்குத் தடையாகவும் உள்ள நெய்வேலி காட்டாமணக்குச் செடிகளை அகற்றவும் மற்றும் திட்டுகளை அகற்றவும், பாசனக் கட்டுமானங்களைப் பழுதுபார்த்துச் சிரமைக்கவும் தமிழக அரசால் அரசாணை எண்.139 பொ.ப.து. நாள் 2-4-97-ல் ரூ.10 கோடிக்குச் சிறப்பு நிதி ஒதுக்கப்பட்டதில் இம்மாவட்டத்தில் மட்டும் கடந்த அடைப்புக் காலத்தில் மொத்தம் ரூ.322.23 இலட்சம் மதிப்பில் 274 பணிகள் செய்துமுடிக்கப்பட்டுள்ளன.

தமிழக அரசால் திருவாரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி கோவிலுக்குச் சொந்தமான கமலாலயம் திருக்குளத்தின் உள்வரத்து மற்றும் வெளிப்போக்கினை அபிவிருத்தி செய்வதற்கு அரசாணை எண்.140 நாள் : 2-4-97-ல் ரூ.29 இலட்சத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.



**நெஞ்சையள்ளும் திருவாரூர் மாவட்ட நஞ்சை நிலக்காட்சி**

# திருவாரூர் நகராட்சி மன்றம்



திருவாரூர் நகராட்சி மன்றத் தலைவராக இருந்து சிறப்புறச் செயல்பட்டு வருகிறார், திருமதி. யசோதா தெட்சணாமூர்த்தி அவர்கள், இளமை முதலே பொதுத்தொண்டில் பெரும் நாட்டமுடையவராக இருந்து வரும் இவர், பி.ஏ. வரை படித்திருக்கிறார்; வயதில் ஐம்பதைக் கடந்திருக்கிறார். இருந்தாலும் கூட சிறிதும் கர்வமோ, ஓயாத உழைப்பால் வரும் அயர்வோ அவரிடம் காணப்படவில்லை.

1996 - 97ம் ஆண்டுக்கு, 10.47 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள திருவாரூர் நகராட்சியின் மேம்பாட்டுக்காக ரூ.98.32 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது.

"அந்தத் தொகையில் என்னவெல்லாம் செய்தீர்கள் ?" என்று கேட்டபோது, அவர் தெரிவித்தது இது :

"நகராட்சி மன்றத்திற்காக 2 லாரிகள், ஒரு புல்டோசர் வாங்கப்பட்டது. தட்டுப்பாடற்ற குடிநீருக்காக ரூ.10 இலட்சம் செலவிடப்பட்டது. தெருவிளக்கிற்காக ரூ.10 இலட்சம் செலவாயிற்று. அதாவது 450 டியூப் லைட்டுகள், 150 சோடியம் விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன. வெள்ள நிவாரண நிதிக்காக ரூ.21 இலட்சம் அளிக்கப்பட்டிருக்கிறது.."

இவையெல்லாம் தவிர திருவாரூர் மாவட்டப் பரவலாக்கத் திட்டத்திற்காக 7 பணிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

"இந்த மாதிரி பொதுவான பல நல்ல வேலைகளுக்காகவே அத்தொகை செலவிடப்பட்டிருக்கிறது; இதற்காக முதலமைச்சர் அவர்களே பாராட்டியிருக்கிறார்" - என்றார் நகராட்சி மன்றத் தலைவர்.



திருவாரூர் நகராட்சிமன்றக் கட்டுப்பாட்டின் கீழ், 149 தெருக்கள், 39 முக்கியச் சாலைகள் இருக்கின்றன. 30 வார்டுகள் உள்ளன. ஆதிதிராவிடர்கள் வார்டு 4, பெண்களுக்கான வார்டுகள் 10; இதில் ஆதிதிராவிடப் பெண்களுக்கான வார்டுகள் 2; பொது வார்டுகள் 8 ஆகும்.

1997 - 98 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 1.2 கோடியில் மேற்கண்டவற்றில் 48 சந்துகளுக்கு சிமெண்ட் சாலை போடப்பட்டிருக்கிறது. 102 தெருக்களுக்கும், 19 சாலைகளுக்கும் தார் போட்டிருக்கிறார்கள்.

1914 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டிருக்கிறது, இந்தத் திருவாரூர் நகராட்சி மன்றம். அப்போது, நீதிக் கட்சியைச் சேர்ந்த பாவா கெங்கப்ப முதலியார் என்பவர்தான் முதலாவது நகராட்சி மன்றத் தலைவராக இருந்திருக்கிறார்.

30 பேரை உறுப்பினர்களாகக் கொண்ட திருவாரூர் நகராட்சி மன்றத்தின் நடவடிக்கைகள் அப்பழுக்கற்றவையாக இருக்கும்படி மிகக் கவனத்தோடு கவனித்து வருவதாகச் சொன்னார், யசோதா தெட்சணாமூர்த்தி. இந்த நகராட்சி ஆணையராகத் திரு.பத்மநாபன் இருக்கிறார்.

"இந்த ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் 230 சோடியம் ஆவி விளக்குகள், 1,248 டியூப்லைட்டுகள் எல்லாம் போடப்படும்; கொடிக்கால் பாளையம் மகப்பேறு நிலையம் கட்டி முடிக்கப்படும். பாதுகாக்கப்பட்ட குடிநீருக்காக ரூ.20 இலட்சம் செலவிடப்படும். சுதந்திர தினப் பொன்விழா ஆண்டு - தேசியக் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.11.15 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதில், மருத்துப்பட்டினத்தில் சோடியம் விளக்குகளும், ஒரு சிமெண்ட் சாலையும் ஒரு தார்ச்சாலையும் போடப்பட்டது. இங்கே திருவாரூரிலிருந்து நன்னிலம் போகும் சாலையில் - ஊர்க்கடைசியில் நாலுகால் மண்டபம் அருகில், இரண்டு இலட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட மேநிலை நீர்த்தேக்கத்தொட்டி ஒன்று கட்டவிருக்கிறோம். திருவாரூருக்கே அம்மையப்பனிலிருந்துதான் குடிநீர் வருகிறது; அந்தத் தொட்டி கட்டிவிட்டால் திருவாரூர் நகரவாசிகளுக்குத் தண்ணீர்த் தட்டுப்பாடு வராது. மாவட்ட ஆட்சித்தலைவரும் அதற்கான பம்ப்செட்டுக்கு வகை செய்வதாக உறுதியளித்திருக்கிறார்" என்று திட்டங்களை அடுக்கிக் கொண்டே போனார் நகராட்சி மன்றத் தலைவர்.

நடப்பாண்டில் ஏற்பட்ட வெள்ளத்தில் மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டம் திருவாரூர் மாவட்டம். ஏழை விவசாயிகள் பலர் வீடிழந்தனர்; ஏராளனமான விளைநிலங்கள் நீரில் மூழ்கிப் பயிர்கள் நாசமாயின; ஆகவே, இங்கே மட்டும் வெள்ள நிவாரணத்திற்காக ரூ.50 இலட்சம் பாதிக்கப்பட்டோருக்குத் தரப்பட்டிருக்கிறது. அத்தொகையிலேயே பழுதான சாலைகளைச் சீரமைப்பது, கழிவு நீரகற்றல், வடிகால் தொடர்பான பணிகளையும் செய்திருக்கிறார்கள்.

தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் தன் பங்கிற்குக் கொடுத்த ரூ.1½ இலட்சத்தில், தியாகராசர் கோயில் தெப்பக்குளத்தை யாரும் அசுத்தப்படுத்த முடியாதபடி, பாதுகாப்பு சிமெண்ட் வேலி அமைக்கவிருக்கிறோம்.

நாடாளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து தரப்பட்ட ரூ. 1½ இலட்சத்தில், சீராளன்தோப்பில் நவீன கழிப்பிடம் கட்டித் தரப்பட்டுள்ளது. சோமசுந்தரம் பூங்கா நவீனமயமாக்கப்பட்டிருக்கிறது.

இதெல்லாம் தவிர, 10 இலட்சம் ரூபாய் செலவில், சபாபதி முதலியார் முனிசிபல் நடுநிலைப்பள்ளி, அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளியாக நிலை உயர்த்தப்பட்டிருக்கிறது.

"எல்லாம் சரி, இவ்வாறான பொதுப்பணிகளில் முழுமூச்சோடு தாங்கள் ஈடுபட உங்கள் குடும்பச் சூழ்நிலை ஒத்துவருகிறதா ?" என்று நாம் கேட்க, அவர் அதற்குச் சொன்ன பதில் -

"என்னுடைய கணவர் தெட்சணாமூர்த்தி அவர்கள், திருவாரூர் மாவட்ட ரோட்டரி சங்கத் தலைவராக இருக்கிறார். அவரும் பில்டிங் கான்ட்ராக்ட் போன்ற பணிகளில் முழுமூச்சோடு ஈடுபாடு கொண்டவர். எனக்கு இரண்டே ஆண்பிள்ளைகள்தான். ஆகவே, குடும்பத்தைப் பொறுத்தவரை எந்தப் பிரச்சினைக்கும் இடமில்லை. நானும், அந்தவகையில் செயலாற்றிவருகிறேன்." என்று தன்னம்பிக்கையோடு தெரிவித்தார் திருவாரூர் நகராட்சி மன்றத் தலைவர் திருமதி. யசோதா தெட்சணாமூர்த்தி அவர்கள்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

## சாலை வசதி

*திருவாரூர் மாவட்டத்தில் உள்ள...*

| | கி.மீ. |
|---|---|
| தேசிய நெடுஞ்சாலை | - 43.00 |
| மாவட்ட நெடுஞ்சாலை | - 394.00 |
| மாவட்டத்தில் உள்ள பிறசாலைகள் | - 782.90 |
| ஊராட்சி ஒன்றியச் சாலைகள் | - 992.00 |
| ஊராட்சிச் சாலைகள் | - 500.40 |



# 'கலைஞரின் நட்பு'

-தென்னன்



"திருவாரூர்ங்கிற ஐந்தெழுத்தைச் சொன்னாலே பக்தகோடிகளுக்கெல்லாம் தியாகேசர்ங்கிற ஐந்தெழுத்துதான் ஞாபகத்துக்கு வரும்; ஆனா என்னாட்டம் ஆசாமிங்களுக்கெல்லாம் கருணாநிதிங்கிற ஐந்தெழுத்துக் கலைஞர் பேருதான் ஞாபகத்துக்கு வரும்!" என்றார் இளமைக் காலம் முதலே கலைஞரோடு நெருங்கிப் பழகிவருபவரான திரு. கு.தென்னன்.

சதாசிவன், சிவசங்கரன், கோவிந்த பிச்சை, கம்யூனிஸ்ட்டைச் சேர்ந்தவரான தம்புசாமி, விசுவநாதன், நல்லாசிரியர் விருதுபெற்ற வரதராசன் - என்று, கலைஞரை நன்கறிந்தவராகத் திருவாரூரில் இப்போது வாழ்ந்திடுவோர் பட்டியல் நீண்டுகொண்டே போகும். ஆனால், யாராவது ஒருவரிடம் இதுபற்றிக் கேட்டறிந்தால் போதும் என்று முடிவு செய்த நாங்கள் தென்னனைப் பார்த்தால் போதும்என்று முடிவெடுத்தோம்.

அங்குள்ள கமலாம்பிகா கூட்டுறவு வங்கியின் தலைவராக இருந்து வருகிறார் இவர். இப்போதும் சரி; மாதம் இரண்டு மூன்று தடவையாவது சென்னைக்கு வந்து கலைஞரையும், அவர் குடும்பத்தாரையும் நலம் விசாரித்துச் செல்லாவிட்டால் தென்னனுக்குத் தூக்கம் வராதாம்!

"சிறு வயது முதலே உங்களுக்கும் தமிழக முதலமைச்சராக உள்ள கலைஞர் அவர்களுக்கும் பழக்கமுண்டு என்கிறார்களே, அதெப்பிடி ஏற்பட்டது?"

சில நிமிஷ யோசனைக்குப்பின் அவர் பேசத் தொடங்கினார் - "பக்கத்தாப்ல இருக்கிற திருக்குவளை கிராமம்தான் அவரோட சொந்த ஊர். அங்கே இருந்த பாடசாலைல, ஐந்தாம் வகுப்புக்கு மேல கிடையாது. அதனால, அவரை மேலே படிக்க வைக்கணும்னுதான் அவங்க குடும்பமே இந்தத் திருவாரூருக்கு வந்து சேர்ந்தது; நானும் அவரும் அன்று ஒரே கொள்கையுடையவர்களாக இருந்ததால் எங்கட்குள் ஒரு குடும்ப நட்பு ஏற்பட்டது. அந்த நட்பே இன்றுவரை நீடிக்கிறது.



கலைஞர் பிறந்த இல்லம் - திருக்குவளை

"இளம் வயதிலேயே சுயமரியாதை இயக்கத்துல அவருக்கு அழுத்தமான பிடிப்பு ஏற்பட்டது எப்படிங்க?"

பழைய காலத்தை மீண்டும் நினைவு கூர்வதுபோல் எங்கோ பார்த்தபடி கேட்டார் - "இதை அவ்வளவு சுருக்கமா சொல்லமுடியாதுங்களே!"

"விரிவா... விளக்கமாகவே சொல்லலாம்" என்றோம் நாம்.

"மேல்ஜாதி கொடுமை, கீழ்ஜாதி கொடுமை, அக்கிரகாரத்தில் மேலே துண்டு போட்டுக் கொண்டோ, காலில் செருப்பு போட்டுக் கொண்டோ போகக் கூடாது என்ற கொடுமை. இக்கொடுமைகளை, பார்த்துதான் எங்கட்கு சுயமரியாதை கொள்கைப் பற்றும், பெரியார் மேல் பக்தியும் ஏற்பட்டது. நீதிக்கட்சியின் பதினாலாவது மாநாடு திருவாரூர்மில்லுல நடந்த காலம் அது. முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ., அப்போதைய காங்கிரசில் இருந்த ஆங்கிலேயப் பிரதிநிதிகள்லாம் வந்து கலந்துகிட்டாங்க. இதுக்குக் கொஞ்சம் முன்னால.... அதாவது 1938 அல்லது 39ன்னு நினைக்கிறேன். 'தமிழ்நாடு தமிழருக்கே'ங்கிற முழக்கத்தைப் பெரியார் எழுப்பினார். இப்பல்லாம் கட்சிக்கொடி நிறத்துல வேட்டியோட கரையெல்லாம் போடுறாங்களே, அதாட்டம் அப்பல்லாம் 'தமிழ்நாடு தமிழருக்கேன்னு' வரிசையா எழுத்துக்களைக் கரையாப் போட்ட வேட்டியெல்லாம் வரும்; நிறையப் பேர் கட்டீருப்பாங்க"...

"சரி, மாநாட்டுக்கு வருவோம்..."

"என்.எஸ். சாமியப்ப முதலியார்தான் அந்த மாநாட்டுக்கு வரவேற்புக் குழுத்தலைவர். டி.என்.ராமன், டி.என். லட்சப்பா எல்லாம் கலந்துகிட்டாங்க. அவங்களோட நாங்களும் சேர்ந்து மாநாடு தொடர்பான வேலைகளையெல்லாம் பார்த்தோம். அப்பத்தான் முதன்முதல்ல, அறிஞர் அண்ணாவிடம் இளைஞர் கலைஞரை அறிமுகம் செய்துவைத்தார் டி.என்.இராமன். அந்த மாநாட்டிலதான் தமிழ்நாடு தமிழருக்கேங்கிற கோஷத்தை 'திராவிட நாடு திராவிடருக்கே'ன்னு மாற்றித் தீர்மானம் கொணர்ந்தாங்க'...



திருவாரூர் கோயில் தெப்பக்குளமான கமலாலயம்

"அதனடிப்படையில, 1944ல் சேலத்துல நடந்த 15வது மாநாட்டுலதான் திராவிடர் கழகமே உதயமாச்சு - இல்லே?"

"ஆமாமா. இதையெல்லாம் ஏன் இப்ப ஞாபகப் படுத்தறேன்னா.. அப்படியெல்லாம் இயக்கங்கள் உண்டாகிற அளவுக்கும் மாநாடுகள், ஊர்வலங்கள் நடத்தற அளவுக்கும் பெரும்பான்மை மக்களிடையே எழுச்சி மூள்ற அளவுக்கு அப்ப நாட்டு நிலைமை இருந்தது; சாதிமதப் பாகுபாடு, ஏழை பணக்காரர் வேறுபாடு மாதிரி ஏற்றத்தாழ்வெல்லாம் அதிகமாக இருந்தது; கடவுள் பெயரால் மூட நம்பிக்கையெல்லாம் ஏற்படுத்தப்படுற நிலைமை, கோயிலுக்குள்ள ஆதிதிராவிடர் வரக்கூடாதுங்கிற நிலைமையெல்லாம் இருந்தது. இதனால உண்டான ஆத்திக நாத்திக அமளியெல்லாம் இருந்தது. இப்படிப்பட்ட நிலைமையெல்லாம் மாறனும், எல்லோரும் சமம்கிற தத்துவத்தை நாட்டுமக்கள் உணரவைக்கனும்னெல்லாம் அப்பத்தான் பெரியார் ஓங்கிக் குரல் கொடுத்தார்; ஊர் ஊராகப் போயி பிரச்சாரம் செய்தார். பகுத்தறிவுபூர்வமான அவர் கருத்தை ஆதரிச்சவங்கள்ளாம் அவர் பக்கம் போனாங்க. நம்ம கலைஞர் அவர்கள் சுயமரியாதை இயக்கத்தால் ஈர்க்கப்பட்ட சந்தர்ப்பமும் அதுதான்!"

"அப்ப... அவர் வீட்லயெல்லாம் இதுபத்திக் கண்டிக்கமாட்டங்களா?"

"ஒரே பையன்னு செல்லம்; எதைப் பத்தியும் அவ்வளவா கண்டுக்கவும் மாட்டங்க - கண்டிக்கவும் மாட்டங்க."



கலைஞரை ஈன்றெடுத்த தாயார் அஞ்சுகம் அம்மையார் - தந்தையார் முத்துவேலர்

"சரி, காங்கிரஸ் கட்சி பற்றிக் கலைஞரோட மதிப்பீடு அப்ப எப்பிடி இருந்தது?"

"சொல்றேன்!" என்றபடி நிமிர்ந்து உட்கார்ந்தார் தென்னன். "உண்மையான தியாகிங்களை சிறு வயது முதலே நல்லபடி மரியாதை கொடுத்து மதிக்கிற குணம் கலைஞருக்கு உண்டு. இவர் திருக்குவளைல இருக்கிறப்ப, அதாவது பத்து வயசாகிறதுக்குள்ளேயே நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்றேனே! வயதான பெரியவர் ஒருவர். கதராடை, கதர்க்குல்லாய், கையில் காங்கிரஸ் கொடி, தோள்ல ஒரு கதர்ப்பை சகிதம் எப்போதாவது திருக்குவளைப் பக்கம் ஒரு ஓட்டை சைக்கிள்ல வருவார். வந்தேமாதரம், ஜெய்ஹிந்த் முழக்கமெல்லாம் போட்டுட்டு, சுத்தி நிக்கிற ஜனங்களைப் பார்த்து இந்திய விடுதலையைப் பற்றியும், அதுக்கு எல்லாரும் போராட வேண்டும். காந்தி, நேரு போன்றவர்கள் ஜெயில்லே எப்பிடியெல்லாம் வதைப்படுகிறார்கள் என்றெல்லாம் ரொம்ப உருக்கமா பேசுவார். அவர் பேச்சுல அப்பிடியே லயிச்சுப் போய் நிற்பார் இவர்; "இவராட்டம் நாமும் நாட்டுக்கும், மக்களுக்கும் தியாக உணர்வோட பாடுபடனும்" என்பார். அப்படி உண்மைத் தியாகிகளை மதித்துப் போற்றிப் பாராட்டும் குணம் அப்பவே பசுமரத்தாணிபோல அவர் மனசுல பதிஞ்சிருந்தது. அந்த உணர்வுதான் அவர் எம்.எல்.ஏ., ஆகி, கழகப் பொருளாளர் ஆகி, தலைவர் ஆன இப்போதும் அவருக்குப் புகழும் பெருமையும் சேரக் காரணமா இருக்குங்கிறது என்னோட கருத்து".

"தொண்டர் கலைஞர் - தலைவர் கலைஞர்... இந்த இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் என்னங்க?"



1936-ல், திருவாரூருக்குக் கலைஞரின் குடும்பம் வந்த பிறகு - அவர் தங்கிப் படிக்கவும், 'மாணவர் நேசன்', 'முரசொலி' ஆகிய ஏடுகள் தொடங்கவும் மூலாதாரமாக இருந்த இல்லம்.

"முதலமைச்சர் கலைஞரையும் சேர்த்துக்குங்க!" என்று கூறிச் சிரித்து விட்டு, மேலே தொடர்ந்தார் அவர் - "எல்லாக் கலைஞரும் எனக்கு ஒரே மாதிரிதான் தெரியறார். எப்போதுமே தான் ஒரு பொறுப்பை ஏத்துக்கிட்டா... பிடிவாதமா அதை நல்லபடி நிறைவேத்தனும்ன்னு நிப்பார். நிறைவேத்திக் காட்டுவார். 1958ல் இதே திருவாரூர்ல தி.மு.க. மாநாட்டை அவரே முன் நின்று நடத்தினார். பந்தல் அலங்காரம், பந்தல்ல முக்கனித் தோரணம், வர்ற தொண்டர்கள் தங்க வசதி, சாப்பாட்டு வசதின்னு எல்லாத்தையும் அவரே எடுத்துப் போட்டுக்கிட்டு கவனிச்சார். அதுமட்டுமல்ல; கொடி கட்றது, தோரணம் கட்றது, நோட்டீஸ் குடுக்கிறது, போஸ்டர் ஒட்றது எல்லாத்துக்கும் தானே முன்னால வந்து செய்வார். அப்படிச் செய்தாதான் அவர் மனசு திருப்திப்படும். எந்த ஒரு காரியத்தையும் செய்து முடிக்கிறவரை தூங்க மாட்டார். எனக்குத் தெரிஞ்சி அண்ணா இருந்தப்ப அதிக வசூல் காட்டின முதல் மாவட்ட மாநாடே அதுதான்னு ஞாபகம். தலைவரானாலும், முதலமைச்சரானாலும் அந்த மாதிரி குணமெல்லாம் எப்பவும் அவர்கிட்டேயிருந்து மாறலியே!' ஒரு உதாரணம்-

1943ல் திருச்சிராப்பள்ளியில வட மண்டல திராவிட மாணவர் மாநாடு நடந்தது. கலைஞரும், நானும், தவமணிராசனும் போயிருந்தோம். நல்லா நடந்தது. அங்கேர்ந்து திரும்பி வரும்போது அதைவிடச் சிறப்பா நாமும் நம்ம திருவாரூர்ல ஒரு மாநாடு நடத்திக் காட்டனும்னார், கலைஞர். அப்படி திருவாரூர்ல நாங்க நடத்துனதுதான் தென்மண்டல திராவிட மாணவர் மாநாடு!"

"அடடே, அப்பிடியா?"

"ஸ்கூல்ல படிச்சுக்கிட்டிருந்த காலத்துலேயே சிறுவர் சீர்திருத்தச் சங்கம், மாணவர் ஒற்றுமைச் சங்கம்னெல்லாம் ஆரம்பிச்சு திறமையா நடத்தினார். எதைச் சாதிக்கனும்னாலும் நமக்குள் ஒற்றுமை இருக்கவேண்டியது அவசியம்பார். அதெல்லாம் ஒரு சாதாரண அமைப்பா இருந்தாலும்கூட, அதுக்கெல்லாம் அப்பவே முறைப்படி தேர்தல் நடத்தித்தான் தலைவர், செயலாளர், பொருளாளரையெல்லாம் தேர்ந்தெடுப்பார். ஆறாவது படிக்கும்போதே - 12 வயசுலேயே அவருக்கு இருந்த இதுமாதிரி குணங்கள்தான், 74 வயசாகிற இன்னிக்கி கழகத்தை ஜனநாயக அமைப்பாக நடத்தி வருகிறார். இந்த நாட்டையும் நல்லபடியா நிர்வகித்து வருகிறார்!"

"திருவாரூர்லயிருந்து முரசொலி துண்டு வெளியீடு வந்தப்ப... நீங்கதான் கிளைக் கழகச் செயலாளரா இருந்தீங்க போலிருக்கு?"

"ஆமா, சீர்திருத்த இயக்கத்திலே இருந்தேன். அப்பக்கூட கலைஞர் இப்பிடித்தான் - எழுதறது, புரூப் படிக்கிறது, பக்கம் போடறதுன்னு மட்டும் நின்னுடமாட்டார். தானே, போஸ்டாபீசுக்குத் தலையில 'பண்டிலா' கட்டி சுமந்துகிட்டுப் போவார். முதன் முதல்ல அந்தத் துண்டறிக்கையைத் தாமா முன்வந்து எங்களுக்கு அச்சடிச்சு முரசொலியை கொடுத்தவரே அப்ப திருவாரூர்ல இருந்த ஒரு காங்கிரஸ்காரர்தாங்க; நல்ல ஆத்திகரும் கூட".

''திருவாரூர்ல முரசொலி துண்டுப் பிரசுரம் நடத்தினப்ப நடந்த முக்கியச் சம்பவம் ஏதாவது...''

''ஏதாவதா? நிறைய இருக்கு. ஒண்ணு வேணும்னா சொல்றேனே! சிதம்பரத்துல அப்ப நடத்தப்பட இருந்த வருணாசிரம மாநாட்டை இவர் அதுல கண்டிச்சு எழுதப்போயி... அதனால இவரே சிதம்பரத்துக்குள்ள வரப்பிடாதுன்னு தடை போட்டுட்டாங்க. இதுவரைக்கும்... நிறையப்பேர் அதைப்பத்திப் பேசியிருக்காங்க எழுதியிருக்காங்க. இதுல முக்கியமான சேதி என்னன்னா... அப்ப இருந்த வெள்ளைக்காரக் கலெக்டர், கலைஞர் எழுதியிருந்ததுபத்திப் புரிஞ்சிகிட்டு, அந்த மாநாட்டையே சிதம்பரத்துல நடத்துக்கூடாதுன்னு தடைவிதிச்சிட்டார்னு ரொம்பப் பேருக்குத் தெரியாது!''

''அந்தக் காலத்துல ஒங்கரெண்டு பேருக்கும் பொழுதுபோக்கு என்னவா இருந்ததுங்க?''

சிரிப்புடன் ஆரம்பிக்கிறார் - ''எதைச் சொல்றது, எதை விடறதுன்னு தெரியலே. திருவாரூர் கடைத்தெருவுல பி.ஒ.ராஜகோபால்ன்னு ஒருத்தர் காசுக்கடை வெச்சிருந்தார். அவர்தான் அப்ப இந்த ஊர் திராவிடநாடு பத்திரிகை ஏஜெண்ட். திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவரும் கூட. நேரம் கிடைக்கிறப்பவெல்லாம் அங்கபோய் உட்கார்ந்துக்குவோம். கலைஞர்... உரத்தகுரல்ல... என்கிட்ட பேசறாப்ல, சீர்திருத்த கருத்துக்களைப் பத்தியெல்லாம் பேச ஆரம்பிப்பார். போற வர்ற ஜனங்க மட்டுமில்லாமெ... அடுத்த எதிர்த்த கடைக்காரவங்கள்ளாம் வந்து நின்னு கூட்டமா கேட்டு ரசிப்பாங்க. இதனால... அவங்க வியாபாரம் பாதிச்சிருக்கும் போலிருக்கு - 'இங்கு வியாபாரம் தவிர வேறு எதுவும் பேசக்கூடாது'ன்னு ஒரு நாள் போர்டு எழுதி வெச்சுட்டாங்க. மறுநாள் அதைப் போய்ப் பார்த்ததும் கலைஞர் என்ன செய்தார்ன்னா... ஒரு கல்யாணத்துக்கு அன்பளிப்பு தர ஒரு வெள்ளி டம்ளர் வாங்கறாப்ல வாங்கி, அதைக் கையில வெச்சுகிட்டு விலைபேசறதும்.. என்கிட்ட ''ஊரு எவ்வளவு கெட்டு போச்சுப் பார்த்தியா?'', ''திராவிட நாட்டுல அண்ணா எழுதிருந்ததைப் படிச்சியா?'' அப்படீன்னெல்லாம் எப்போதும் போலப் பேச ஆரம்பிச்சுட்டார். எங்க தந்திரத்தைக் கடைக்காரரும் மத்தவங்களும் புரிஞ்சுகிட்டாங்க. இவனுங்களை ஜெயிக்க முடியாதுன்னு முடிவு பண்ணி.. மறுநாளே அந்த போர்டை எடுத்துட்டாங்க!''

- இவ்வாறு சொல்லிவிட்டு அவர் சிரிக்க, அவரோடு நாமும் சேர்ந்து சிரித்தோம்.

''தியாகராசர் கோயில்ல தேன் குழல்னு ஒரு பலகாரம் விற்கும்; ஓரணா விலை. அதை வாங்கிச் சாப்பிட்டுக்கிட்டே கோயிலுக்குள்ளே போயி நண்பர்களோட சேர்ந்து... எங்கனா உட்கார்ந்து மணிக்கணக்குல பேசுவோம். எல்லாம் பகுத்தறிவு... சீர்த்திருத்தம் பத்தின சமாச்சாரங்களாத்தான் இருக்கும். அப்புறம் கால் பந்தட்டாம்னா கலைஞருக்கு ரொம்பப் பிடிக்கும்; நல்லாவும் ஆடுவார். கமலாலயம் குளத்துல நீச்சலடிப்போம்.

''ஓ, நீச்சல்னதும் ஞாபம்வருது. அதுபத்தி... கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரா இருந்த கல்யாணசுந்தரம் கூட ஒரு தடவை பேசீருக்காரில்லே?''



'முரசொலி' கையேடு நடத்திய காலத்தில், செயலாளராக இருந்த திரு.கு.தென்னன் அவர்களுக்கு, அந்த ஏட்டின் பவள விழாவின்போது பாராட்டி பொன்னாடை அணிவித்தார் முதலமைச்சர் கலைஞர்; முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் உடன் இருக்கிறார்.

"அவர் பேசல... அவர் சொன்ன ஒரு சமாச்சாரத்துக்குப் பதில் சொல்றப்ப கலைஞர்தான் குறிப்பிட்டார். அதாவது, எதையும் ஆரம்பிக்கத்தான் கலைஞருக்குத் தெரியுமே தவிர, சரியா முடிக்க மாட்டார்னு ஒரு சமயம் கல்யாணசுந்தரம் பேசினார். நானும் அவரும் மாணவரா இருந்த காலத்துல... கமலாலயம் குளத்துல இக்கரையிலிருந்து அக்கரைக்குப் போவோம்னு பேசிகிட்டு நீச்சலடிக்க ஆரம்பிச்சோம். பாதி குளத்துல இருக்கிற மையமண்டபம் போனதும் நான் களைச்சுப் போயிட்டேன்; என்னால முடியலே; போசாமெ திரும்பிப்போயிறலாம்னேன், கலைஞர் விடலை; வந்த தூரமும்.. அக்கரைக்குப் போக வேண்டிய தூரமும் ஒன்னுதானேய்யா, குதிச்சி நீஞ்சு, அக்கரைக்கே போயிருவோம்னு குதிச்சுட்டார். வேற வழியில்லாமெ படாத பாடுபாட்டு... ஒரு வழியாப் போய்ச்சேர்ந்தேன். இந்தச் சம்பவத்தைச்சொல்லி - 'எதையும் பாதியில் விட்டுவிடும் குணம் எப்போதுமே இந்தக் கருணாநிதிக்கு இருந்ததில்லை! என்று கல்யாணசுந்தரத்திற்குப் பதில் சொன்னார், கலைஞர்."

**பேச்சு வழக்கு!**

**வயதில் மூத்தவர்களை "ஐயா" என்று அழைப்பதும், இளையவர்களை "வாய்யா", "என்னையா", "என்ன தம்பி" என்பதும் - பெண்களானால் "என்னம்மா", "என்னக்கா" என்பதும் திருவாரூர் மாவட்ட மக்களிடம் வழக்கிலிருக்கிறது.**

"பொறுத்தமான பதில்தான்" என்றோம் நாம்.

"சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம்னு வெறும் வார்த்தை அலங்காரத்திற்கு மட்டுமில்லை; சொன்னாப்லயே விடாப்பிடியா செய்துகாட்டுகிற பிடிவாத குணமும் அன்று முதலே கலைஞருகது உண்டு....!" என்றார் தென்னன்.

வேறு ஏதோ புதிய செய்திவரப்போகிறது என்று நாம் நினைத்தது வீண்போகவில்லை -

"இப்பல்லாம் பொதுத் தேர்தல்ல வேட்பாளரா நிக்கிறவங்க வாக்குறுதிகளை வாரி வழங்கறாப்ல, அந்தக்கால நகர மன்றத் தேர்தல்ல போட்டியிடறவங்களும் தர்றதுண்டு. அதுமாதிரி, இந்த ஊர்ல இருக்கிற ஒரு குளத்துள படித்துறை இல்லாம இருந்தது. குளிக்கப் போறவங்க - குறிப்பா பெண்கள் கஷ்டப்படுவாங்க. தேர்தல்ல போட்டியிடறவங்க 'அதை நான் கட்டித் தர்றேன்னு' சொல்லி லகுவா ஜெயிச்சுருவாங்க. அப்புறம் மறந்துடுவாங்க. அந்த மாதிரி ஒரு தேர்தல்ல வந்து, காங்கிரஸ்காரர் ஒருத்தர்... பெரிய பணக்காரர். அந்த வார்டுல நின்னார். அப்பவெல்லாம் கட்சி ரீதியா யாரும் போட்டியிடறதில்லை. ஆனா... கலைஞர் தூண்டுதல் பேர்ல, அந்த வார்டுல டாக்டர் விஜயராகவன் போட்டியிட்டார். அவரை ஆதரிச்சுப் பேசிய கூட்டத்திலேல்லாம் 'மற்றவர்கள் மாதிரியல்ல நாங்கள்; எங்கள் வேட்பாளர் ஜெயித்தாலும் ஜெயிக்காவிட்டாலும் கட்டாயம் அந்த படித்துறையைக் கட்டித்தருவோம்' என்று தவறாமல் அறிவித்து வந்தார். கடைசியில் அந்த வார்டில் காங்கிரஸ் வேட்பாளர்தான் ஜெயித்தார். ஆனால் கலைஞரோ, மக்களுக்குத் தாம் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக, அப்போதே மூவாயிரம் ரூபாய் செலவில் இந்தக் குளத்திற்குப் படித்துறை கட்டித் தந்து மக்கள் மதிப்பைப் பெற்றார்!"

"அறிஞர் அண்ணா அவர்கள் கலைஞர் மீது கொண்டிருந்து அன்பை விளக்கப் புதுசா ஏதாவது சம்பவம்?..."

"அப்படிப்பட்ட சம்பவங்கள் நிறையே இருக்குதுங்க. கிட்டத்தட்ட அதுல பாதிதான் மக்களுக்குத் தெரிஞ்சிருக்கும். கலைஞரா சொன்னாத்தான் மீதத்தை நாடு அறியும்!" என்றபடி, வசதியாக உட்கார்ந்து கொண்டு பேசினார் தென்னன்.

"கலைஞர் எதையும் சொன்னா சொன்னபடி செய்வார்ங்கிறது எவ்வளவு சரியோ, அதே மாதிரி காரியங்களைப் பரபரப்போடும் மிக வேகமாகவும் செய்து முடிப்பார். யாராவது அவர் முதுகுல குத்த முயற்சி பண்றதா தெரிஞ்சா, தன் முழுத்திறனையும் பயன்படுத்தி ஜெயிச்சுக் காட்டுவார். அப்பிடியொரு முரட்டுப் பிடிவாதகுணம். இதனாலேயே இவர்மேல எப்போதும் தனிப்பாசத்தோடும் கவலையோடும் இருந்தார் அண்ணா. இராஜாஜி டில்லியில் கவர்னர் ஜெனரலாக இருந்த நேரம் அது; அவர் தஞ்சாவூர் வர்றதா இருந்தப்ப, பள்ளி அக்கிரகாரத்துல அவருக்குக் கறுப்புக்கொடி காட்டப்படும் என்று கலைஞர் அறிவிச்சுட்டார். அதுமட்டுமில்லாமெ, சுத்துப்பட்ட ஊர்கள்லேல்லாம் போயி கூட்டம் நடத்தி, தாம் எடுத்த அந்த முடிவுக்கான காரணத்தையும் விளக்கிப் பல பொதுக்கூட்டங்களெ நடத்தி, பொது மக்கள் ஆதரவையும் திரட்டீட்டார். அப்போது கலைஞருக்கு... அண்ணா ஒரு நாலுபக்கக் கடிதம் எழுதினார். அதுல - "ஆட்சி அவர்கள் கையில் இருப்பதால் காவல்துறை மூலம் கண்மூடித்தனமாகத் தண்டிப்பார்கள். ஆகவே, ஒரு இடத்தில் மட்டும் கறுப்புக்கொடி காட்டுவதோடு நிறுத்திக் கொள்ளவும். உன் மூலம் ஆகவேண்டிய காரியங்கள் இன்னும் ஏராளம் இருக்கிறது என்றெல்லாம் குறிப்பிட்டிருந்தார்" - என்று சொன்ன திரு. கு. தென்னன் அவர்கள், அக் கடிதத்தையும் தேடிப்பிடித்துக் கொண்டுவந்து நமக்குக் காட்டினார்.

உள்ளபடியே, அவர் தொடக்கத்தில் சொன்னது போலக் கலைஞருக்கும் அவருக்கும் உள்ள தொடர்பை விளக்க ஒரு தனிப்புத்தகமே எழுதி வெளியிடலாம்; அவ்வளவு சங்கதிகள் இருக்கின்றன!

**- பி.எல்.ராஜேந்திரன்**



# திருவாரூர் தியாகராசர்

‘திருவாரூரில் பிறந்தால் முக்தி’ என்றெல்லாம் பக்தகோடிகள் பலபடப் பாராட்டக் காரணமாக விளங்குவது - திருவாரூரில் விண்தொட நிற்கும் அழகுமிகு கோபுரங்களோடு கூடிய **அருள்மிகு தியாகராசர் கோயில்தான்.**

இறைவன், லிங்க வடிவில் காட்சிதரும் சப்தவிடங்கத் தலங்கள் 7 ஆகும்.

திருவாரூர், திருக்காரவாசல், திருக்குவளை, திருவாய்மூர், திருநாகை, திருமறைக்காடு, திருநள்ளாறு- ஆகியவைகளே அவை. அவற்றுள் முதல் இரண்டு தலங்களும் திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்தவை.

அடுத்துள்ள நான்கும் நாகை மாவட்டத்தில் இருக்கின்றன. கடைசியாக உள்ளது புதுவை மாநிலத்தில் இருக்கின்றது.

15 ஏக்கர் பரப்பளவில் - சரியாகச் சொல்லுவதானால் 6,53,400 சதுர அடி பரப்பளவில் அருள்மிகு தியாகராஜ சுவாமி கோயில் பரவியிருக்கிறது.

கோயில் குளமான கமலாலயத்தின் பரப்பளவோ 18 ஏக்கர்; அதாவது 7,84,080 சதுர அடி.

தெற்கு வடக்காக 666 அடி நீளமும், கிழக்கு மேற்காக 846 அடி அகலமும் உடைய இந்தக் கோயிலின் பாதுகாப்பு அரணாக விளங்கும் மதில் சுவரின் உயரம் 30 அடி.

தியாகராஜ சுவாமிகள் திருக் கோயிலின் கிழக்கே உள்ள கீழ ராஜ கோபுரத்தின் உயரம் 118 அடி; மேற்கிலும், வடக்கிலும் உள்ள கோபுரங்களின் உயரம் தலா 101 அடி; தெற்குக் கோபுரம் மட்டும் அவற்றையெல்லாம் விட சற்றுக் குள்ளம்.

## கோபுரங்கள் - விமானங்கள்

இன்னும் தெளிவாகச் சொல்லுவதென்றால் - ஒன்பது ராஜகோபுரங்கள், 80 விமானங்கள், 12 பெரிய மதிற்சுவர்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க 13 மண்டபங்கள், 15 கிணறுகள், 3 நந்தவனங்கள், 3 பெரிய பிரகாரங்கள், நூற்றுக்கு மேலான சந்நிதிகள் இக்கோயிலுக்குள் அடக்கம்.

இங்குள்ள பஞ்சமுக வாத்தியம் எனப்படும் குடமுழா வாத்தியம் பற்றித் தேவாரத்திலேயே பாடப்பட்டிருக்கிறது.

திருவாரூரின் கீழவிதியில் இருக்கின்ற அருள்மிகு பழனியாண்டவர் திருக்கோயிலும், சன்னதி தெருவில் இருக்கின்ற அருள்மிகு திருநீலகண்ட சுவாமிகள் திருக்கோயிலும் இந்தத் தியாகராசர் கோயிலின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. இந்தக் கோயிலோடு தருமபுரம் ஆதீனத்தின் கட்டுப்பாட்டில் உள்ள ராஜன் கட்டளை இருக்கிறது.



ஆரூர்க் கோயிலும் ஆழித் தேரும்



அரசு முதல்நிலை நிர்வாக அதிகாரி திரு.கே.நடராஜன் ஆலயப் பணிகளைக் கவனித்து வருகிறார்.

## 13 கட்டளைகள்

நஞ்சை சுமார் 856 ஏக்கர், 12 சென்ட்டும் - புஞ்சை சுமார் 1017 ஏக்கர், 99 சென்டும் இந்தக் கோயிலுக்கு உண்டு; நிர்வாகியின் கட்டுப்பாட்டில் இது இருந்தாலும், 13 கட்டளைகளுக்கு உட்பட்டே யாவும் உள்ளன; கோயிலுக்கென்று தனியே நிலம் எதுவும் இல்லை. எல்லாம் -

அபிஷேகக் கட்டளை, அன்னதானக் கட்டளை, அர்த்தசாமக் கட்டளை, விஷு புண்ணிய காலக் கட்டளை, உள்துறைக் கட்டளை, பாலாபி கட்டளை, சுக்கிரவாரக் கட்டளை, பரிவட்டக் கட்டளை, திருச்சாந்து கட்டளை, கற்பூரக் கட்டளை, லோகநாயகி அம்மாள் தர்மக் கட்டளை, தெப்பத் திருநாள் மண்டகப்படி கட்டளை, ஆலய அலுவலகம் - ஆகிய 13 கட்டளைகளுக்கு உட்பட்டே இருக்கின்றன.

இதனால், சுதந்திரமாகச் செயல்பட முடியாததனாலோ, போதுமான நீர்வளம் காணாத விளைநிலம்போல இவ்வாலயம் பொலிவிழந்து காணப்படுவதாக நமக்குள் ஓர் உணர்வு எழுகிறது. அண்மையில் நடைபெற்ற ஆழித்தேரோட்டம் கூட மிகச் சிரமத்துடனேயே நடத்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

ஆனால், தருமபுரம் ஆதீனத்தின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற ராஜன் கட்டளைக்கு மட்டும் 1942 ஏக்கர் 8.3 செண்ட் நிலம் இருக்கிறது.

மிகப்பெரிய கோயிலாக இருப்பதால் - திருவாரூர்க் கோயில் (தஞ்சைக் கோயிலை அடுத்து) 'பெரிய கோயில்' என்றே சைவர்களால் சிறப்பித்துக் குறிப்பிடப் படுகிறது.

↑

*சோழ வளநாடு சோறுடைத்து' என்ற சொற்கோவை புகழ் மிக்கதாகும். நீதி வழுவா நெறிமுறைக்கும் அந்த மண்ணில் பஞ்சமில்லை. மனுநீதிச்சோழன் தன் மகனையே தேர்க்காலில் இட்டு . பரிதவித்த பசுவுக்கு நீதி வழங்கினான் என்று பேசுகிறோமல்லவா? அந்தச் சரித்திரச் சம்பவம் நடைபெற்றது திருவாரூரிலேதான்!*

திருவாரூர் தியாகராசப் பெருமானுக்குத் தூதுவளைக் கீரையும், பாகற்காய் நைவேத்தியமும் படைக்கப்படுவது ஒரு சிறப்பாகும்.

இந்தக் கோயிலுக்குக் கடைசியாக 4-4-88ல்தான் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இங்கேயுள்ள உற்சவர் தியாகராஜ சுவாமிகள் எனினும் மூலவர் வன்னீகநாதசுவாமி (புற்றிடங்கொண்டான்) எனப்படுகிறார். அம்மன்களின் பெயர்கள் - நீலோற்பலம்பாள் (அல்லியங் கோதை), கமலாம்பாள்.

## பாதுகாப்பு மையம்

திருவாரூர் தியாகராசர் ஆலயத்தினுள்ளேதான் தமிழ்நாட்டிலேயே உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம் அமைந்துள்ளது, தக்க காவல் பலத்தோடு.

அயல்நாடுகளுக்குக் கடத்திச் சென்றோரிடமிருந்து அரும்பாடுபட்டு மீட்கப்பட்ட சிவபுரம் நடராசர்,

நெல் விளைச்சலுக்கு அடுத்தபடியாகத் திருவாரூர் மாவட்டத்தில் - கரும்பு, வாழை, தென்னை, பனை ஆகியவற்றின் விளைச்சல் அதிக அளவில் இருக்கிறது.



திருவேள்விக்குடி நடராசர், பத்தூர் நடராசர் போன்ற அற்புதமான தமிழக உலோகத் திருமேனிகள் பல இங்கேதான் மிகுந்த பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருக்கின்றன.

திங்கள், செவ்வாய், வெள்ளி ஆகிய வேலை நாட்களில் மட்டுமே மிகுந்த கண்காணிப்போடு அவற்றிற்குப் பூஜை நடைபெறுகிறது. இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் எஸ்.முனியப்பன் கவனிப்பில் இம் மையத்திலிருக்கின்ற கடவுட் சிலைகள் உள்ளன.

## கலைஞரால் ஓடிய ஆழித்தேர்

தென்னாட்டிலேயே திருவாரூர்த்தேர் மிகவும் பிரசித்தமாகும். 1926-ல் நேர்ந்த தீ விபத்தால் பாதிக்கப்பட்ட இத்தேர், 1930-ல் மறுபடியும் சீரமைக்கப்பட்டது. 96 அடி உயரமும், விழாக்கால அலங்காரம் எல்லாமுமாகச் சேர்த்து, 300 டன் எடை கொண்டது இது.

*'ஆழித்தேர் வித்தகனை*
*நான்கண்டது ஆரூரே'... !*

- என்று அப்பர் பெருமான் புகழ்ந்து பாடியிருக்கிறார். 'ஆழித்தேர்' எனில், 'கடல்போல் அகன்ற மேல்தட்டுடைய பெரிய தேர்' என்பதாகும்.

'வேதாரண்யம் விளக்கழகு', 'திருவாரூர் தேரழகு' என்பார்கள்.

சென்ற ஆண்டு மே திங்கள் 24,25,26 ஆகிய மூன்று நாட்களும் இந்தத் தேர் ஓடியது. இது நிலையிலிருந்து புறப்பட்டு, மீண்டும் அங்கே வர மூன்று நாட்களாகும்.

அஸ்த சாதாரண வருஷம், வைகாசி 3, ஞாயிற்றுக்கிழமை அஸ்த நட்சத்திரத்தன்று தான் நெடுங்காலத்திற்குப் பின், இத்தேர் ஓடியது!

நீண்டகாலம் ஓடாமல் கிடந்த இந்த ஆழித்தேரை, பெருமுயற்சி எடுத்துக்கொண்டு ஓடச்செய்த பெருமை கலைஞர் அவர்களையே சேரும். ஆம், 1970-ல் தமிழக முதலமைச்சராகக் கலைஞர் அவர்கள் இருந்தபோதுதான் நீண்ட காலத்திற்குப் பின் - அதாவது 25 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தத் தேர் ஓட வகை செய்யப்பட்டது!

இதற்கு அப்போது பெரிதும் உதவியவர்கள் BHEL நிறுவனத்தார் ஆவர். ஆம்; தேருக்கு ஏற்றபடி மிகப்பெரிய தேர்க்கால்களை - சக்கரங்களை - அவர்களே செய்து கொடுத்து உதவினார்கள். இதற்கு அங்கே அப்போது முனைந்து நின்றவர், பொதுமேலாளராக இருந்த திரு.கிருஷ்ணமூர்த்தி என்பவராவார்.

தேர்க்கால்கள் செய்திட அந்நாளில் ஆன செலவு, அப்போதைய மதிப்பீட்டின்படி ரூ.4 இலட்சம் என்கிறார்கள்.

அதற்குப் பிறகு இப்போதுதான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களால் ரூ. 2 இலட்சம் நிதிஉதவி செய்யப்பட்டு - ஆழித்தேர் எனப்படும் அந்த அலங்காரத்தேர் சென்ற மாதம் 26-ஆம் தேதி நகர்வலம் புறப்பட்டிருக்கிறது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் உற்சாக முழக்கத்தோடும் - நாதசுரம், பேண்டு வாத்தியம், கொம்பு, முரசம், எக்காலம், அதிர்வேட்டு, தேவார இசைப்பாடல்களின் முழக்கத்தோடும் இத்தேர் நகர்ந்து, நகர்ந்து வரும்போது - கமலாலயம் குளத்து நீரில் குமிழ் கிளம்புமாம் - அதிசயத்தோடு சொல்கிறார்கள் !

இந்தியா முழுவதிலும் உள்ள 64 சக்தி பீடங்களுக்கெல்லாம், ஆட்சிபீடமாக அமைந்துள்ளவை 5 ஊர்களாகும். அவை -

காசி (விசாலாட்சி), மதுரை (மீனாட்சி), காஞ்சி (காமாட்சி), திருவாரூர் (கமலாயதாட்சி), நாகை (நீலாயதாட்சி) ஆகியவையாகும்.

இக்கோயிலில் உள்ள அம்பிகை ஞானசக்தியாகவும் (கமலாம்பிகை), கிரியா சக்தியாகவும் (நீலோத்பலாம்பாள்), இச்சா சக்தியாகவும் (கொண்டி) வடிவு கொண்டுள்ளாள் என்பர்.

மதுரை சொக்கநாதர் 64 திருவிளையாடல் புரிந்தாரெனில் - திருவாரூர் தியாகேசப் பெருமாள் 364 திருவிளையாடல் புரிந்தார் என்கிறது புராண வரலாறு.

இங்குள்ள தேவாசிரியம் எனப்படும் ஆயிரங்கால் மண்டபத்தில் சைவ சமயச் சான்றோர் கூடி எடுக்கும் முடிவே, உலகெங்குமுள்ள சைவ சமயத்தினர் அனைவராலும் பின்பற்றப்படும் நிலைமை அந்தக் காலத்தில் இருந்திருக்கிறது.

## கமலாலயத்தில் படகோட்டம்

கோயில் குளமான கமலாலயத்தில்தான் திருவிழாக் காலத் தெப்போற்சவம் நடைபெறும்; இக்குளத்தில் எப்போதும் நீர் நிறைந்திருக்கிறது. இதன் நடுவே உள்ள சிறுகோயில் ஒன்றிற்குப் போய்வரவும், குளத்திற்குள்ளேயே குதூகலச் சுற்றுலா செல்லவும் என - தமிழக அரசு சுற்றுலாத்துறை மூலம் 20.4.98ல் இரண்டு படகுகள் விடப்பட்டிருக்கின்றன.

ஒன்று: காலால் மிதித்து 2 பேர் இயக்கிச் செல்லும் ஃபெடலிங் போட்; மற்றொன்று : 4 பேர் அமர்ந்து செல்லும் 'மோட்டார் போட்'. இதற்குக் கட்டணம் ரூ.3.

மைய மண்டபம் வரை மட்டுமே சென்றுவரத்தக்க வகையில், கயிறு கட்டி, அதைப் பிடித்தவாறே போய்வரத்தக்க இலவசப் படகு ஒன்றும் விடப்பட்டிருக்கிறது.

திருவாரூர் திருக்கோயிலுக்குச் சொந்தமான தெப்பக்குளம் (கமலாலயம்) கால்வாய்ச் சீரமைப்பிற்காகத் தமிழ்நாடு அரசால் ரூ.29 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தாய் உள்ளம்
என்பது
பெண்களுக்கு
மட்டுமே
உரியதல்ல; அது
வீரமுள்ள
ஆண்களுக்கும்
உரியதாகும் என்பது
என் வாதம்!

- கலைஞர்

## இசைப்பள்ளி

சங்கீத மும்மூர்த்திகள் பிறந்தது இந்தத் திருவாரூரிலேதான். எனவே, எங்கும் இசைமயமாக இருக்கும் தியாகராசர் கோயிலில், நாதசுரம் - தவில் ஆகியவற்றைக் கற்பிக்கும் இசைப் பள்ளியொன்று 3-6-97ல் அரசு இந்துசமய அறநிலையத்துறை மூலம் நடத்தப்பட்டு வருகிறது.

இதில் 15 சிறுவர்கள் மிகுந்த ஆர்வத்தோடு இங்கேயே தங்கிப் பயின்று வருகின்றனர்; இவர்களுக்கு இசை கற்பிக்க ஓர் ஆசிரியர் பணிக்கமர்த்தப்பட்டிருக்கிறார்.

## இலவசத் திருமணம்

அருள்மிகு தியாகராசர் திருக்கோயிலில் மாண்புமிகு தமிழ்நாடு அரசு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.மு.தமிழ்க்குடிமகன் அவர்களால் - 8.3.98 அன்று ஏழை எளியவர்கள் 55 ஜோடிகளுக்கு இலவசத் திருமணம் செய்துவைக்கப்பட்டது.

ஒவ்வொரு ஜோடிக்கும் அரசின் முறைப்படி, ஆலயப்பணிகளின் உபரி நிதியிலிருந்து தலா ரூ.3,000 பெறுமானமுள்ள பொருட்கள் வழங்கப்பட்டன. 2 கிராம் பவுனில் தாலி, வேட்டி- சட்டை - துண்டு, சேலை-ரவிக்கை, குடம், குத்துவிளக்கு, 2 தட்டு, குங்குமச் சிமிழ் போன்றவைகளே அவை.

திருமணத்தன்றும், அதற்கு முதல் நாளும் - மணம் செய்துகொள்ளும் ஒவ்வொரு தம்பதியரின் உறவினர்கள் 25 பேருக்கு 2 வேளைச் சாப்பாடு, வடை - பாயசத்தோடு போட்டுக் கோலாகலமாகத் திருமணத்தை நடத்தி, வழிச்செலவுக்கும் பணம் கொடுத்து அனுப்பிவைத்திருக்கிறார்கள்.

## பாடல்பெற்ற தலம்

அருகில் உள்ள மாவட்டத்தில் இருக்கின்ற சீர்காழிக்கு அடுத்தபடியாக, அதிகமான தேவாரப்பாடல் பெற்ற திருத்தலம் திருவாரூர்தான்.

அப்பர், சுந்தரர் சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகிய சைவசமயக் குரவர் நால்வராலும் பாடப்பெற்ற கோயில் இது. இக்கோயில் பற்றி 330 தேவாரப் பாடல்களும், திருவாசகப் பாடல்களும் இருக்கின்றன. வேறுபல பழம்பாடல்களும் உண்டு. தெலுங்கு, மராட்டிய, சமஸ்கிருத இலக்கியங்களிலும் இக்கோயில் பற்றிச் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

இங்கு வாழ்ந்த நம்பி ஆரூரன் (சுந்தரமூர்த்தி சுவாமிகள்) எழுதிய திருத்தொண்டத் தொகைதான், சேக்கிழாரின் பெரிய புராணத்திற்கே மூலம் எனப்படுகிறது.

'தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என்று முன்பு பாடப்பட்டிருப்பினும் - 'திருவாரூர் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்' என்று இத்'திருவாரூர்க் கோயிலைப் பாடவந்த சுந்தரமூர்த்தி நாயனார் பாடியிருப்பது குறிப்பிடத் தக்கது.

சிற்பச் சிறப்புகளும், ஓவிய வனப்பும் கொண்டு - எப்போதும் நாதசுர இசை தவழக் காணப்படும் இக்கோயில் கட்டப்பட்டது யார் காலத்தில் என்ற வரலாறே இல்லை! எல்லாப் பிரகாரங்களையும், எல்லாக் கோபுரங்களையும் ஒருவரே கட்டியதாகவும் தெரியவில்லை.

பெரிய புராணத்தின் துணைகொண்டு - இக்கோயில் முற்காலச் சோழர் காலத்தே கட்டப்பட்டிருக்கலாம் என்று கூறுகின்றனர் சிலர்; இதற்கு அவர்கள் காட்டும் ஆதாரம், பெரிய புராணத்தில் வரும் நகர்ச்சிறப்புப் பகுதியில் திருவாரூர் பாடப்பட்டிருக்கிறது என்பதேயாகும்!

தமிழகத்தை ஆண்ட பண்டைய மன்னர் காலக் கலைகள், கல்வெட்டுகள் யாவும் இத் திருக்கோயிலில் இருக்கின்றன.

அருள்மிகு தியாகராசர் திருக்கோயிலின் தலவிருட்சம் பாதிரிமரம் ஆகும்.

இக்கோயில் கட்டப்பட்ட காலம் பற்றிய கேள்விக்குப் பதில் போல நாவுக்கரசர் எழுதியிருப்பது இது :

*"திருவினன் ஓர்பாகம் சேர்வதற்கு முன்னோ பின்னோ*
*தில்லை அம்பலத்துள் ஆடுவான் புகுவதற்கு முன்னோ பின்னோ*
*திசையெட்டும் தெரிவதற்கு முன்னோ பின்னோ*
*திருவாரூர்க் கோயிலாக் கொண்ட நாளே !"*

- கங்கைகொண்டான்

# வணிக வரித்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம்: முதலமைச்சர் கலைஞரின் புதிய அறிவிப்புகள்!

பொது விற்பனை வரிகள், மற்றும் நிர்வாகம் - குறிப்பாக, மாவட்ட நிர்வாகம், இவற்றினைக் குறித்து இன்றைய தினம் வைக்கப் பட்டுள்ள இந்த மானியக் கோரிக்கைகளில், உறுப்பினர்கள் தங்களுடைய சீரிய, செழுமிய கருத்துக்களை எல்லாம் எடுத்துக் கூறி இருக்கின்றார்கள். இந்தக் கோரிக்கையின் அடிப்படையிலே வைக்கப்பட்டுள்ள அவர்களுடைய முறையீடுகளை எல்லாம் என்னுடைய பதில் உரையிலேயே விளக்கிக் கூறி, அவைகளை ஏற்றுக் கொண்டேன் என்று கூறுகின்ற நிலை எனக்கு இல்லை என்பதை, கோரிக்கைகளை வைத்தவர்கள் மிக நன்றாக அறிவார்கள். ஏன் என்றால், நிதிநிலை அறிக்கை வெளியிடப்பட்டு, அதிலே பல்வேறு சலுகைகள் இந்த மூன்றாவது நிதிநிலை அறிக்கை உள்பட, வணிகர்களுக்கு - பொதுமக்களுக்கு ஏற்ற வகையில், அறிவிக்கப்பட்டு, வியாபாரத்திலே கொசுறு என்பார்களே, அதைப்போல, சில கொசுறு கோரிக்கைகள் இங்கே எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றைப்பற்றி எல்லாம் பேசுவதற்கு முன்பு, நம்முடைய நண்பர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பேசிய சுப்பராயன் கூறிய ஒன்றை நானும் உன்னிப்பாக கவனித்தேன்; இந்த அவையும் கவனித்தது. நாடும் கவனிக்கும். அவர்கள் சொன்னார்கள், "நீங்கள் வசூலிக்கின்ற வரி எவ்வளவோ அதற்கு ஈடான தொகை அதிகாரிகளால் கொள்ளை யடிக்கப்படுகின்றன" என்று குறிப்பிட்டார்கள்.

இதிலே சுட்டிக்காட்டி அவர்கள் பேசுகிறபோது - உணவகங்களிலே வசூலிக்கப் படுகின்ற அந்த வரி பெரும்பாலும் அரசுக்குக் கிட்டாமல் அதிகாரிகளுக்கே செல்கிறது என்றும் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். நான் அதிகாரிகளுக்காக வக்காலத்து வாங்கவில்லை; வாங்குபவனும் அல்ல. ஆனால் அதே நேரத்தில் அதிகாரிகள் எல்லோருமே தவறு செய்யக் கூடியவர்கள் அல்ல. நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் கூட உதகையில் அளித்த ஒரு பேட்டியை இன்று காலைப் பத்திரிகையில் பார்த்தேன். அதிலே அவர்கள் சொல்லி யிருக்கின்றார்கள். 36 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மீது கலைஞர் நடவடிக்கை எடுத்துவிட்ட காரணத்தால் அதிகாரிகள் எல்லாம் செயல்படவே பயப்படுகிறார்கள் என்று அதிலே அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்.



யாராக இருந்தாலும் தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது இந்த அரசின் கொள்கை. ஏன் இதுவரையிலே எடுக்கவில்லை என்பது எதிர்க்கட்சியினுடைய கேள்வி. இந்தக் கொள்கைக்கும், இந்தக் கேள்விக்கும் முரண்பாடு ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் பழைய காலத்து அமைச்சர்கள் மாத்திரமல்ல, தவறு செய்த அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டது போல 36 பேர்கள் மீது அல்ல; ஏறத்தாழ ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் 12 பேர் இருக்கலாம். அதிலேகூட 2, 3 பேரை மத்திய சர்க்கார் ஏற்றுக் கொள்ளவில்லை. மத்திய சர்க்காரிடத்திலே அனுமதி பெற்றுத்தான் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க முடியும். அதிலே கூட மத்திய அரசிலே 2,3 அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே இந்த 10, 12 அதிகாரிகளில், 8, 9 அதிகாரிகள் மீதுதான் அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

சோ. பாலகிருஷ்ணன் :- இந்த சுடுகாட்டு ஊழல் என்கின்ற பெயரால் நம்முடைய அரசு உயர்நீதிமன்றத்தில் மதுரையோடு நின்றுவிடக் கூடாது. எல்லா மாவட்டங்களுக்கும் சென்று அதை விசாரிக்க வேண்டுமென்று நம்முடைய அரசின் சார்பாக வழக்கறிஞர்கள் வாதாடிய பொழுது, அதன் காரணமாக உயர்நீதிமன்றத்தில் சி.பி.ஐக்கு அவர்கள் ஆணையிட்டு கிட்டத்தட்ட 30 அதிகாரிகள் மீது இன்று சி.பி.ஐ. நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அதன் காரணமாக அவர்கள் மனதிலே ஒரு குழப்பம் இருக்கிறது என்பதைத்தான் நான் பத்திரிக்கைச் செய்தியாகச் சொன்னேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலமைச்சர் கலைஞர் :- எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடுவது போன்று அது அரசு தொடர்ந்த வழக்கல்ல; அவரே குறிப்பிட்டிருக்கிறார்கள். சி.பி.ஐ. வழக்கு என்று. எனவே சி.பி.ஐ. வழக்கில் நீதிமன்றத்தினுடைய உத்தரவை அவர்கள் நிறைவேற்றும்பொழுது அதிலே அரசு குறுக்கிட இயலாது என்பதை அவர்கள் அறிவார்கள் என்பதை நான் நம்புகிறேன். பொதுவாக 36 அதிகாரிகள் என்று சொல்லும் பொழுது ஒரு 'த்ரில்' அடேயப்பா, அவ்வளவு அதிகாரிகளா என்று எண்ணத் தோன்றும். ஆனாலும் அதிகாரிகளாக இருந்தாலும், கடந்த காலத்திலே ஆட்சி புரிந்த அமைச்சர்களாக இருந்தாலும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது இந்த மாமன்றத்திலே உள்ள ஆளும் கட்சி, எதிர்க்கட்சி மற்றும் தோழமைக் கட்சியினுடைய ஏகோபித்த எண்ணம். அதிலே மாறுபாடான கருத்து எனக்கும் இல்லை; நம்முடைய எதிர்க்கட்சித்



திருவாரூர் அருகே, கடாரங்கொண்டானில் அமைந்துள்ள நுகர்பொருள் வாணிபத் திறந்த வெளிக் கிடங்கு.

தலைவருக்கும் இல்லை என்பதை நான் நன்றாக அறிவேன்; நாடும் நன்றாக உணர்ந்திருக்கிறது.

சுப்பராயன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல எல்லா அதிகாரிகளுமே தவறானவர்கள் அல்ல. அவரும் அப்படிக் குறிப்பிடவில்லை. ஆனால் இந்த வணிகவரித் துறையிலே இதுபோன்ற தவறுகள் நடப்பதற்கு ஏராளமான இடம் இருக்கிறது என்பதை அவர்கள் இங்கே எடுத்துக் காட்டினார்கள். அதிகாரிகள் ஊழல் புரிகின்ற அதிகாரிகள், தவறு செய்கின்ற அதிகாரிகள், லஞ்சம் வாங்குகின்ற அதிகாரிகள், அப்படித்தான் செய்வோம் என்று ஒரு உறுதி எடுத்துக் கொண்டு நடப்பார்களேயானால், அவர்களைத் திருத்துவது என்பது இயலாத காரியம். வானத்தைக் கூட வில்லாக வளைத்து விடலாம். ஆனால் அப்படிப்பட்ட குணம் படைத்தவர்களை, ஊழலில் திளைப்பவர்களை, லஞ்ச லாவண்யத்திலே பிழைக்க வேண்டும், குறுக்கு வழியிலே வாழ வேண்டும் என்று எண்ணுகிறவர்களை நாம் திருத்த முடியாது. அதிகார வர்க்கத்திலே சிலபேர் திருத்த முடியாதவர்களாகவே இருப்பார்கள்.

**அலைகளை எண்ணச் சொல்லும்போதும் தன் 'திறமையை'க் காட்டிய அதிகாரி**

உதாரணமாக ஒரு கதை கூட உண்டு. அதிகாரிகளைப் பற்றி ஏற்கெனவே ரிஜிஸ்ட்ரார் ஆக இருந்த வி.கே.சி. நடராஜன் அந்தக் கதையை சொல்லியிருக்கின்றார். அதை நான் ஒருமுறை பத்திரிகையிலே கூட குறிப்பிட்டு எழுதியிருக்கின்றேன். கடல் அலை ஆபீசர் என்று வைத்துக் கொள்ளலாம். ஒரு ஆபீசர் தொடர்ந்து கையூட்டுப் பெற்றுக்கொண்டே இருந்தார். இவரைத் திருத்துவது எப்படி ? இவர் கையூட்டுப் பெறாமல் நிறுத்துவது எப்படி என்று யோசித்து, சில நாணயமான அதிகாரிகள் எல்லாம் கூடிப் பேசி, இவருக்கு ஒரு வேலை கொடுக்கலாம் என்று கடற்கரையிலே போய் உட்காரச் சொன்னார்கள்.

என்ன வேலை என்று கேட்டால், 'கடலிலே வருகின்ற அலைகளை எண்ணிக்கொண்டிரு' என்று சொன்னார்கள். சொல்லி விட்டு, இவர்களுக்குள்ளே ஒரு பூரிப்பு. இவனை அடக்கிவிட்டோம்; கடற்கரையிலேயே இவனை உட்கார வைத்துவிட்டோம். இவன் கடல் அலையை எண்ணிக் கொண்டிருப்பானே தவிர, இனிமேல் வாங்குகின்ற லஞ்சப் பணத்தை எண்ணுவதற்கு இவனுக்கு வாய்ப்பு இருக்காது என்று எண்ணிக்கொண்டு இருந்தார்கள். அதிகாரி ஒரு நாள் அப்படியே உட்கார்ந்து கொண்டிருந்தார், அலைகளை எண்ணிக் கொண்டு. சிலபேர் மீன்பிடிப்பதற்காக கட்டு மரம் கட்டிக்கொண்டு கடலுக்குச் சென்றார்கள். இவருக்கு ஒரு யோசனை தோன்றியது. அவர்களை அழைத்து, எங்கே போகிறீர்கள் என்றார்? அவர்கள் கட்லுக்கு மீன்பிடிக்கச் செல்கிறோம் என்றார்கள். நான் அலைகளை எண்ணிக் கொண்டு இருக்கிறேன். மீன் பிடிக்க, கட்டுமரத்தை உள்ளே விட்டால் அது டிஸ்டர்ப் ஆகும். அலைகள் வீணாகும் என்றார். அதற்கு அவர்கள் என்ன செய்யலாம் என்றார்கள். அதற்கு இவ்வளவு ரூபாய் கொடு, கொடுத்தால் விடுகிறேன் என்று சொன்னார். இப்படி அலைகளை எண்ணச் சொன்னால் கூட அங்கேயும் விடாமல் இந்தக் கடல் அலை ஆபீசர் தன்னுடைய திறமையைக் காட்டினார் என்று ஒரு அதிகாரியைப் பற்றி இந்தக் கதை சொல்லப்பட்டது.

உங்களுக்குத் தெரியும், நடராஜன் கன்னியாகுமரி கடலிலே குளிக்கும்போது விபத்தின் காரணமாக இறந்து விட்ட ஒரு மூத்த அதிகாரி நேர்மையான ஒரு அதிகாரி. அவர் சொன்ன கதைதான் இது. எனவே, தவறு செய்கின்ற அதிகாரிகள், அதைப்போல அந்த அதிகாரிகளோடு சேர்ந்துகொண்டு அரசாங்கத்தை ஏமாற்றுகின்ற சிலர் இவர்களுக்கிடையிலேதான் நாம் ஆட்சியை நடத்த வேண்டியிருக்கிறது. முடிந்த வரையில் நடவடிக்கைகள் எடுக்கிறோம். நடவடிக்கை எடுத்துக்கொண்டு, அதே நேரத்தில் நல்லாட்சி நடத்த வேண்டும் என்பதற்காகவும், நாம் நம்முடைய அரிய பணியினை ஆற்றிக் கொண்டிருக்கிறோம். விற்பனை வரியைப் பொறுத்த வரையில், இந்த அரசு இந்த மூன்று

**ரூ.25 இலட்சத்திற்குள் விற்பனைத் தொகையுள்ள உணவகங்களுக்கு முழு வரிவிலக்கு.**

## வரிவிதிப்பு முறைகள் சீரமைக்கப்பட்டு, எளிதாக்கப்பட்டுள்ளன.

நிதிநிலை அறிக்கைகளில் என்னென்ன கோரிக்கைகளை யெல்லாம் ஏற்று, விட்டுக்கொடுத்து வரிக் குறைப்பு, வரி விலக்கு இவைகளை யெல்லாம் செய்திருக்கிறது என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள்.

இங்கே நம்முடைய சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள். 17.7.96 ஆம் நாள் வெளியிடப்பட்ட அரசு அறிக்கையில், பருப்பு, பயிறு, மிளகாய் போன்ற பொருட்களுக்கு 17.7.96 முதல் விற்பனைத் தொகை ரூ.100 கோடி வரை உள்ள வணிகர்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. வெளி மாநிலங்களுடைய விற்பனையைப் பொறுத்த வரை 5.8.96 முதல் 16.10.96 வரையிலான இடைப்பட்ட காலத்திற்கு வரி விலக்கு இல்லை என்றும் அந்த இடைப்பட்ட காலத்திற்கு உள் மாநிலம் மற்றும் வெளி மாநில விற்பனைகளுக்கு வரிவிலக்கு அளிக்க வேண்டுமென்றும் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.சொக்கர் அவர்களும் கேட்டுக் கொண்டார். அவரது கோரிக்கை பரிசீலிக்கப்பட்டது.

17.7.96 முதல் பருப்பு, பயிறு, மிளகாய் போன்ற பொருட்களுக்கு முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. பின்னர் அந்த வரிவிலக்கு உள் மாநில விற்பனைக்கு மாத்திரம் அல்லாமல் வெளி மாநில விற்பனைக்கும் பொருந்துமா என்ற ஐயப்பாட்டை நீக்கும் வகையில் மேற்கூறப்பட்ட வரிவிலக்கு "உள் மாநில விற்பனைக்கு" மட்டுமே என்று 5.8.96 ஆம் நாளிட்ட அரசு அறிக்கை வாயிலாக அறிவித்தது. அதன் பின்னர் வெளி மாநில விற்பனைக்கு "சி" படிவம் கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும் 4 விழுக்காடு வரியே விதிக்கப்படும் என்கின்ற அறிவிக்கை 13.9.96 நாளிட்ட அரசு ஆணையிலே வெளியிடப்பட்டு 16.10.96 ஆம்நாளிட்ட அரசிதழில் பிரசுரம் ஆகியுள்ளது. வெளி மாநில விற்பனைக்கு வரிவிலக்கு இல்லை என்பதை 5.8.96 ஆம் நாள் அறிவிக்கையில் தெளிவாக அறிவிக்கப்பட்டு விட்டதால் 5.8.96 முதல் வெளி மாநில விற்பனைக்கு வரி செலுத்த வேண்டும். எனினும் 17.7.96 முதல் 4.8.96 முடிய உள்ள இடைப்பட்ட காலத்திற்கு வரிவிதிக்கப்பட மாட்டாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல நம்முடைய சுப்பராயன் அவர்கள் தமிழ்நாடு ஹோட்டல்ஸ் அசோசியேஷன், சென்னை, இதன் சார்பாக அல்லது சார்பாக அவரிடத்திலே சொல்லப்பட்ட சில கருத்துக்களின் அடிப்படையில் அவர் சில செய்திகளை அரசுக்குச்சொல்லி அதை யோசிக்குமாறு கேட்டிருக்கிறார். அது பரிசீலிக்கப்பட்டது. அவர் சொன்னது உணவகங்களுக்கு விற்பனை வரியிலிருந்து முழு வரி விலக்கு அளிக்குமாறும் முழு வரி விலக்கு அளித்தால் அரசு நிதிநிலை பாதிக்கப்படும் எனக் கருதினால் - (எப்படி பாதிக்கப்படாமல் இருக்க முடியும் ? இப்போது ரூ.15 கோடி வருகிறது; பாதிக்கப்படும் என்று கருதினால் என்பதற்கே இடம் இல்லை; பாதிக்கப்படும்) விற்பனைத் தொகை ரூ.25 லட்சத்திற்கும் குறைவாக உள்ள உணவகங்களுக்கு விரி விதித்து - (இது ரொம்ப ஆபத்து; 25 இலட்சத்திற்கும் குறைவாக உள்ள உணவகங்களுக்கு வரி விதிக்கச் சொல்லி, அவர்கள் சொல்கிறார்கள். அதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும் ? நாம் 25 இலட்சத்திற்கு மேல்தான்என்று குறிப்பிட்டிருக்கிறோம்) - தற்போதுள்ள படிமுறை - ஸ்லாப்சிஸ்டம் - வீதத்தை வெகுவாக குறைக்குமாறும் கோரிக்கை விடுத்தார்கள். இது பற்றி பரிசீலித்ததில் நான் இந்த அவைக்கு ஒன்றைக் கூற விரும்புகிறேன்.

### தங்கராஜ் தலைமையிலான வரி சீரமைப்புக்குழு பரிந்துரை

சி.தங்கராஜ் ஐ.ஏ.எஸ் (ஓய்வு) அவர்களுடைய தலைமையிலான வரி சீரமைப்புக் குழு உணவகங்களில் விற்கப்படும் உணவு மற்றும் பானங்களுக்கு பின்வரும் படி முறை - ஸ்லாப் சிஸ்டம் - சதவிகிதத்தை பரிந்துரைத்தது. அவர்கள் பரிந்துரைத்த வரி விகிதத்திலிருந்து நாம் எவ்வளவு குறைவாக ஆக்கியிருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டத்தான் நான் சொல்கிறேன். தங்கராஜ் தலைமையிலே இருந்த சீரமைப்புக் குழு பரிந்துரை ஆண்டு ஒன்றிற்கு 3 இலட்சம் முதல் 5 இலட்சம்வரை டர்ன் ஓவர் இருந்தால், விற்பனைத் தொகை இருந்தால், வரித்தொகை வரி விகிதம் 6,000 ரூபாய். 5 இலட்சம் முதல் 10 இலட்சம் வரை என்றால் 12,000 ரூபாய். 10 இலட்சம் முதல் 20 இலட்சம் வரை என்றால் 24,000 ரூபாய். 20 இலட்சம் முதல் 30 இலட்சம் வரை என்றால் 48,000 ரூபாய். 30 இலட்சம் முதல் 40 இலட்சம் வரை என்றால் 60,000 ரூபாய். 40 இலட்சம் முதல் 50 இலட்சம் வரை என்றால் 84,000 ரூபாய். 50 இலட்சத்திற்கு மேல் 2 விழுக்காடு.

ஆனால் இதை அரசு ஏற்றுக் கொள்ள வில்லை. ஏற்றுக் கொண்டிருந்தால் இந்த ஹோட்டல் அதிபர்கள்எல்லாம் என்ன ஆகியிருப்பார்கள் என்பதை எண்ணிப் பார்க்கவே முடியாது. இருந்தாலும் நாங்களாகவே இவ்வளவு வரி அவர்களுக்குத் தேவையில்லை என்ற முடிவுக்கு வந்து பரிசீலித்து விற்பனைத் தொகை ரூ.25 இலட்சத்திற்கு உட்பட்டிருந்தால் வரியே இல்லை என்று நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருக்கிறோம். 25 இலட்சத்திற்கு மேல் 30 இலட்சம் வரை ஆண்டுக்கு 24,000 அவர்கள் பரிந்துரை 48,000. 30 லிருந்து 40 இலட்சம் வரை 36,000 என்று ஆக்கியிருக்கிறோம். 40 இலட்சத்திலிருந்து 50 இலட்சம் வரை 48,000. 50



நீர்வளமும் நிலவளமும் மிக்கதான திருவாரூர் மாவட்டத்தில் விளைந்திடும் நெல்லைக் கொள்முதல் செய்து பாதுகாத்துப் பதப்படுத்தி, அரிசியாக்கித்தரும் நவீன அரிசி ஆலை, திருவாரூர் பேருந்து நிலையத்தினருகே உள்ளது.

இலட்சத்திற்கு மிகும் விற்பனைத் தொகைக்கு 2 விழுக்காடு என்ற விற்பனை வரியை நாம் நிர்ணயம் செய்திருக்கிறோம்.

எனவே, சென்ற ஆண்டுதான் உணவகங்களுக்கான வரி விகிதங்களை விற்பனை வரி சீரமைப்புக் குழுவின் பரிந்துரையை விட மிகவும் குறைவான ஸ்லாப் - படி முறை வீதத்தை அரசு நடைமுறைப் படுத்தியிருக்கிற காரணத்தால் 25 இலட்சத்திற்கும் குறைவாக உள்ள உணவகங்களுக்கு முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளதால், உணவகங்களுக்கு மறுபடியும் வரி சீரமைப்பு செய்வதற்கு இயலாத ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் மூலமாக அந்த அசோசியேஷனுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இதைச் சொன்னதால் அந்த அசோசியஷனுக்கும் அவருக்கும் ஏதோ தொடர்பு இருப்பதாக யாரும் கருதத் தேவையில்லை. அவர்கள் கொடுத்த கோரிக்கையை அவர் பிரதிபலித்திருக்கிறார் அவ்வளவுதான்.

### உணவகங்களில் தற்போதுள்ள விதிகளைத் தொடர வேண்டிய நிலை

உணவகங்களிலே தற்போது உள்ள இந்த படி முறை ஸ்லாப் விதியை நாம் தொடர வேண்டியவர்களாக இருக்கிறோம். அவர் கூறிய குறைகளை நீக்க வேண்டுமேயானால் உணவகங்களில் சார்ட்டர்டு அக்கவுண்ட் மூலம் கணக்கைத் தணிக்கை செய்து அதன் அடிப்படையில் வரிக் கணக்குகளை ஏற்றுக் கொள்ளலாம். இதில் 20% கணக்குகள் மாத்திரமே கணினி முறையிலே தேர்வு செய்யப்பட்டு ஆய்வு செய்யலாம். இந்தக் கருத்தை நான் பரிசீலித்து சுப்பராயன் அவர்கள் சொன்ன அந்தக் குறைபாடு நீங்குவதற்கு இயலுமா என்பதை அதிகாரிகளோடு கலந்து பேசி பிறகு அறிவிப்பேன் என்ற உறுதியை இங்கே அளிக்கிறேன்.

1996 - 97 ஆம் ஆண்டு வழங்கிய வணிக வரி சலுகையினால் நம்முடைய முதல் நிதிநிலை அறிக்கை - நான்காவது முறையாக இந்த அரசு பொறுப்பு ஏற்ற பிறகு - முதல் நிதி நிலை அறிக்கையில் வழங்கிய வணிக வரி சலுகையினால் இந்த அரசுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பு ரூ.370 கோடி என்பதை மறந்துவிடக் கூடாது. ஆனால் 370 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டாலும் கூட குரோத் ரேட் ஓரளவு இருந்த காரணத்தால் ஒரு பெரிய வீழ்ச்சி இந்த விற்பனை வரி வருவாயிலே நமக்கு ஏற்பட்டு விடவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

1997 - 98 ஆம் ஆண்டு வழங்கிய வணிக வரிச் சலுகையினால் அரசுக்கு 44 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டது. அதே ஆண்டில் உணவு விடுதிகளுக்கு அரசு விதித்த வணிக வரி மற்றும் பான் மசாலா, பரிசுச் சீட்டுகளுக்கு விதித்த வரி உயர்வினால் 17 கோடி ரூபாய் அரசுக்கு வருவாய் கிட்டியது.

### வணிக வரிச் சலுகையால் அரசுக்கு ரூ.40 கோடி இழப்பு

1998 - 99 நடப்பாண்டில் வழங்கிய வணிக வரிச் சலுகையினால் இந்த அரசுக்கு 40 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படும். அதேசமயம் இந்தியாவில் தயாரிக்கப்படும் ஐ.எம்.எப்.எல் வெளிநாட்டு மது வகைகளுக்கு அரசு விதித்த வணிக வரி உயர்வினாலும் கூடுதல் விற்பனை வரியில்செய்த மாற்றங்களினாலும் 310 கோடி ரூபாய் அரசுக்கு வரி வருவாய் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. கூடுதல் விற்பனை வரி 100 கோடிக்கு மேல் என்று இருந்ததை 25 கோடிக்கு மேல் என்று மாற்றிய காரணத்தால் நமக்கு அதிலே அந்த வரியிலே அதிக வருவாய் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

செய்யப்படும். இதற்கான சட்ட முன்வடிவு இந்தக்கூட்டத் தொடரிலேயே அறிமுகம் செய்யப்படும். வணிகராகப் பதிவு செய்த தற்போதுள்ள மொத்த விற்பனைத் தொகைக்கான வரம்பு 75 ஆயிரம் ரூபாயிலிருந்து ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படுகிறது. இதற்கான சட்ட முன்வடிவு இந்தக் கூட்டத் தொடரிலேயே அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது.

ஒரு வணிகருடைய மொத்த வியாபாரத் தொகை ரூபாய் 10 இலட்சத்திற்கு மேற்படாமல் இருந்தால் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு, நிபந்தனைகள் என்றால், ஆவணங்களைப் பாதுகாத்தல், ரெக்கார்டுகளை வைத்துக் கொள்ளுதல் என்ற அந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு அவர்களுடைய கணக்குகளைத் தணிக்கைக்கு உட்படுத்தாமலேயே இறுதி வரி விதிப்பு செய்திட ஆணையிடப் பட்டுள்ளது. அந்த வணிகர்கள் விரிவான கணக்கு வழக்குகளைப் பராமரிக்க வேண்டிய அவசியம் இல்லை. அடிப்படைக் கணக்கு ஆவணங்களைப் பராமரித்தாலே போதும் என்றும் நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது.

## பகுதி இயந்திரத்தினாலும் பகுதி கையாலும் செய்யப்படும் மெழுகு தீக்குச்சிகளுக்கும் முழு வரிவிலக்கு.

1998 - 99 ஆம் ஆண்டு வரவு - செலவு திட்டத்தில் வருவாய்க் கணக்கிலே செலவு 18 ஆயிரத்து 48 கோடி ரூபாய். வரவு 15 ஆயிரத்து 39 கோடி ரூபாய். இதிலே வணிக வரியின் மூலமாக 7 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் வருவாய் எதிர்பார்க்கப்படுகிறது. இங்கே உறுப்பினர்கள் எல்லாம் கடந்த ஆண்டை நினைத்துக் கொண்டு, 6 ஆயிரம்கோடி ரூபாய், 6 ஆயிரத்து சொச்சம் கோடி ரூபாய் என்று எல்லாம் இங்கே உரையாற்றியிருக்கிறார்கள். எதிர்பார்க்கப்படுவது வணிக வரியின் மூலம் 7 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### வரிவிதிப்பு முறைகளில் சீரமைப்பு

சென்ற 2 ஆண்டுகளிலே வரி விதிப்பு முறைகளிலே பல சீரமைப்பு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டது. நாணயமாக வரி செலுத்துபவர்களுக்கு நடைமுறைகளை எளிதாக்கி வரி விதிப்பு அமைப்பின் கடுமையை குறைத்து உள்ளது. இதன்ஒரு தொடர் நடவடிக்கையாக ரூபாய் 10 இலட்சத்திற்கு மேற்பட்டும் ரூபாய் 20 இலட்சத்திற்கு உட்பட்டும் மொத்த விற்பனைத் தொகை உடைய வியாபாரிகள் பதிவுபெற்ற பட்டயக் கணக்கர்கள் 'சார்ட்டர்டு அக்கவுண்டெண்டு' தணிக்கை செய்ததன் அடிப்படையில் கணக்குகள் ஏற்றுக்கொள்ளப்படும். இதில் 10 விழுக்காடு கணக்குகள் மட்டும் துறையினரால் ஆய்வு

### விற்பனை வரிச்சட்டம் தமிழில்

விற்பனை வரிச் சட்டத்தைத் தமிழில் வெளியிடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. கடந்த ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தின்போது தமிழ்நாடு விற்பனை வரி சட்டத்திலிருந்து அட்டவணைகளை முதலில் வெளியிடவும், பின்னர் விற்பனை வரி சட்டத்தை முழுமையாகத் தமிழில் வெளியிடவும் முடிவு செய்யப்பட்டது. அதன் முதல் கட்டமாக 1997 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் உள்ள அட்டவணைகள் தமிழில் வெளியிடப்பட்டன. தற்போது விற்பனை வரிச்சட்டம் சட்டத்துறையின் மூலமாக தமிழ் ஆக்கம் செய்யப்பட்டு தயார் நிலையில் உள்ளது. ஆனாலும், கூட அந்தத் தமிழ் ஆக்கத்திலே பயன்படுத்தப்பட உள்ள சில தமிழ்ச் சொற்கள் வணிகர்களிடமும், வணிக வரித்துறையில் உள்ள அலுவலர்களிடமும் புழக்கத்தில் இல்லாத சொற்களாக இருக்கின்றன. உதாரணமாக மொழி பெயர்ப்பில் burden of proof என்பதற்கு சட்டத்துறை "நிரூபிக்கும் சுமை" என்று மொழியாக்கம் செய்திருக்கிறது. சட்டத்துறை - தமிழ்த்துறை அல்ல - சட்டத்துறை. ஆனால், அதனை "நிரூபிக்கும் பொறுப்பு" என்று எல்லோருக்கும் தெரிந்த தமிழிலே மொழி பெயர்ப்பு இப்பொழுது செய்யப்பட்டிருக்கிறது.

## SELF-ASSESSMENT

என்பதை, சட்டத்துறை, "தன் வரிக் கணிப்பு" என்று மொழி பெயர்த்து இருக்கிறது. அதை, எல்லோருக்கும் புரியக்கூடிய அளவிற்கு "சுய வரி விதிப்பு" என்ற தமிழில் எளிமைப்படுத்தப் பட்டிருக்கிறது. "சுய" என்பது சரியான தமிழ் மொழி அல்ல என்றாலும், வடமொழி என்றாலும் கூட, சுய மரியாதை தன்மானம் என்று நாம் மாற்றிக் கொண்டாலும் கூட, இங்கே சுயமரியாதை என்றாலே தமிழிலே பழக்கப்பட்டுவிட்ட வார்த்தை என்ற காரணத்தால் "சுய வரி விதிப்பு" என்ற தமிழில் எளிமைப்படுத்தப்பட்டுள்ளது.

## SUBJECT TO CONDITION

என்பதைச் சட்டத் துறை, "வரையறைக்குட் பட்டு" என்று மொழியாக்கம் செய்திருக்கிறது. அது சரியான மொழி பெயர்ப்பாக ஆக முடியாது. எனவேதான், "நிபந்தனைக்கு உட்பட்டு" என்று மொழி பெயர்த்து இருக்கின்றோம். எனவே, இந்தத் திருத்தங்கள் எல்லாம் ஆன பிறகு அது வெளியிடப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### காலியிடங்களை உடனே நிரப்பிட ஆணை

விற்பனை வரிச் சட்ட வழக்குகளை விரைவுபடுத்த வேண்டும் என்று உறுப்பினர் ஒருவர் இங்கே பேசும்பொழுது குறிப்பிட்டார். சென்னை, கோவை, மதுரை ஆகிய இடங்களில் மேல் முறையீடு தீர்ப்பாயங்களில் நீதித்துறை உறுப்பினர்கள், கூடுதல் நீதித் துறை உறுப்பினர்கள் ஆகியோரின் பதவிகள் நிரப்பப்படாமல் இருந்தமையால் பல வழக்குகள் விசாரிக்கப்படாமலே தேங்கிக் கிடந்தன. இதன் காரணமாக வணிகர்களுக்குப் பல இடையூறுகளும், அரசுக்கு வருவாய் தேக்கமும் ஏற்பட்டு வந்தன. இவற்றைக் களையும்பொருட்டு, காலியிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, தற்பொழுது ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது தீர்ப்பாயத்தின் துணைத்தலைவர் மற்றும் நிர்வாக உறுப்பினர் பதவிகள் நிரப்பப்பட்டு, இந்த வழக்குகளை விரைவிலே முடித்திட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இங்கே வெட்டுத் தீர்மானங்கள் தந்துள்ள உறுப்பினர்கள், அவர்கள் இங்கே பேசுகின்ற வாய்ப்பைப் பெறாவிட்டாலும் அல்லது அவர்கள் பேசாவிட்டாலும்கூட, அவைகளைக் குறிப் பிடுவது என்னுடைய கடமை என்று கருதுகின்றேன்.

### வேளாண் இடுபொருட்களுக்கு வரி குறைப்பு

பா.ம.க. - 1 கட்சி உறுப்பினர்கள் ஜ.கணேசன், ஜி.கே.மணி ஆகியோர் வேளாண் இடு பொருள்கள் மீது விற்பனை வரி விதிப்பதைத் தவிர்க்க வேண்டுமென்று வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். வேளாண் இடுபொருட்களான யூரியா மற்றும் அமோனியம் பாஸ்பேட் உரத்திற்கு 5.3.97 முதல் 4 சதவீதத்தி லேயிருந்து 2 சதவீதமாக வரி குறைக்கப் பட்டிருக்கிறது. ஏற்கெனவே, - 97லேயே குறைச்சாச்சு. அதற்குத்தான் வெட்டுத்தீர்மானம் கொடுத்து இருக்கிறீர்கள் குறைத்தது தப்பு என்று.

மேலும், உறுப்பினர்களுடைய கருத்து ஏற்கப்பட்டு வேளாண்மைக்கான ஃபேக்டீரியா வளர்ப்பு, தழைச்சத்து, எரு மற்றும் பச்சை எரு விதைகள் போன்றவைகளுக்கு முழு வரி விலக்கு ஏற்கெனவே அளிக்கப்பட்டுள்ளது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### வேளாண்மை விளைபொருட்களுக்கு வரி ரத்து

வேளாண்மை விளை பொருட்களின் மீது விதிக்கப்படும் வரியை ரத்து செய்ய வேண்டுமென்று பா.ம.க உறுப்பினர் கோவிந்தன் வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார். பொது மக்களால் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தப்படும் பின்வரும் வேளாண் விளைபொருட்கள் விற்பனைக்கு 17.7.96 முதல் விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அவை - கடலை, துவரை, பாசிப் பயிறு அல்லது பச்சைப் பயிறு, மசூர் உளுந்து, மோத்து, கேசரி, மிளகாய், புளி, தனியா, மஞ்சள், பெருங்காயம், மிளகு மற்றும் சிகைக்காய், வெல்லம், கரும் சீரகம் உள்ளிட்ட வேளாண் விளைபொருட்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் மணி அவர்கள், கயிறு உற்பத்தி செய்யும் குடிசைத் தொழிலுக்கு, கயிற்றின் விற்பனை வரி முழுமையாக நீக்க வேண்டுமென்று வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். ஆனால் அப்பொழுதே, கயிற்றின் மீதான விற்பனை வரி 17.7.96 முதல் விலக்கப்பட்டுள்ளது என்பதை அவருக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

### தேங்காய்க் கொப்பரைக்கு ஒரு சதவிகிதமாக வரி குறைப்பு

தேங்காய்க் கொப்பரைக்கு முழுமையான வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று எஸ்.என்.பாலசுப்பிரமணியன், டி.மணி, பி.ஆர். சுந்தரம் ஆகியோர் வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

# விற்பனை வரிச்சட்டம் விரைவில் தமிழில் வெளியிடப்படும்.

கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையின் போது மாநிலத்திற்குள் விற்பனை செய்யப்படும் தேங்காய், கொப்பரை போன்றவற்றிற்கு வரி 4 சதவீதத்திலேயிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. இதுவும் போதாது என்று இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தேங்காய் மற்றும் கொப்பரை மீதான வரியை, தேங்காய் கொப்பரைக்கு விதிக்கப்படும் வரி 2 சதவீதத்திலேயிருந்து ஒரு சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

நிதிநிலை அறிக்கை மீது நடந்த விவாதத்திற்கு இந்தச் சட்டமன்றத்திலே பதில் கொடுத்தபோது, வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படும் தேங்காய் மற்றும் கொப்பரைக்கும் 1 சதவீதம் வரி அறிவிக்கப்பட்டது. எனவே, முழு வரிவிலக்கு அளிக்க இப்போது இயலாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இதை ஏற்று வியாபாரிகள் மற்றும் வியாபாரிகளின் சங்கத்தினர் என்னைச் சந்தித்து மகிழ்ச்சி தெரிவித்து நன்றி கூறியிருக் கின்றார்கள். எனவே. அவர்களே முழு வரிவிலக்கு கோரவில்லை என்பதையும், சுந்தரம் போன்றவர்கள்தான் முழு வரிவிலக்கு கோருகிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுவெல்லாம் ஒரு பார்லிமெண் டேரியனுக்கு அழகு. ஒன்றைச் சொன்னால் அதைவிட இன்னொன்று கேட்க வேண்டும்; அதுதான் நல்ல, சரியான பாரிலிமெண்டேரியன் என்று பொருள். சர்.ஏ.டி.பன்னீர் செல்வத்தைப் பற்றி டாக்டர் கிருஷ்ணசாமி - இந்த கிருஷ்ணசாமி அல்ல - ஏ.ஆர். முதலியாருடைய குடும்பத்தைச் சேர்ந்த டாக்டர் கிருஷ்ணசாமி பார்லிமெண்டேரியன் என்ற ஒரு புத்தகம் எழுதினார். அதிலே அவர் குறிப்பிடுகிறார். ஏ.டி.பன்னீர் செல்வத்தைப் பார்த்துக் கேட்டார்களாம். 'நீங்கள் நல்ல பார்லி மெண்டேரியன் என்று சொல்கிறார்களே, திடீரென்று ஒரு நாள் ஆளும் கட்சியிலேயிருந்து ஏழைகளுக்கு எல்லாம் இலவசமாக வீடு கட்டித்தரப்படும் என்று சொன்னால் என்ன செய்வீர்கள்' என்று கேட்டார்களாம். அவர் உடனே சொன்னாராம், "அது மாத்திரம் போதாது, வீட்டுக்கு 200 ரூபாய் கொடுக்க வேண்டும் என்றும் சொல்வேன்" என்று பன்னீர்செல்வம் சொன்னாராம். இதுதான் நல்ல பார்லிமெண் டேரியனுக்கு அழகு என்பார்கள். அதைப் போலவே நம்முடைய சுந்தரம் அவர்கள் இங்கே இவ்வளவு வரிவில்க்கு கொடுத்த பிறகும்கூட, நான்கை இரண்டாக்கி, இரண்டை ஒன்றாக

ஆக்கிய பிறகும்கூட, அதையும் விலக்கி விடு என்று குறிப்பிடுகிறார்கள். அவர்களே மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள். சுந்தரம் கவலைப்படத் தேவையில்லை என்று நான் அவருக்குக் குறிப்பிட விரும்புகின்றேன்.

மசாலாப் பொடிக்கு வரிவிலக்கு அளிக்க வேண்டிய அவசியம் குறித்து ஞானசேகரன், எஸ்.என். பாலசுப்பிரமணியன், நா.பெரியசாமி, சுந்தரம், நிஜாமுதீன் ஆகியோர் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். வணிகச்சின்னம் அல்லாத மசாலாப் பொடிகள் மீதான விற்பனை வரி 16 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகவும், 16 - லிருந்து 2 - ஆக..

**ஆர்.சொக்கர்** :- வணிகச் சின்னம் இல்லாத மசாலாப் பொடிகளுக்கு ஏற்கெனவே 8 சதவிகிதம்தான். வணிகச் சின்னம் உள்ள மசாலாப் பொடிக்கு 16 சதவிகிதம்தான். ஆனால் இப்போது கொள்கை விளக்கக் குறிப்பிலேயும் அதைப் பார்த்தேன். 16 - லேயிலிருந்து 2 என்று போடப்பட்டிருக்கிறது.

**முதல்வர்** :- வணிகச் சின்னம் அல்லாத மசாலாப்பொடிகள் மீதான விற்பனை வரி, 2 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. வணிகச் சின்னம் உள்ள மசாலாப் பொடியைப் பொறுத்தவரையில் அதன் மீதுள்ள விற்பனை வரி 4 சதவிகிதமாகவும், 27.3.1998 முதல் வரி குறைப்பு செய்யப்பட்டிருக்கிறது. சின்னம் அல்லாதவைகளுக்கு 2 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

வனஸ்பதி சமையல் எண்ணெய்க்கு முழு வரிவிலக்கு அளிக்க ஞானசேகரன் அவர்கள் வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். அவர் ரொம்ப நாளாகவே வனஸ்பதியைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறார். நான் அன்றைக்கே சொல்கிறபோது அதில் கொழுப்பு சக்தி ரொம்ப அதிகம் என்றும். அது வேண்டாம் என்றும் ஏற்கெனவே ஞானசேகரனுக்குச் சொன்னேன். கொழுப்புச்சக்தி இல்லையென்று சொன்னாலும், உருவாக்கிக் கொள்ள வேண்டாம் என்பதற்காக அது வேண்டாம் என்கிறேன்.

### சமையல் எண்ணெய்களுக்கு முழுவரி விலக்கு

சமையலுக்குப் பயன்படும் கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், சூரியகாந்தி எண்ணெய், பாமாயில் எண்ணெய், பருத்திவிதை எண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட அரிசி தவிட்டு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எல்லா சமையல் எண்ணெய்களுக்கும் 27.3.98 முதல் முழு வரிவிலக்கு அளிக்கப் பட்டுள்ளது. எனவே, வனஸ்பதிக்கு வரிவிலக்கு அளிப்பதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவிந்தன் அவர்கள் தமிழகத்து மாணவர்களுக்குத் தேவையான நோட்டுப் புத்தகங்களுக்கு விற்பனை வரியிலேயிருந்து விலக்கு அளிக்க வேண்டி வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். தமிழகத்தில் வரி செலுத்தப்பட்ட காகிதத்தில் தயாரிக்கப்படும், மாணவர்களுக்குத் தேவையான நோட்டுப் புத்தகங்களுக்கு 5.3.1997 முதல் முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இந்தச் சலுகை உள் மாநிலத்தில் வரி செலுத்தப்பட்ட காகிதத்தில் தயாரிக்கப்பட்டு வெளி மாநிலத்திலே விற்கப்படும் மாணவர்களுக்கான நோட்டுப் புத்தகங்களுக்கும் 27.3.1998 முதல் நீட்டிக்கப்படுகிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழகத்தில் லாட்டரிசீட்டு விற்பனையிலே வரி ஏய்ப்பைத் தடுக்க வேண்டிய அவசியம் குறித்து ஐ.கணேசன், ஜி.கே.மணி, அப்துல் நாசர் ஆகியோர் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

### கவர்ச்சிகரமாகப் பரிசுச்சீட்டை உருவாக்கத் திட்டம்

தமிழகத்தில் லாட்டரி சீட்டு வணிகர்கள் செய்யும் வரி ஏய்ப்பைத் தடுக்கும்பொருட்டு, வணிகவரித் துறையில் உள்ள செயலாக்கப் பிரிவு அலுவலர்கள் அவ்வப்போது திடீர் சோதனை நடத்தி வரி ஏய்ப்பு தடுக்கப்படுகிறது. அதே நேரத்தில், வரி ஏய்ப்பு நடவடிக்கைகளைக் குறைக்கும் பொருட்டு, லாட்டரிச்சீட்டு வணிகர்கள் இணக்க முறையில், படித்தள வீதத்தில் வரி செலுத்த சட்டத்திலும் வழி வகைகள் செய்யப்பட்டுள்ளன. 1997 - 98 ஆம் ஆண்டில் 11 கோடியே 26 இலட்சம் ரூபாய் இந்தப் பரிசுச்சீட்டு மூலமாக வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இந்த வருவாயை மேலும் பெருக்குவதற்கு, இந்தப் பரிசுச்சீட்டை நவீன முறையில் அறிமுகப்படுத்த வேண்டுமென்றும், இன்னும் அதற்காக பரிசுகளை அதிகப்படுத்த வேண்டுமென்றும், கவர்ச்சிகரமான அளவுக்கு இந்த பரிசுச்சீட்டுத் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்றும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. 1996 - 97, 97 - 98, 98 - 99 ஆகிய இந்த மூன்று ஆண்டுகளுக்கான நிதிநிலை அறிக்கையிலும் ஏராளமான வரிச்சலுகைகள் செய்யப்பட்டு இருக்கின்றன. அவைகளையெல்லாம் நான் மீண்டும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் நினைவுப்படுத்திக் கொள்ள முடியும் என்று நான் நிச்சயமாக நம்புகின்றேன்.

தற்பொழுது வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளை மாத்திரம் இங்கே நான் சொல்ல விரும்புகின்றேன். வணிகச் சின்னம் பெறாத வெண்ணெய் மற்றும் நெய் வகைகளுக்கு 4 விழுக்காடு வரியும், வணிகச் சின்னம் பெற்ற அந்த பொருட்களுக்கு 10 விழுக்காடு வரியும் உள்ளது. சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர். சொக்கர், வி.கே.லட்சுமணன், திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசன், எதிர்க்கட்சித் தலைவர் சோ.பாலகிருஷ்ணன் ஆகியோர் பதப்படுத்தப்படாத வெண்ணெய்க்கு (Unpasteurised) முழு வரிவிலக்கு அளிக்க வேண்டுமென்றும், தற்போது பிஸ்கட்டுகளுக்கு உள்ளது போல, வணிகம் மற்றும் வணிகக் குறிகள் (Trade and merchandised marks act) சட்டத்தின் கீழ், பதிவுபெறாத வணிகச்சின்னம் உள்ள நெய்க்கு வரியை 4 சதவிகிதமாகக் குறைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளார்கள். சட்டமன்ற உறுப்பினர் நா.பெரியசாமி, பி.ஆர்.சுந்தரம், வி.கே.லட்சுமணன் ஆகியோர் இதற்காக வெட்டுத் தீர்மானமே கொடுத்திருக்கிறார்கள். அவர்களது கோரிக்கையை ஏற்று வணிகம் மற்றும் வணிகக்குறிகள் சட்டத்தின் கீழ், பதிவு பெறாத வணிகச் சின்னம் உள்ள வெண்ணெய் மற்றும் நெய்க்கு வரி தற்போதுள்ள 10 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.இராசன் விருதுநகர் மாவட்டம், அவர்கள் சத்திரப்பட்டியில் மருத்துவத் துணிகளான Gauze and Bandage துணி வகைகள் விசைத்தறியில் உற்பத்தி செய்யப்படுகின்றன. விசைத்தறியில் உற்பத்தி செய்யப்படும் Gauze and Bandage துணிவகைகளுக்கு தற்பொழுது 8 விழுக்காடு வரி செலுத்தப்படுகிறது. Surgical Dressing Manufacturers Association இத்தொழிலை நம்பி சத்திரப்பட்டியில் 20 ஆயிரம் குடும்பங்கள் வாழ்கின்றன என்றும் Gauze and Bandage துணி வகைகளுக்கு முழு வரி விலக்கு அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளார்கள். எனவே இந்தக் கோரிக்கையைப் பரிசீலிக்க வேண்டுமென்று வி.பி.இராசன் கேட்டுக் கொண்டுள்ளார். இதற்காக நா.பெரியசாமி வெட்டுத் தீர்மானமே கொடுத்துள்ளார்கள்.

### பாண்டேஜ் துணிகளுக்கு முழு வரிவிலக்கு

இக்கோரிக்கையைப் பரிசீலித்து, Gauze and Bandage துணிகளுக்கு

**சமையல் எண்ணெய்களுக்கு முழுமையான வரிவிலக்கு.**



திருவாரூர்-நாகை சாலையில் கட்டப்பட்டுள்ள ஓடம்போக்கி ஆற்று ஒற்றைப்பாலம்

ஒட்டுமொத்தமாக வரி விலக்கு அளித்தால், அரசுக்கு அதிக அளவில் வருவாய் இழப்பு ஏற்படும். ஏனென்றால், பெரிய வியாபாரிகள் அங்கே இருக்கிறார்கள் என்றாலும் சிறு உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில் விற்பனைத் தொகை ஆண்டு ஒன்றுக்கு 25 இலட்சத்திற்கு மிகாமல் உள்ள விசைத்தறி மூலம் Gauze and Bandage துணிகளை உற்பத்தி செய்யும் சிறு உற்பத்தியாளர்களுக்கு முழு வரிவிலக்கு அளித்து ஆணை பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிறகு வார்னிஷ், பற்றி கே.சுப்பராயன் கேட்டது -

Sivakasi Picture Varnish Coaters Association

அவர்களது விண்ணப்பத்தில் தாங்கள் செய்யும்

Picture Varnish Coating தொழில்

குடிசைத் தொழில் என்றும்

Picture Varnish

தயாரிப்பதற்கு மூலப்பொருட்கள் யாவும் உள் மாநிலத்தில் வரி செலுத்தி வாங்கப் படுகின்றன என்றும், எனவே ஒப்பந்தப் பணிகள் என்ற வகையில் வரி விதிப்பு சரியில்லை என்றும் கூறி வரி விலக்கு கோரியிருக்கின்றார்கள். அவர்கள் கோரிக்கையை ஏற்று வரி விலக்கு அளிக்கப்படுகிறது.

இயந்திரங்களினால் செய்யப்படும் தீப்பெட்டிகளுக்கு 8 விழுக்காடு விற்பனை வரி உள்ளது. ஆனால் கையால் செய்யப்படும் தீப்பெட்டிகளுக்கு வரி விலக்கு உள்ளது. உற்பத்தியில் ஒரு சில பகுதிகளுக்கு இயந்திரங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் மெழுகுத் தீப்பெட்டிகள் கையினால் செய்யப்படும் தீப்பெட்டிகளுக்கு சமமாகாது என்றும், அவை வரிவிலக்கு பெறத் தகுதி வாய்ந்தது அல்ல என்றும் 1996 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் சிறப்பு ஆணையர் மற்றும் வணிக வரி ஆணையர் ஆணையிட்டுள்ளார். தற்போது தென்னிந்தியத் தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கம், இத்தகைய மெழுகுத் தீப்பெட்டிகளுக்கு முன்பு இருந்ததைப் போல தொடர்ந்து வரிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளனர். இவர்களது கோரிக்கையை இந்த அரசு பரிசீலித்து பகுதி இயந்திரத்தினாலும், பகுதி கையினாலும் செய்யப்படும் மெழுகு தீக்குச்சிகளுக்கும் முழு வரி விலக்கு அளிக்க முடிவு எடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் மணி குடிசைத் தொழிலாகச் செய்யும் ரொட்டி மற்றும் பண்டங்களுக்கும் விற்பனை வரியிலிருந்து முழு விலக்கு அளிக்க வேண்டும் என்று வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். 17.7.96 முதல் ரொட்டிக்கு குறைந்த வரியாக 4 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது. தற்போது 19.8.97ல் பேக்கரிகளில் தயாரிக்கப்படும் வணிகச் சின்னம் இல்லாத உணவுப் பொருட்கள் மீதான வரி 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. மேலும் சிறு தொழில்களுக்கு சலுகை அளிக்கும் வகையில் ரூபாய்5 இலட்சம் மொத்த விற்பனை தொகை உள்ள வணிகர்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறெல்லாம் எவ்வளவோ சிரமத்திற்கு இடையே சிலரது கோரிக்கைகளை ஏற்று, சிலரது கோரிக்கைகளை ஏற்க முடியாமல் அதே நேரத்தில் சுலபமாக வரிகளை வசூலிக்கக்கூடிய வகையில், ஏழைகளுக்கு எந்தவிதமான சிரமமும் இல்லாமலும், ஏழைகளுக்கு - நடுத்தர மக்களுக்கு கூடுமான வரையில் வரிவிலக்கு அளித்தும், வரியைக் குறைத்தும் அதே நேரத்தில் தாங்கக்கூடியவர்கள் மீது வரியை விதித்தும் இந்த அரசு தன்னுடைய வருமானத்தை வருவாயைப் பெருக்கிக் கொண்டு இருக்கிற அதே சூழ்நிலையில் - அன்றைக்குக் கூட சில உறுப்பினர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். இந்த வரி வசூலிப்பில் கண்டிப்பாக இருக்க வேண்டும்; இதிலே தீவிரமாக முயற்சிகள் வேண்டும்; திறமையாகச் செயல்பட வேண்டுமென்று சொன்னார்கள். நான் அன்றைக்குச் சொன்னதை மீண்டும் இங்கே நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

### ஆயத்தீர்வை மீதான வரிவிதிப்பை எதிர்த்து வழக்கு

இந்தியாவில் தயாரிக்கப்படுகிற வெளிநாட்டு மதுவின் மீதான 1981 - லிருந்து, அந்த அதிபர்கள் 1989 ஆம் ஆண்டு முடிய செலுத்த வேண்டிய ஆயத் தீர்வை மீதான வரி 57.46 கோடி ரூபாய். அவர்கள்செலுத்த வேண்டிய ஆயத்தீர்வை மீதான விற்பனை வரிதான் இந்த 57 கோடி ரூபாய். இந்த வரியை வசூலிக்க 1989லேயே நடவடிக்கை எடுக்கப்பட்டது. தி.மு.க. ஆட்சியிலே இருந்தபோது, அவர்கள் நடவடிக்கையை எதிர்த்து உயர்நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு அரசுக்கு சாதகமாக அமைந்தது. எனவே அவர்கள் உச்சநீதி மன்றத்திற்குத் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீட்டிற்குச் சென்றார்கள். உச்சநீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றதே தவிர இடைக்கால தடையாணை விதிக்கப்படவில்லை. இடைக்காலத் தடையாணை இல்லையென்றால் அந்தவரியை வசூலித்து இருக்கலாம். வரி வசூலிக்கப் படவில்லை. இதற்கிடையிலே அவர்களுக்கு ஏதுவாக திராவிட முன்னேற்றக் கழக அரசு கலைக்கப்பட்டுவிட்டது. இப்போதும் அவர்களுக்கு ஏதுவாகத்தானே - இதையெல்லாம் செய்ய வேண்டுமென்ப தற்காகத்தானே தி.மு.க ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள்? அவர்களுக்கு ஏதுவாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அப்போது கலைக்கப்பட்டது. அப்படி கலைக்கப்பட்ட பிறகு கவர்னருடைய ஆட்சி வந்தது. அந்த கவர்னர் பீஷ்ம நாராயண் சிங், கவர்னராக இருந்தபோது இந்தக் கோப்பு அவர்களுக்கு வந்தவுடன் அவர்கள் சொன்னார்கள்.

தடையாணைதான் இல்லையே, வரியை வசூலிக்கலாமே என்று கருதிப் பார்க்காமல், இது குறித்து உச்சநீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது, ஆகவே வசூலிக்க வேண்டாமென்று அவர், அவருடைய கருத்தை அதிலே, அந்தக் கோப்பிலே பதிய வைத்திருக்கிறார். கவர்னர் ஆட்சிக்குப் பிறகு 1991ல் நடந்த தேர்தலில் ஜெயலலிதா தலைமையிலே ஆட்சி அமைந்தது. அந்த ஆட்சி அமைந்த பிறகு கவர்னர் இடத்திலே இருந்த அந்தக் கோப்பு சுற்றி நிதி அமைச்சருக்கு வந்தது. நிதியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அந்தக்கோப்பிலே 31.7.91ல் கையெழுத்திடுகிறார். இப்படி ஒரு நிலைமை இருக்கிறது என்று அவர் ஒன்றும் கருத்துச் சொல்லவில்லை. அவர் ஒன்றும் கருத்துச் சொல்ல முடியாது. அவரெல்லாம் எப்படிக் கருத்துச் சொல்ல முடியும்? நிதியமைச்சர் கருத்துச் சொல்ல முடியுமா? நிதியமைச்சர் கோப்பிலே கையெழுத்து

போடுகிறார். கையெழுத்துப் போட்டு முதலமைச்சருக்கு அனுப்புகிறார். 31.7.91ல் நாவலர் நெடுஞ்செழியன் நிதியமைச்சர் கையெழுத்துப் போட்டு முதலமைச்சருக்குக் கோப்பினை அனுப்பி வைக்கிறார்.

### ஒரு வருடம் 4 மாதம் கழித்து ஜெயலலிதா கையெழுத்து

முதலமைச்சர் அந்தக் கோப்பினைப் பார்த்துவிட்டு, ஒரு வருடம் நான்கு மாதங்கள், பத்தொன்பது நாட்கள் கழித்து அதிலே கையெழுத்து இடுகிறார். என்ன கையெழுத்து. இவ்வளவு நாட்கள் ஏன் தாமதம். உடனே வசூல் செய் என்றா ? இல்லை. வெறும் கையெழுத்து. நிதியமைச்சர் என்ன கையெழுத்து இட்டாரோ. அதே கையெழுத்தை அவரும் இட்டார். எதற்கு நிதியமைச்சர் கையெழுத்து இட்டிருக்கிறார் ? இப்போது வசூலிக்க வேண்டாம். வழக்கு முடியட்டும் என்று எழுதியிருக்கிறாரே கவர்னர். அதை ஏற்றுக் கொண்டுதான் நிதியமைச்சர் கையெழுத்து இட்டிருப்பதாகப் பொருள். அதையே திரும்பவும் முதலமைச்சரும் ஏற்றுக்கொண்டு. அவரும் கையெழுத்திடுகிறார். எனவே, அது வசூலிக்கப்படவேயில்லை. நம்முடைய ஆட்சி 1996 ஆம் ஆண்டு வந்தவுடன். அந்தக் கோப்பை எங்கெங்கோ சுற்றி. தேடிப்பார்த்து. கடைசியாக அதைப் பார்த்தபோது. இந்த வரியை வசூலிக்கச் சொல்லி உத்தரவிடப்பட்டது. அவ்வாறு வசூலிக்கச் சொல்லி உத்தரவிடப்பட்டதும் இந்த 57 கோடி ரூபாயைச் செலுத்த வேண்டியவர்கள் நம்மைச் சந்தித்து. தவணை முறையில் கட்டுகிறோம் என்றோ. அல்லது இரண்டு ஆண்டுக்காலம் தவணை கொடுங்கள் என்றோ யாரும் கேட்கவில்லை.

### தடையாணையை நீக்கிட உயர்நீதிமன்றம் செல்ல உத்தரவு

இதற்கிடையிலே உச்சநீதிமன்றத்தினுடைய ஆணையும் வந்து விட்டது. அந்த வரியைக் கட்டத்தான் வேண்டுமென்று உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பும் வந்துவிட்டது. இதில் நாம் கவனமாகப் பார்க்க வேண்டும். உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பும் வந்துவிட்டது. உடனடியாகக் கட்ட வேண்டுமென்று அவர்களுக்கு நோட்டீஸ் போனதும். சிட்டி சிவில் கோர்ட்டுக்குப்போய் ஸ்டே வாங்கிவிட்டார்கள். உச்சநீதிமன்றத்தினுடைய ஆணைக்கு சிட்டி சிவில் கோர்ட்டிலே ஸ்டே கொடுக்கப்பட்டது. வழக்கினை நடத்துங்கள்; தீவிரமாக நடத்துங்கள் என்று சொன்னேன். வழக்கும் நடத்தப்பட்டது. அதில், 30 ஆம் தேதியன்று தீர்ப்பு. தீர்ப்பு வரும் என்று எதிர்பார்த்து உட்கார்ந்திருந்தால் நீதிபதிசொல்லிவிட்டார், "மறுபடியும் மறு ஆய்வு செய்யப்போகிறேன்; தெளிவாக்கப்பட வேண்டியிருக்கிறது; மறுவிசாரணை நடத்தப் போகிறேன்" என்று சொல்லி விட்டார். சிட்டி சிவில் கோர்ட்டு நீதிபதி மறு விசாரணை நடத்தப் போகிறேன் என்று 'கம்ப்ளீட்'டாக எல்லாவற்றையும் 'ரீ-ஓப்பன்' பண்ணப் போகிறேன் என்று சொல்லி. மீண்டும் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நான் உங்களுக்கு உறுதியளிக்கின்றேன். தடையாணையை நீக்கி அந்தத் தொகையை விரைவிலே வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் துறைக்கு ஆணையிட்டதோடு. சிட்டி சிவில் கோர்ட்டினுடைய தடையாணையை நீக்கிட உயர்நீதிமன்றத்திற்குச் செல்லுமாறு ஆணையிட்டுள்ளேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படி ஒரு நிலைமை யாரும் எதையும் செய்தாக முடிகிறது இன்றைக்கு நாட்டில். நான் எந்தத் துறையையும் குறை கூறவில்லை. ஆனால். இந்த 57 கோடி ரூபாய் அரசுக்கு வந்து சேர்ந்தால், எத்தனை நல்ல காரியங்களை எத்தனை எளியவர்களுக்கான திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான் இதைச்சொல்கிறேன்.

### மாவட்ட ஆட்சித் தலைவர்களின் அலுவலகங்களுக்குக் கட்டடங்கள்

இதற்கடுத்து. மாவட்ட நிர்வாகத்தைப் பற்றி யாரும் அதிகம் பேசவில்லை. காரணம். மாவட்டம் மிகவும் நன்றாக இருக்கும்போது எதற்காகப் பேச வேண்டும் என்று, பேசாமல் விட்டுவிட்டீர்கள் என்றே கருதுகிறேன். மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தவரையில். இப்போது மிக முக்கியமாக, மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்களுக்குக் கட்டடங்கள் கட்டுவதுதான் இருக்கின்றது. ஏற்கெனவே இருந்த அரசால். நான்கைந்து புதிய மாவட்டங்கள் அன்றைக்கு உருவாக்கப் பட்டது என்றாலும்கூட, அதிலே எந்த மாவட்டத்திலும் கட்டடங்கள் கட்டப்படவில்லை. தூத்துக்குடிக்கு கட்டடம் கட்டப்படவில்லை. திருவண்ணா மலையில் கட்டடம் கட்டுவதற்கு முயன்று. அதிலே ஒரு தகராறு ஏற்பட்டு நின்றுவிட்டது. விழுப்புரத்தில் நாம்தான் கட்டி முடித்திருக்கிறோம். இந்த மாதம் அதனுடைய திறப்பு விழா நடைபெற இருக்கிறது. நாமே அறிவித்து. நாமேதான் கட்டி முடித்திருக்கிறோம். மற்றும் நான்கு மாவட்டங்களில் இடங்கள் பார்க்கப்பட்டிருக்கின்றன. அங்கெல்லாம் கட்டடங்கள் கட்டப்பட இருக்கின்றன.

இப்பொழுது மாவட்ட ஆட்சித் தலைவர்கள் புதிதாகப் பலபேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அது உங்களுக்கு நன்றாகத் தெரியும். சிலபேர் மாற்றப்பட்டிருக்கிறார்கள். புதிதாக வந்தவர்கள், ஏற்கெனவே இருப்பவர் எல்லோரும், நம்முடைய அரசின் திட்டங்களை. இந்த நிதிநிலை அறிக்கையிலே நாம் சொல்லியிருக்கின்ற திட்டங்களை 'இம்ப்ளிமெண்ட்' - நடைமுறைப் படுத்துவதற்குத் தக்க அறிவுரைகளைப் பெறுவதற்கும். அவர்களுடைய கருத்துக்களை அரசு பெறுவதற்கும் ஏற்ற வகையில் ஜூன் மாத முதல் வாரத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு. போலீஸ் அதிகாரிகளுடைய மாநாடு நடைபெற இருக்கிறது. அந்த மாநாட்டில். நிதிநிலை அறிக்கையிலே 1996 - 97. 1997 - 98. 1998 - 99 இவைகளில் அறிவிக்கப்பட்ட திட்டங்களில் எவையெவை எஞ்சியிருக்கின்றதோ. அவற்றை நிறைவேற்றவும். அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். நமக்கு நாமே போன்ற திட்டங்களை நிறைவேற்றவும். மக்களுடைய அடிப்படை வசதிகளையெல்லாம் செய்து கொடுப்பது இந்த அரசினுடைய முக்கியமான குறிக்கோள் என்ற அந்தக் குறிக்கோளை நோக்கிப் பயணம் நடத்தவும் அந்த மாநாடு பெரிதும் பயன்படும் என்று கருதுகின்றேன்.



**சீர்திருத்தங்கள் மக்களுக்கு ஒழுக்கத்தைக் கற்பிக்கவும், அறிவை விசாலப்படுத்தவும், உயிர்களிடத்தில் அன்பும் இரக்கமும் காட்டவும், சமத்துவத்தையும், சுயமரியாதை உணர்ச்சியையும் அதிகப்படுத்தவுமே அமைய வேண்டும்.**

**- தந்தை பெரியார்**

எனவே, மாவட்ட நிர்வாகம் மற்றும் வணிகவரித்துறை நிர்வாகம் இவைகள் பற்றியெல்லாம் வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிற உறுப்பினர்கள், அவைகளைத் திரும்பப் பெற்று, இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

- சட்டப்பேரவையில் 4.5.98 அன்று வணிக வரித்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதங்களுக்குப் பதிலளித்து மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை. ★

# திருவாரூரும் திராவிட இயக்கமும்

- திருவாரூர் கே.தங்கராசு

தண்புனல் காவிரி பாயும் வளமார் தஞ்சைத் தரணி இன்று மூன்று தனித்தனி மாவட்டங்களாக - நிர்வாக வசதிக்காகப் பிரிவுபட்டுள்ளது.

அவற்றுள் திருவாரூர் மாவட்டம் நடுநாயகமாக இலங்குகின்றது!

பிளவுபடாத தஞ்சை மாவட்டம் முற்றிலுமே திராவிடர் இயக்கக் கோட்டைதான் ஒரு காலத்தில் - பெரியார் அவர்களது கருஞ் சட்டைப் படை வீரர்களின் பாசறையாகவும் - பேரறிஞர் அண்ணாவின் போர் மறவர்களின் அணிவகுப்புக் கூடாரமாகவும் திகழ்ந்துள்ளது!



பிரிவுக்குப்பிறகு - சில பல பிளவுகள் ஏற்பட்டுள்ளதை மறைக்க இயலாது! திரு-ஆரூர் திருநகர் காவிரியின் பெருங்கிளை நதியாகிய வெட்டாற்றின் (வெட்டப்பட்ட ஆறு - அக்காலச் சோழ மன்னர்களின் நீர்ப்பாசன நுண்ணறிவுக்கோர் சான்று - கல்லணை போன்று!) சிறு கிளை நதியாகிய ஓடம்போக்கி எனும் சிற்றாறு இருகூறுகளாகப் பிரிக்க வடக்கில் அழகு கலை நயம் பொலியும் தியாகேசன் ஆலயமும் - தென்பால் வணிக வீதிகளும்; புகைவண்டி நிலையமும் பேருந்து நிலையமும் கொண்ட நகராட்சியாகும்.

சுற்றிலும் கழனிகள் - கன்னலும் - வாழையும் - செந்நெலும் தெங்கும் எங்கும் பொலியும் காட்சி, பார்வைக்கு மாட்சியாம்!

அந்நகரும் மாவட்டமும் தந்தை பெரியாரது கொள்கையின் பிடிப்பு தளராத கோட்டமென்றால் மிகையாகாது!

அக்காலத்தில் (ஏன், இன்றுங்கூட) பெருந்தொழில் வளம் ஏதுமற்ற மாவட்டத்தில் பெரும் பண்ணையார்களே (நிலப்பிரபுக்கள்) மிகுந்திருந்தனர்!

அவர்தம் பண்ணையில் உழைப்பதற்காகவே 'பகவான்' தம்மைப் படைத்திருப்பதாக நம்பி 'அடிமை வாழ்வை' ஏற்று நீண்ட நெடுங்காலமாக வாழ்ந்துவந்த சமுதாயத்தின் அடித்தட்டுத் தாழ்த்தப்பட்ட மக்களிடையே தந்தை பெரியார் அவர்களது சுயமரியாதைப் பகுத்தறிவுப் பிரச்சாரம் 'காட்டுத் தீ'யெனப் பரவியதில் வியப்பதற் கேதுமில்லை!

நிலப்பிரபுத்துவ வழிவழிவந்த சீமான்கள் நீதிக்கட்சியின்பால் தங்கள் ஆதரவை நல்கியதும் பெரியார் அவர்கள் நீதிக்கட்சிக்கு ஒருசமயம் தமது ஆதரவைத் தந்ததும் - அதன்வழி பெரியார் அவர்களது நீதிக்கட்சி ஆதரவுக்கு மட்டுமே தங்களது ஆதரவை நல்கிவந்த இராமானுஜம் (முதலியார்) ஸ்ரீதியாகராஜன் (முதலியார்) போன்றவர்கள் 1944 சேலம் மாநாட்டில் நீதிக்கட்சி 'திராவிடக்கழகமாக' மாற்றப்பட்டவுடன் பூனை வரக்கண்ட எலிகள் போல பாய்ந்தோடிவிட்டனர்; ஒருசில ராவ்பகதூர்கள் தலைமறைவு - "விடுதலை" வரும் அறிகுறி தென்பட்டவுடன் பேராயக்கட்சியில் (காங்கிரசு) சேர்ந்துவிட்டனர்!

என்றாலும் திருமிகு ஆறுமுகம் (நாடார்) திருவாளர்கள் த. சிங்கராயர், முத்துக்கிருஷ்ணன், தண்டவாளம் அரங்கராசு (இன்று திருவிடம் திங்களோடு நடத்தி[illegible]திருவிடம் அவர்களது தந்தையார்) மற்றும் V.S.P. யாகூப் போன்றவர்கள் 'திராவிடர் கழகத்தின் தூண்களாக' நின்று களப்பணிகளைத் துணிவோடு ஆற்றியதை யாரும் மறுக்க முடியாது.

மேலே குறிப்பிடப்பட்டவர்களில் யாருமே சீமான் இல்லை! ஆறுமுகனார் சிறிது வசதிபடைத்தவர்; சிங்கராயர் சிறு-சிறு வணிகம் செய்தவர்; அரங்கராசு கடைவீதியில் ஆயத்த உடை அங்காடி நடத்தியவர் V.S.P. யாகூப் முழுநேர கழகப் பணியாளர்.

ஓடம்போக்கியாற்றின் தென்பகுதி விஜயபுரம் என்று அழைக்கப்பட்டது! அங்கு கடைத்தெருவின் நடுவில் உள்ள எல்லையம்மன் ஆலயத்திற்கு எதிரில் உள்ள சன்னிதியில்தான் பெரும்பாலான பொதுக்கூட்டங்கள் நடைபெறும். பெரியார், அண்ணா, காமராசர் போன்ற பெருந்தலைவர்களது கூட்டங்களும் நடக்கும் இடம் அதுவே!

ஆற்றின் வடபுறமான திருவாரூர் திராவிட இயக்கத் தொண்டர்களை நிரம்பக்கொண்டது என்றால் - தென்புறமுள்ள விஜயபுரம் காங்கிரசுக்காரர்களை அதிகம் உள்ளடக்கியது என்று கூறலாம்.

வணிகர் துரைசாமி (செட்டியார்), மிட்டாய்க்கடை சிவராமராவ், பொடிக்கடை அய்யாச்சாமி, வெற்றிலைப்பாக்குக் கடை பாவாடை (வன்னியர்), தியாகி சிங்காரவேல் - இவர் 1942 வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் மூன்றாண்டு சிறைத்தண்டனை பெற்று அலிப்புரம் (கல்கத்தா) சிறையில் வாடிய திருவாரூரின் ஒரே காங்கிரசுத் தியாகி!

திராவிட இயக்க - காங்கிரசுக் கட்சிக் கூட்டங்கள் மாதந்தவறாது மாறிமாறி எல்லையம்மன் சன்னதியில் நடைபெறும்! தவறாது குழப்பங்களும் ஏற்படும்!

இந்த நிலையில் 'திடீரென்று' வழமைக்கு மாறாகப் புதுக்குரல் ஒன்று இடியென வந்து அனைவரையும் தாக்கியது;

"பாராட்டிப் போற்றிவந்த
பழமை உலகம்
ஈரோட்டுப் பூகம்பத்தால்
இடியுது பார்"

- என்ற முழக்கம்தான் அது! அந்த ஒலி பொதுவாக அனைவரையும் மிகமிகக் கவர்ந்தது. பண்டிதர்கள் இலக்கண இலக்கிய கவிதை நயத்துக்காகப் பாராட்டினார்கள்!

பாமரர்கள் இந்தக் குரலுக்குச் சொந்தக்காரரோடு தங்களை இணைத்துக் கொள்ளத் துடித்தார்கள். கழகத்தோழர்கள் தங்களுக்கு மிகப்பெரிய போர்வீரர் கிடைத்து விட்டதாகச் செம்மாந்து நடந்தார்கள்.

காலணா குறைந்தாலும் அச்சிட்ட வரிஏட்டைக் கொடுக்க மாட்டார். முழுத்தொகையும் கட்டிவிட்டுத்தான் ஏடுகளை எடுத்து ஊர்களுக்கு அனுப்பிட முடியும்!

பின்னாளில் அவர் தீவிர தி.மு.க.வாதியாகி திருவாரூர் நகரமன்றத் தலைவருமானார் என்பது வேறு!

பிறகென்ன! முரசொலி வார ஏடு! முற்றிலும் புதிய நடையிலான உணர்ச்சிப் பிரவாகப் பேச்சு! நடிகவேள் எம்.ஆர்.இராதாவுக்காக எழுதி உடன் நடித்த 'தூக்குமேடை' நாடகப் பிரவாகம்! அண்ணாவின் 'ஓர்இரவு', 'வேலைக்காரி' நாடகங்கள் ஆண்டுக் கணக்கில் தஞ்சை



காங்கிரசுக்காரர்கள் இம்மாதிரி எழுதிட நம்மில் எவருமில்லையே என்று ஏங்கினார்கள்.

அந்தக் குரலுக்குரியவர் - புதுக்கவிதையின் 'பிதாமகரான' இன்றைய தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள்தான்! 'கவிதையல்ல' என்ற தலைப்பில் அவர் வெளியிட்டுள்ள புதுக்கவிதை நூலில் இதுபோன்று நிரம்பக் காணலாம்!

உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் போதே 'முரசொலி' கையெழுத்து ஏட்டை நடத்தியவர் - கல்வியை முடித்து ஈரோட்டில் தந்தை பெரியார் அவர்களது குடியரசு - விடுதலை ஏடுகளின் துணையாசிரியராக இருந்து பயிற்சி முடித்தபின் திருவாரூர் வந்து 'முரசொலி' வாரஏட்டை 'கருணாநிதி' அச்சகத்தில் அச்சிட்டு வெளியிட்டார்; அந்த அச்சகம் கருணை எம்ஜமால் என்ற முஸ்லிம் நண்பருடையது. அவர் பெயருக்கு முன்புதான் கருணை இருக்கிறதே தவிர மிகுந்த கண்டிப்புக்காரர்!

இராமநாதன் அரங்கில் நடந்ததோடு - தந்தை பெரியார் அவர்களின் சூறாவளி சுற்றுப்பயணம் பிரிக்கப்படாத தஞ்சை மாவட்டத்தில் திராவிட இயக்கம் இல்லாத பட்டி (பட்டின - பட்டணங்களைப் பற்றிவாழும் சிறு குடியிருப்பு) தொட்டி (நகரங்களை - பேரூர்களைத் தொற்றி வாழும் சிற்றூர்) எங்கும் பரவிட நடிகவேள் எம்.ஆர்.இராதா திருவாரூரிலேயே முகாமிட்டு தனது 'விலோ' (விதவையின் கண்ணீர்), 'இழந்த காதல்', 'லட்சுமிகாந்தன்' போன்ற நாடகங்களில் நடித்ததோடு மறைந்த சட்டப்பேரவைத் தலைவர் சி.பி.சிற்றரசு அவர்களைக் கொண்டு எழுதிய 'போர்வாள்' என்ற மாபெரும் உணர்ச்சிக் காவிய நாடகத்தைத் தயாரித்து அதனை சிற்றரசு உடன் நடிக்க திருவாரூரிலே அரங்கேற்றினர்.

பாவலர் பாலசுந்தரம் அவர்களது 'பராசக்தி' நாடகம் ஓர்புறம்; கலைஞர் தீட்டிய 'மந்திரிகுமாரி' நாடகம் ரத்தினம் கம்பெனியாரால் ஓர்பக்கம்; 'சாந்தா அல்லது பழனியப்பன்' நாடகம் R.V.கோபால் கம்பெனியால் ஓர்பக்கம் நடந்தபடி, இப்படி எங்கெங்கு காணினும் பகுத்தறிவு சுயமரியாதைப் பிரச்சாரம் பொங்கு காவிரிப்புனல் தோற்றிடும் விதமாக நெடும் பிரவாகமெடுத்து ஓடியது!

இவற்றுடன் பட்டுக்கோட்டை K.V.அழகிரிசாமி அவர்களது வெண்கல நாத முழக்கம்! பேராசிரியர் க.அன்பழகன், இரா.நெடுஞ்செழியன், டார்பிடோ A.P.ஜனார்த்தனம், S.D.விவேகி, பாவலர் பாலசுந்தரம், குடந்தை S.K.சாமி மற்றும் நூற்றுக்கணக்கானவர்களது பகுத்தறிவுப் பிரச்சாரம், இத்தனைக்கும் மேலாக பாவேந்தர் பாரதிதாசன் அவர்களது பகுத்தறிவுப்பாடல்களை விஜயபுரம் கணபதி, S.K.சாமி போன்றவர்கள் தங்கள் இயக்கத்திற்காகப் பாடிய பாடல்கள் உள்ளபடியே 'ஈரோட்டு பூகம்பத்தை'யே உண்டாக்கி விட்டது.

இடையே 1947 ஆகஸ்ட் 15ல் நாடு விடுதலையடைந்து விட்டதை ஒரு சமாதானமாகக் கூறிக்கொண்டு அதுவரை திராவிடர் கழகக் கூட்டங்களில் 'கலகம்' விளைப்பது, எதிர்மேடை போடுவது என்ற நிலையில் இருந்த நூற்றுக்கணக்கான காங்கிரசுக்காரர்கள் திராவிடர் கழகத்தில் ஒட்டுமொத்தமாக இணைந்துவிட்டார்கள்.

கேட்டால், 'சுதந்திரம்' வாங்கித்தருவது ஒன்றுதான் காங்கிரசுக் கட்சியின் வேலை; அது முடிந்துவிட்டது (சுதந்திரம் வந்துவிட்டது). காங்கிரசுக்கு வேலை இல்லை அதைக் கலைந்து விடலாம் என்ற காந்தியடிகளின் கூற்றை எடுத்துக்காட்டி இனி எங்கள் வேலையெல்லாம் ஆண்டாண்டுகாலமாக அடிமைப்பட்டு சதிவழக்குகளில் வீழ்ந்து வாழ்வையே மாய்த்துக் கொண்டுவாழும் கோடிக்கணக்கான தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக உழைப்பதே சரியாகும் - அதற்கு தந்தை பெரியார் அவர்களையும் அவர்களது தன்மானக் கொள்கைகளையும் விட்டால் வேறு வழியே இல்லையென்று அடித்துச் சொன்னார்கள்!

எனவே இப்போது ஏறத்தாழ எதிர்ப்பு என்பது சிறிதுமின்றி 'இயக்கம்' நாடெங்கும் பரவியது போல தஞ்சைத்தரணியில் பல மடங்கு வேகமாகப் பரவியது. அதனில் இன்றைய திருவாரூர் மாவட்டம் முதலிடம் வகித்தது!

திராவிட இயக்கத்தின் தாக்கம் இன்னும் முற்றாகக் குறையாத காரணத்தால் தென்மாவட்டங்களைப் போல சாதி-மதப் போரில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாது - இன்றைய நீர்வரத்துக் குறைந்த காவிரிபோலத் திருவாரூர் மாவட்டம் அமைதியாகக் காட்சி தருகிறது! ★

# கலைஞர் கருணை



## திரு. அ. அசோகன், எம்.எல்.ஏ., அவர்களுடன் ஓர் சந்திப்பு

அரசு மூலமான பணிகளாகட்டும்; கட்சிகள் மூலமான பணிகளாகட்டும்; இப்படியுமில்லாமல் பல்வேறு சமூக அமைப்புகள் மூலம் நடத்தப்படும் பணிகள்தானாகட்டும் - எல்லாவற்றிலும் முன்னால் நின்று தொகுதி மக்களால் போற்றிப் புகழப்படுபவராகத் திகழ்கிறார், திரு.அ.அசோகன், எம்.எல்.ஏ., அவர்கள்.

தமிழ்நாட்டில் உள்ள 234 சட்டமன்றத் தொகுதிகளிலும், அதிக வாக்குகள் வித்தியாசத்தில் பெருவெற்றி பெற்றிருக்கிறார் இவர்; 34,437 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி வாகை சூடியிருக்கிறார்.

துருதுருப்பான இளைஞராக இருக்கிறார், அசோகன். இதுமட்டுமே அவருடைய பெயருக்கும், புகழுக்கும் காரணமா ? அவரையே சந்தித்துப் பேசலாம் என்று வீடு தேடிச் சென்றோம். கமலாலயம் குளத்தின் மேல்கரையில் நிற்கின்ற தியாகராசர் கோயிலின் நெடிய கோபுரத்தின் எதிர்சாரியில் உள்ள சிறிய வீடு அவருடையது.

"வாங்கண்ணே!" என்று இன்முகத்தோடு கரம்கூப்பி நம்மை வரவேற்றார் அசோகன். "நல்லவேளை...நாளைக்கு வந்திருந்தீங்கன்னா நான் கிடைச்சிருக்க மாட்டேன்" என்றார், பலத்த சிரிப்போடு.

"நாளைக்கு என்ன - எதுனா வெளியூர்ப் பயணமா ?" என்று கேட்டோம்.

"சட்டசபை நடந்துகிட்டிருக்குதில்லே, போவேணாமா ?"

"ஓ!"

"என்ன சாதாரணமா ஓங்கிறீங்க ? ஒருநா போகலைன்னா என்ன கெட்டும்னு சில பேராட்டம் நீங்களும் நினைக்கலாம். எம்.எல்.ஏ. எல்லாரும் பதவியேத்துகிட்டப்ப முதல் நபரா நான்தான் பதவியேத்துகிட்டேன். அதேமாதிரி...அன்னையிலேர்ந்து இன்னைய வரைக்கும் ஒருநாள் கூட தவறாமெ சட்டசபைக்குப் போய்வர்ற எம்.எல்.ஏ.வுல முதல் ஆளாவும் நான்தாண்ணே இருக்கேன்!"

"உள்ளபடியே பெரிய விஷயம்தான்" - என்று பாராட்டிவிட்டு நாம் பேசத்தொடங்கும் முன்பாக அவரே ஆரம்பித்தார் -

"தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையிலே இருக்கிற ஆதிதிராவிடர் நலம் மற்றும் மாநில விழிப்புக் கண்காணிப்புக் குழு உறுப்பினராவும் நான் இருக்கேன்" - என்று பெருமையோடு சொல்லிக்கொண்ட அசோகன், தான் சட்டமன்ற உறுப்பினர் ஆனதிலிருந்து திருவாரூருக்கும் தமது சட்டமன்றத் தொகுதி மக்களுக்கும் அன்று வரை செய்துமுடித்துள்ள சாதனைகளை அடுக்கிக்கொண்டே போனார்.

மாவட்டத் தலைநகரான திருவாரூரில் ரூ.5.50 கோடி செலவில் ரயில்வே கீழ்ப்பாலம் கட்டப்படுகிறது ; நகரின் மையப் பகுதியில் ஓடும் ஓடம் போக்கி ஆற்றின் குறுக்கே ஒரு கோடி ரூபாய் மதிப்பில் பாலம் கட்டப்படவிருக்கிறது

திருவாரூரில் இருக்கின்ற அரசு பொதுமருத்துவமனையில், சிகிச்சை வசதிக்காகவும், புதிய கட்டடங்கள், படுக்கை வசதி போன்றவற்றுக்காகவும் அரசு மூலம் ரூ.1 கோடியே 25 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டிருக்கிறது.

அரசு அலுவலகங்கள் கட்டுவதற்காக ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவிட அனுமதி பெறப்பட்டிருக்கிறது.

திருவாரூர் ஒன்றியத்திலிருக்கின்ற திருநெய்ப்பேர், புதூர், கொட்டாரக்குடி, புலிவலம் ஆகிய இடங்களில் உள்ள அரசுப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட ரூ.25 இலட்சம் அரசு நிதி ஒதுக்கியுள்ளது.

ஆண்டி பாளையம், புதூர், பெருங்குடி ஆகிய இடங்களில் துணைச் சுகாதார நிலையங்கள் கட்டுவதற்காக ரூ.13.50 இலட்சம் பெறப்பட்டு வேலைகள் நடந்துவருகிறது.

### திருவாரூர் மாவட்டத்தில் மக்கள் நல்வாழ்வுப் பணி

- ★ மாவட்ட மருத்துவமனை ........ 1
- ★ வட்ட மருத்துவமனை ........ 8
- ★ ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ........ 39
- ★ துணைச்சுகாதார நிலையங்கள் ........ 10
- ★ கிராமப்புற வைத்திய சாலை (சித்த மருத்துவம்) ........ 23
- ★ பாலிடெக்னிக் ........ 2



**இலட்சிய வெற்றிக்குப் பதவி ஒரு கருவியே தவிர, பதவியே இலட்சியம் ஆகிவிட முடியாது!**

**- கலைஞர்**

கொரடாச்சேரி மக்கள் நீண்ட நாட்களாக, அங்குள்ள உயர்நிலைப்பள்ளியை மேனிலைப் பள்ளியாக ஆக்கவேண்டும் என்று கேட்டு வந்தனர்; அக்கோரிக்கை நிறைவேற்றப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து திருவாரூரில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியும், மகளிர் கல்லூரியும், பல் தொழில்நுட்பக் கல்லூரியும் கட்டப்படவிருக்கிறது.

"ஏதேது...ஏராளமாதான் செய்துகிட்டுவர்றீங்க; அதான் மக்கள் பாராட்றாங்க" - என்று நாம் வியப்புடன் கூற,

"அட, பாதிதாங்க சொல்லியிருக்கேன்; இன்னம் நெறயா சொல்லவேண்டியிருக்குது; செய்ய வேண்டியிருக்குது. மக்கள் பாராட்றாங்கன்னா...நான் நம்ம கட்சிக்காரவங்க - மத்த கட்சிக்காரவங்கன்னு வித்தியாசம் பார்க்காம...நம்ம தொகுதி மக்கள்னு பொதுப்பார்வையோட அவர்கள் குறைகளை உணர்ந்து நடவடிக்கை எடுக்கிறதாலதாங்க. தலைவர் கலைஞர்கிட்ட நான் கத்துகிட்ட பாடம் இது. உதாரணத்துக்கு அப்படி ஒண்ணு சொல்றேன் கேளுங்க - கீவளூர் யூனியன்ல முப்பத்திக்கோட்டகம்னு ஒரு கிராமம் இருக்கு; கிட்டத்தட்ட தீவு மாதிரிதான் அது. லேசுல யாரும் போய்வர முடியாது. துக்கம் விசாரிக்கப் போனாகூட...இக்கரையிலேயே நின்று விசாரிச்சுட்டுத் திரும்பிடற மாதிரிதான் நிலைமை இருந்தது. இத்தனைக்கும், கம்யூனிஸ்ட் அதிகமுள்ள கிராமம் அது. நான் அதையெல்லாம் பார்க்காமெ...அரசாங்கத்தெ வலியுறுத்தி ஒண்ணரைக் கோடி ரூபாய்ல ஒருபாலம் கட்டவெச்சென்; அந்த குக்கிராமத்துக்குத் தார் ரோடு போடவும் தலைவர் கலைஞர் கருணையால ஏற்பாடு பண்ணீட்டேன். இப்பிடி நல்லது செஞ்சா மக்கள் பாராட்டமாட்டாங்களா என்ன!"

மேலும் தன்னுடைய சாதனைப் பட்டியலைத் தொடர்ந்தார், அசோகன்.

இவருடைய முயற்சியால் - அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் ரூ.1 கோடி செலவில் நவீன கிராமம் அமைக்கத் திருவாரூர் ஒன்றியம் புலிவலம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது.

சமத்துவபுரம் அமைத்திட அலிவலம் கிராமம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.



*திருவாரூர் - பேரறிஞர் அண்ணா சாலையில் உள்ள ரயில் பாதையில், கீழ்ப்பாலம் அமைக்கும் பணி முடுக்கிவிடப்பட்டுள்ளது.*

கொரடாச்சேரி பேரூராட்சியில் குழந்தைகள் பூங்கா அமைகிறது.

பத்தூர், பத்தூர் மேல்கரையினை இணைத்திட வெட்டாற்றின் குறுக்கே பாலம் அமைத்திடக் கோரப்பட்டுள்ளது.

கீழ்வேளூரை வட்டத் தலைநகர் ஆக்கி, அங்கே ஒரு புதிய தீயணைப்பு நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. கீழ்வேளூர் - ஓர்குடி கிராமச்சாலை, வரும் நிதியாண்டில் ரூ.42 இலட்சம் செலவில் தார்ச்சாலையாக அமைக்கப்படவுள்ளது.

திருவாரூர் தொகுதி முழுவதும் 10,814 ஆதிதிராவிடர் குடிசைகளுக்குக் கடந்த ஆண்டில் ஒற்றை மின்விளக்கு வசதி செய்து தரப்பட்டது.

## திருவாரூர் மாவட்டத்தில்...

*24 மணி நேரமும் செயல்படும் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் - 5.*

*அவை; மக்கள் தொகையுடன் -*

| | | | |
|---|---|---|---|
| 1. | உள்ளிக்கோட்டை | - | 36,166 |
| 2. | முத்துப்பேட்டை | - | 36,889 |
| 3. | பூந்தோட்டம் | - | 21,134 |
| 4. | திருவீழிமிழலை | - | 20,034 |
| 5. | சித்தமல்லி | - | 33,544 |

திருவாரூர் நகர் முழுவதும் சோடியம் வேபர் விளக்குகள் போடப்பட்டிருக்கிறது.

தொகுதி முழுவதும் கிராமக் குடிநீர்த் திட்டங்களுக்காக ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

திருவாரூர் தொகுதியில் இராதாமங்கலம், வடகரை, வடக்குப் பனையூர், மாணலூர், கீழப்படுகை, குன்னியூர், திருநெய்ப்பேர், காவனூர், காவாலக்குடி, தேவர்கண்டநல்லூர், முசிரியம், காப்பணாமங்கலம், கல்லிக்குடி, அலிவலம், நெடுங்காட்டாங்குடி, ஓடாச்சேரி ஆகிய 16 கிராமங்களில் கால்நடைகள் நலம்பெறப் பார்வைக் கிளைநிலையங்கள் அமையவிருக்கின்றன.

இதுவரை விண்ணப்பித்த அனைவருக்கும் இலவச வீட்டுமனைப் பட்டா தரப்பட்டு வருகிறது.

அனைத்துக் கிராமங்களுக்கும் பேருந்து வசதி செய்திருக்கிறார்கள்.

"இதெல்லாம் சரி, சட்டமன்ற உறுப்பினருக்குன்னு ஒரு நிதி, தொகுதி மேம்பாட்டுக்கு அரசு மூலம் கொடுத்திருக்காங்களே - அதுல என்னவெல்லாம் செய்யத் திட்டமிட்டிருக்கீங்க ?"

"புதுசா உருவான மாவட்டம்க இந்தத் திருவாரூரு; ஏராளமா செய்ய வேண்டியதிருக்கு. கொஞ்சம் கொஞ்சமாத்தானே செய்யணும் ? எம்.எல்.ஏ. நிதியில ஒரு ஐம்பது இலட்சம் ரூபாயை செலவிட்டுத் தொகுதி பூரா...பரவலா...பல நல்ல காரியங்கள் செய்யிறதுன்னு திட்டமிட்டுருக்கேன்..." - இவ்வாறு உறுதிமிக்க குரலில் தொடங்கி அவர் தெரிவித்த பணிகள் இவை:

"திருவாரூர் ஒன்றியம் திருநெய்ப்பேர் அரசு மேல்நிலைப்பள்ளி, புதூர் அரசு உயர்நிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள்; கொடிக்கால் பாளையம், கொட்டாரக்குடி, அடியக்கமங்கலம், அலிவலம், புலிவலம், சூரனூர், புதூர், திருநெய்ப்பேர், செருகுடி ஆகிய கிராமங்களிலுள்ள உயர்நிலைப்பள்ளிகளுக்குச் சமையல் கூடம் மற்றும் குடிநீர் வசதிகள்; கீழ்வேளூர் அஞ்சுவட்டத்தம்மன் மகளிர் உயர்நிலைப் பள்ளிக்கு வகுப்பறைக் கட்டடங்கள்.



**தேசிய நெடுஞ்சாலை சீரமைப்பு**

மேல அனக்குடி ஆதிதிராவிடர் சாலை மேம்பாடு.

கீழ்வேளூர் ஒன்றியம் கோகூர் ஊராட்சியில் வெட்டாற்றின் குறுக்கே நடைப்பாலம்; வலிவலம் ஊராட்சி வெள்ளையாற்றின் குறுக்கே நடைப்பாலம்.

கொரடாச்சேரியில் குழந்தைகள் பூங்கா.

திருவாரூர் தியாகராசர் ஆலய நான்கு மடவளாகத்திலும் குடிநீர்க்குழாய்கள்; கமலாலயத் திருக்குளத்தின் நான்கு கரைகளிலும் சிமெண்ட் இருக்கைகள் அமைத்தல்; திருக்குளம் தூர்வாருதல், வடிநீர்க்குழாய் வசதி செய்தல்.

அரசு மருத்துவமனையில் வேன் நிறுத்துவதற்குக் கொட்டகை கட்டித்தருதல்.

"சரி, வேற என்னவெல்லாம் இந்தத் தொகுதிக்கு நீங்க செய்யிறதா இருக்கீங்க ?"—



"கீழ்வேளூர்லேயிருந்து கொரடாச்சேரி வரைக்கும் பல கோடி ரூபாய் செலவில அழகான உறுதிமிக்க அகலச் சாலை போடணும்; திருவாரூர்ல துணை மின்நிலையம் ஒண்ணு அமைக்கணும்; தலைவர் கலைஞர் அரசு ஒதுக்கீடு பண்ணிக் கொடுத்திருக்கிற பதினஞ்சி கோடி ரூபாய்ல, இந்தத் திருவாரூர் தொகுதியில தொகுப்பு வீடுகள், பள்ளிக் கட்டடங்கள், கிராமச் சாலைகள் எல்லாம் செய்தாக வேண்டியிருக்கு. இன்னொரு முக்கியமான வேலை என்னன்னா...பல கோடி ரூபாய் செலவிட்டாவது இந்தத் திருவாரூர் நகர்ல பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றியாகணும்!"

3 ஊராட்சி ஒன்றியங்களும், 2 பேரூராட்சிகளும், ஒரு நகராட்சியும் உடையதான திருவாரூர் சட்டமன்றத் தொகுதியின் உறுப்பினர் திரு.அ.அசோகன் அவர்கள், உண்மையான ஒரு செயல்வீரருக்கே உரிய மிடுக்கோடு இதைத் தெரிவித்தார்.

சில ஆண்டுகளுக்குமுன், கீழவெண்மணி கிராமத்தில், சிலர் வைக்கோல் போரில் போட்டுத் தீயிட்டுக் கொளுத்திக் கொலை செய்யப்பட்ட கொடூரச் சம்பவம் நினைவிருக்கிறதா? அதிலிருந்து தப்பி உயிர்மீண்ட ஓர் இளைஞருக்குத் தனது தங்கையை மணம் முடித்துக் கொடுத்திருக்கிறார் இவர். கழக இளைஞரணியில், மாவட்ட அமைப்பாளராக இருந்து அரும்பணியாற்றி வருகிறார்.

தொகுதி மக்களில், யார்-என்ன கேட்டுக் கடிதமெழுதினாலும் உடனுக்குடன் பதில் எழுதிவிடுகிறார்.

ஆந்திர மாநில மக்கள் புயல் சீற்றத்திற்கு ஆளாகி அவதிப்பட்டபோது, 'எக்ஸ்னோரா' அமைப்பின் சார்பில் ஏராளமான பொருட்களும் நிதியும் சேகரித்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மூலம் அனுப்பிவைத்திருக்கிறார்.

திருவாரூரில், சுக்கனாறு குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த ஆய்வு மேற்கொள்ளுமாறும் - இந்தப் புதிய மாவட்டம் பொருளாதார மேம்பாடுபெற, பல பெரிய தொழிற்சாலைகள் அமைக்கவேண்டுமென்றும் சட்டப்பேரவையில் அண்மையில் குரல் கொடுத்திருக்கிறார்.

'சேவைமுகாம்' நடத்தி, ஆரூர்ப் பெரியகோயிலில் உழவாரப் பணி நடத்திய சிறப்பும் இவருக்கு உண்டு.

- பி.எல்.ஆர்.



# திரு.வி.க.வும் கலைஞரும்!

சிந்துபாடும் அருவியெனச்
சிதம்பரனார் பெருகிவந்தால்
வண்டுபாடும் தமிழ்த்தென்றல்
வாராமல் இருந்திடுமோ?
தாய் அகத்தில் சுரக்கின்ற உணர்வோடு
தாலாட்டு மொழியினிலே - விடுதலைக்குப்
போராடி வெற்றிகண்ட
மாவீரர் - அவர், என்
திருவாரூர்ப் பிறந்ததனால்,
'திரு.வி.க.' ஆகிவிட்டார்! நானோ...
திரு.மு.க. ஆகவில்லை;
தி.மு.க. ஆகிவிட்டேன்!

- கலைஞர்
(உலகத் தமிழ் மாநாட்டுக் கவியரங்கில் பாடியதிலிருந்து.)

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க. முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை - தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், வாசினர் கோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002. தொலைபேசி : 568926 568927 564906



தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி


தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23





# அத்தியாவசிய பொருட்களுக்கு வரி விலக்கும் வரி குறைப்பும்

# அத்தியாவசியப் பொருட்களுக்கு,
# வரி விலக்கும் - வரி குறைப்பும்

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
**4-5-98** அன்று, சட்டப்பேரவையில், பொது விற்பனை வரி மற்றும்
மாவட்ட நிர்வாகம் குறித்த மானியக் கோரிக்கை
மீதான விவாதங்களுக்குப் பதிலளித்து
ஆற்றிய உரை.

*வெளியீடு:*
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

சிறப்பு வெளியீடு எண்:11

'தமிழரசு' இலவச வெளியீடு

25-5-1998

வெளியிடுபவர்:
இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

தமிழரசு அச்சகம்,
சென்னை-600 002.

# அத்தியாவசியப் பொருட்களுக்கு,

# வரி விலக்கும் - வரி குறைப்பும்

*4-5-98 அன்று, சட்டப்பேரவையில் பொது விற்பனை வரி மற்றும் மாவட்ட நிர்வாகம் குறித்த மானியக் கோரிக்கை மீதான விவாதங்களுக்குப் பதிலளித்து மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை.*

**பொ**து விற்பனை வரிகள், மற்றும் நிர்வாகம் குறிப்பாக, மாவட்ட நிர்வாகம், இவற்றினைக் குறித்து இன்றைய தினம் வைக்கப்பட்டுள்ள இந்த மானியக் கோரிக்கைகளில், உறுப்பினர்கள் தங்களுடைய சீரிய, செழுமிய கருத்துக்களை எல்லாம் எடுத்துக் கூறி இருக்கின்றார்கள். இந்தக் கோரிக்கையின் அடிப்படையிலே வைக்கப்பட்டுள்ள அவர்களுடைய முறையீடுகளை எல்லாம் என்னுடைய பதில் உரையிலேயே விளக்கிக் கூறி, அவைகளை ஏற்றுக் கொண்டேன் என்று கூறுகின்ற நிலை எனக்கு இல்லை என்பதை, கோரிக்கைகளை வைத்தவர்கள் மிக நன்றாக அறிவார்கள். ஏன் என்றால், நிதிநிலை அறிக்கை வெளியிடப்பட்டு, அதிலே பல்வேறு சலுகைகள், இந்த மூன்றாவது நிதிநிலை அறிக்கை உள்பட, வணிகர்களுக்கு பொதுமக்களுக்கு ஏற்ற வகையில், அறிவிக்கப்பட்டு, வியாபாரத்திலே கொசுறு என்பார்களே, அதைப்போல, சில கொசுறு கோரிக்கைகள் இங்கே எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றைப்பற்றி எல்லாம் பேசுவதற்கு முன்பு நம்முடைய நண்பர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பேசிய சுப்பராயன் அவர்கள் கூறிய ஒன்றை நானும் உன்னிப்பாகக் கவனித்தேன். இந்த அவையும் கவனித்தது. நாடும் கவனிக்கும். அவர்கள் சொன்னார்கள். "நீங்கள் வசூலிக்கின்ற வரி எவ்வளவோ அதற்கு ஈடான தொகை அதிகாரிகளால் கொள்ளை யடிக்கப்படுகின்றன" என்று குறிப்பிட்டார்கள்.

இதிலே சுட்டிக்காட்டி அவர்கள் பேசுகிறபோது உணவகங்களிலே வசூலிக்கப்படுகின்ற அந்த வரி பெரும்பாலும் அரசுக்குக் கிட்டாமல் அதிகாரிகளுக்கே செல்கிறது என்றும் இங்கே குறித்துச் சொன்னார்கள். நான் அதிகாரிகளுக்காக வக்காலத்து வாங்கவில்லை. வாங்குபவனும் அல்ல. ஆனால் அதே நேரத்தில் அதிகாரிகள் எல்லோருமே தவறு செய்யக் கூடியவர்கள் அல்ல. நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் கூட உதகையில் அளித்த ஒரு பேட்டியை இன்று காலைப் பத்திரிகையில் பார்த்தேன். அதிலே அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். 36 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மீது கலைஞர் நடவடிக்கை எடுத்துவிட்ட காரணத்தால் அதிகாரிகள் எல்லாம் செயல்படவே பயப்படுகிறார்கள் என்று அதிலே அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

யாராக இருந்தாலும் தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது இந்த அரசின் கொள்கை. ஏன் இதுவரையிலே எடுக்கவில்லை என்பது எதிர்க்கட்சியினுடைய கேள்வி. இந்தக் கொள்கைக்கும், இந்தக் கேள்விக்கும் முரண்பாடு ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் பழைய காலத்து அமைச்சர்கள் மாத்திரமல்ல, தவறு செய்த அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டது போல 36 பேர்கள் மீது அல்ல; ஏறத்தாழ 10 அதிகாரிகள் மீது - ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் அவர்கள் இங்கே 12 பேர் இருக்கலாம். அதிலேகூட 2, 3 பேரையும் மத்திய சர்க்கார் ஏற்றுக் கொள்ளவில்லை. மத்திய சர்க்காரிடத்திலே அனுமதி பெற்றுத்தான் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க முடியும். அதிலே கூட மத்திய அரசிலே 2,3

அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே இந்த 10, 12 அதிகாரிகளில், 8, 9 அதிகாரிகள் மீதுதான் அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

**திரு.சோ. பாலகிருஷ்ணன் :-** இந்த சுடுகாட்டு ஊழல் என்கின்ற பெயரால் நம்முடைய அரசு உயர்நீதிமன்றத்தில் மதுரையோடு நின்றுவிடக்கூடாது. எல்லா மாவட்டங்களுக்கும் சென்று அதை விசாரிக்க வேண்டுமென்று நம்முடைய அரசின் சார்பாக வழக்கறிஞர்கள் வாதாடிய பொழுது, அதன் காரணமாக உயர்நீதிமன்றத்தில் சி.பி.ஐக்கு அவர்கள் ஆணையிட்டு கிட்டத்தட்ட 30 அதிகாரிகள் மீது இன்று சி.பி.ஐ. நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அதன் காரணமாக அவர்கள் மனதிலே ஒரு குழப்பம் இருக்கிறது என்பதைத்தான் நான் பத்திரிக்கைச் செய்தியாகச் சொன்னேன் என்பதைத் தெரிவித்துக் கெகாள்கிறேன்.

**முதலமைச்சர் கலைஞர் :-** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடுவது போன்று அது அரசு தொடர்ந்த வழக்கல்ல; அவரே குறிப்பிட்டிருக்கிறார்கள். சி.பி.ஐ. வழக்கு என்று. எனவே சி.பி.ஐ. வழக்கில் நீதிமன்றத்தினுடைய உத்தரவை அவர்கள் நிறைவேற்றும்பொழுது அதிலே அரசு குறுக்கிட இயலாது என்பதை அவர்கள் அறிவார்கள் என்பதை நான் நம்புகிறேன். பொதுவாக 36 அதிகாரிகள் என்று சொல்லும் பொழுது ஒரு 'த்ரில்' அடேயப்பா, அவ்வளவு அதிகாரிகளா என்று எண்ணத்தோன்றும். ஆனாலும் அதிகாரிகளாக இருந்தாலும், கடந்த காலத்திலே ஆட்சி புரிந்த அமைச்சர்களாக இருந்தாலும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது இந்த மாமன்றத்திலே உள்ள ஆளும் கட்சி, எதிர்க்கட்சி மற்றும் தோழமைக் கட்சியினுடைய ஏகோபித்த

எண்ணம். அதிலே மாறுபாடான கருத்து எனக்கும் இல்லை; நம்முடைய எதிர்க்கட்சித் தலைவருக்கும் இல்லை என்பதை நான் நன்றாக அறிவேன்; நாடும் நன்றாக உணர்ந்திருக்கிறது.

சுப்பராயன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல எல்லா அதிகாரிகளுமே தவறானவர்கள் அல்ல. அவரும் அப்படிக் குறிப்பிடவில்லை. ஆனால் இந்த வணிகவரித் துறையிலே இதுபோன்ற தவறுகள் நடப்பதற்கு ஏராளமான இடம் இருக்கிறது என்பதை அவர்கள் இங்கே எடுத்துக் காட்டினார்கள். அதிகாரிகள் ஊழல் புரிகின்ற அதிகாரிகள், தவறு செய்கின்ற அதிகாரிகள், லஞ்சம் வாங்குகின்ற அதிகாரிகள், அப்படித்தான் செய்வோம் என்று ஓர் உறுதி எடுத்துக் கொண்டு நடப்பார்களேயானால், அவர்களைத் திருத்துவது என்பது இயலாத காரியம். வானத்தைக் கூட வில்லாக வளைத்து விடலாம். ஆனால் அப்படிப்பட்ட குணம் படைத்தவர்களை, ஊழலில் திளைப்பவர்களை, லஞ்ச லாவண்யத்திலே பிழைக்க வேண்டும். குறுக்கு வழியிலே வாழ வேண்டும் என்று எண்ணுகிறவர்களை நாம் திருத்த முடியாது.

## அலைகளை எண்ணச் சொல்லும்போது தன் 'திறமையை'க் காட்டிய அதிகாரி

உதாரணமாக ஒரு கதை கூட உண்டு. அதிகாரிகளைப் பற்றி ஏற்கெனவே ரிஜிஸ்ட்ரார் ஆக இருந்த வி.கே.சி. நடராஜன் அந்தக் கதையை சொல்லியிருக்கின்றார். அதை நான் ஒருமுறை பத்திரிகையிலே கூட குறிப்பிட்டு எழுதியிருக்கின்றேன். கடல் அலை ஆபீசர் என்று வைத்துக் கொள்ளலாம். ஒரு ஆபீசர் தொடர்ந்து கையூட்டுப் பெற்றுக்கொண்டே இருந்தார். இவரைத் திருத்துவது எப்படி ? இவர் கையூட்டுப் பெறாமல் நிறுத்துவது எப்படி

என்று யோசித்து, சில நாணயமான அதிகாரிகள் எல்லாம் கூடிப் பேசி, இவருக்கு ஒரு வேலை கொடுக்கலாம் என்று கடற்கரையிலே போய் உட்காரச் சொன்னார்கள்.

என்ன வேலை என்று கேட்டால், கடலிலே வருகின்ற அலைகளை எண்ணிக்கொண்டிரு என்று சொன்னார்கள். சொல்லி விட்டு, இவர்களுக்குள்ளே ஒரு பூரிப்பு இவனை அடக்கிவிட்டோம்; கடற்கரையிலேயே இவனை உட்கார வைத்துவிட்டோம். இவன் கடல் அலையை எண்ணிக் கொண்டிருப்பானே தவிர, இனிமேல் வாங்குகின்ற லஞ்சப் பணத்தை எண்ணுவதற்கு இவனுக்கு வாய்ப்பு இருக்காது என்று எண்ணிக்கொண்டு இருந்தார்கள். அதிகாரி ஒரு நாள் அப்படியே உட்கார்ந்து கொண்டிருந்தார். அலைகளை எண்ணிக்கொண்டு. மறுநாள் சிலபேர் மீன்பிடிப்பதற்காகக் கடலுக்குச் சென்றார்கள். கட்டு மரம் கட்டிக்கொண்டு அல்லது தோணி எடுத்துக் கொண்டு கடலுக்குச் சென்றார்கள். இவருக்கு ஒரு யோசனை தோன்றியது. அவர்களை அழைத்து, எங்கே போகிறீர்கள் என்றார்? அவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்கிறோம் என்றார்கள். நான் அலைகளை எண்ணிக் கொண்டு இருக்கிறேன். மீன் பிடிக்க, கட்டுமரத்தை உள்ளே விட்டால் அது டிஸ்டர்ப் ஆகும். அலைகள் வீணாகும் என்றார். அதற்கு அவர்கள் என்ன செய்யலாம் என்றார்கள். அதற்கு இவ்வளவு ரூபாய் கொடு, கொடுத்தால் விடுகிறேன் என்று சொன்னார். இப்படி அலைகளை எண்ணச் சொன்னால் கூட அங்கேயும் விடாமல் இந்தக் கடல் அலை ஆபீசர் தன்னுடைய திறமையைக் காட்டினார் என்று ஒரு அதிகாரியைப் பற்றி அதிகார வர்க்கத்திலே சிலபேர் திருத்த

முடியாதவர்களாகவே இருப்பார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாகத்தான் இந்தக் கதை சொல்லப்பட்டது.

உங்களுக்குத் தெரியும் நடராஜன் என்பவர் சொன்ன கதையது. ஒரு மூத்த அதிகாரி; கன்னியாகுமரி கடலிலே குளிக்கும்போது விபத்தின் காரணமாக இறந்து விட்ட ஒரு மூத்த அதிகாரி, நேர்மையான ஒரு அதிகாரி அவர் சொன்ன கதைதான் இது. எனவே, அதிகாரிகள், தவறு செய்கின்ற அதிகாரிகள், அதைப்போல அந்த அதிகாரிகளோடு சேர்ந்து கொண்டு அரசாங்கத்தை ஏமாற்றுகின்ற சிலர் இவர்களுக்கிடையிலேதான் நாம் ஆட்சியை நடத்த வேண்டியிருக்கிறது. முடிந்த வரையில் நடவடிக்கைகள் எடுக்கிறோம். நடவடிக்கை எடுத்துக்கொண்டு, அதே நேரத்தில் நல்லாட்சி நடத்த வேண்டும் என்பதற்காகவும், நாம் நம்முடைய அரிய பணியினை ஆற்றிக் கொண்டிருக்கிறோம். விற்பனை வரியைப் பொறுத்த வரையில், இந்த அரசு இந்த மூன்று நிதிநிலை அறிக்கைகளில் என்னென்ன கோரிக்கைகளை யெல்லாம் ஏற்று, விட்டுக்கொடுத்து வரிக் குறைப்பு, வரி விலக்கு இவைகளை யெல்லாம் செய்திருக்கிறது என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள். இருந்தாலும் கூட நினைவூட்டுவது என்னுடைய கடமையாகும்.

அதிலே குறிப்பாக, இங்கே நம்முடைய சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள். **17.7.96** ஆம் நாள் வெளியிடப்பட்ட அரசு அறிக்கையில், பருப்பு, பயிறு, மிளகாய் போன்ற பொருட்களுக்கு **17.7.96** முதல் விற்பனைத் தொகை ரூ.**100** கோடி வரை உள்ள வணிகர்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. வெளி மாநிலங்களுடைய விற்பனையைப் பொறுத்த வரை **5.8.96** முதல்

16.10.96 வரையிலான இடைப்பட்ட காலத்திற்கு வரி விலக்கு இல்லை என்றாலும், அந்த இடைப்பட்ட காலத்திற்கு உள் மாநிலம் மற்றும் வெளி மாநில விற்பனைகளுக்கு வரிவிலக்கு அளிக்க வேண்டுமென்றும் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.சொக்கர் அவர்களும் கேட்டுக் கொண்டார். அவரது கோரிக்கை பரிசீலிக்கப்பட்டது.

17.7.96 முதல் பருப்பு, பயிறு, மிளகாய் போன்ற பொருட்களுக்கு முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. பின்னர் அந்த வரிவிலக்கு உள் மாநில விற்பனைக்கு மாத்திரம் அல்லாமல் வெளி மாநில விற்பனைக்கும் பொருந்துமா என்ற ஐயப்பாட்டை நீக்கும் வகையில் மேற்கூறப்பட்ட வரிவிலக்கு "உள் மாநில விற்பனைக்கு" மட்டுமே என்று 5.8.96 ஆம் நாளிட்ட அரசு அறிக்கை வாயிலாக அறிவித்தது. அதன் பின்னர் வெளி மாநில விற்பனைக்கு "சி" படிவம் கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும் 4 விழுக்காடு வரியே விதிக்கப்படும் என்கின்ற அறிவிக்கை 13.9.96 நாளிட்ட அரசு ஆணையிலே வெளியிடப்பட்டு 16.10.96 ஆம்நாளிட்ட அரசிதழில் பிரசுரம் ஆகியுள்ளது. வெளி மாநில விற்பனைக்கு வரிவிலக்கு இல்லை என்பதை 5.8.96 ஆம் நாள் அறிவிக்கையில் தெளிவாக அறிவிக்கப்பட்டு விட்டதால் 5.8.96 முதல் வெளி மாநில விற்பனைக்கு வரி செலுத்த வேண்டும். எனினும் 17.7.96 முதல் 4.8.96 முடிய உள்ள இடைப்பட்ட காலத்திற்கு வரிவிதிக்கப்பட மாட்டாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல நம்முடைய சுப்பராயன் அவர்கள் தமிழ்நாடு ஹோட்டல்ஸ் அசோசியேஷன், சென்னை, இதன் சார்பாக அல்லது சார்பாக அல்ல அவரிடத்திலே சொல்லப்பட்ட சில கருத்துக்களின்

அடிப்படையில் அவர் சில செய்திகளை அரசுக்குச்சொல்லி அதை யோசிக்குமாறு கேட்டிருக்கிறார். அது பரிசீலிக்கப்பட்டது. அவர் சொன்னது உணவகங்களுக்கு விற்பனை வரியிலிருந்து முழு வரி விலக்கு அளிக்குமாறும் முழு வரி விலக்கு அளித்தால் அரசு நிதிநிலை பாதிக்கப்படும் எனக் கருதினால் - (எப்படி பாதிக்கப்படாமல் இருக்க முடியும்? இப்போது ரூ.15 கோடி வருகிறது; பாதிக்கப்படும் என்று கருதினால் என்பதற்கே இடம் இல்லை; பாதிக்கப்படும்) விற்பனைத் தொகை ரூ.25 லட்சத்திற்கும் குறைவாக உள்ள உணவகங்களுக்கு விரி விதித்து - (இது ரொம்ப ஆபத்து; 25 இலட்சத்திற்கும் குறைவாக உள்ள உணவகங்களுக்கு வரி விதிக்கச் சொல்லி, அவர்கள் சொல்கிறார்கள். அதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? நாம் 25 இலட்சத்திற்கு மேல்தான்என்று குறிப்பிட்டிருக்கிறோம்) - தற்போதுள்ள படிமுறை - ஸ்லாப்சிஸ்டம் - வீதத்தை வெகுவாக குறைக்குமாறும் கோரிக்கை விடுத்தார்கள். இது பற்றி பரிசீலித்ததில் நான் இந்த அவைக்கு ஒன்றை கூற விரும்புகிறேன்.

## தங்கராஜ் தலைமையிலான வரி சீரமைப்புக்குழு பரிந்துரை

சி.தங்கராஜ் ஐ.ஏ.எஸ் (ஓய்வு) அவர்களுடைய தலைமையிலான வரி சீரமைப்புக் குழு உணவகங்களில் விற்கப்படும் உணவு மற்றும் பானங்களுக்கு பின்வரும் படிமுறை - ஸ்லாப் சிஸ்டம் - சதவிகிதத்தைப் பரிந்துரைத்தது. அவர்கள் பரிந்துரைத்த வரி விகிதத்திலிருந்து நாம் எவ்வளவு குறைவாக ஆக்கியிருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டத்தான் நான் சொல்கிறேன். தங்கராஜ்

தலைமையிலே இருந்த சீரமைப்புக் குழு பரிந்துரை ஆண்டு ஒன்றிற்கு 3 இலட்சம் முதல் 5 இலட்சம்வரை டர்ன் ஓவர் இருந்தால், விற்பனைத் தொகை இருந்தால், வரித்தொகை வரி விகிதம் 6,000 ரூபாய். 5 இலட்சம் முதல் 10 இலட்சம் வரை என்றால் 12,000 ரூபாய். 10 இலட்சம் முதல் 20 இலட்சம் வரை என்றால் 24,000 ரூபாய். 20 இலட்சம் முதல் 30 இலட்சம் வரை என்றால் 48,000 ரூபாய். 30 இலட்சம் முதல் 40 இலட்சம் வரை என்றால் 60,000 ரூபாய். 40 இலட்சம் முதல் 50 இலட்சம் வரை என்றால் 84,000 ரூபாய். 50 இலட்சத்திற்கு மேல் 2 விழுக்காடு.

ஆனால் இதை அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. ஏற்றுக் கொண்டிருந்தால் இந்த ஹோட்டல் அதிபர்கள்எல்லாம் என்ன ஆகியிருப்பார்கள் என்பதை எண்ணிப் பார்க்கவே முடியாது. இருந்தாலும் நாங்களாகவே இவ்வளவு வரி அவர்களுக்குத் தேவையில்லை என்ற முடிவுக்கு வந்து பரிசீலித்து விற்பனைத் தொகை ரூ.25 இலட்சத்திற்கு உட்பட்டிருந்தால் வரியே இல்லை என்று நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருக்கிறோம். 25 இலட்சத்திற்கு மேல் 30 இலட்சம் வரை ஆண்டுக்கு 24,000 அவர்கள் சொன்னது 48,000. அதற்குப் பதிலாக விதித்திருப்பது 24,000. பரிந்துரை 48,000. 30 லிருந்து 40 இலட்சம் வரை 36,000 என்று ஆக்கியிருக்கிறோம். 40 இலட்சத்திலிருந்து 50 இலட்சம் வரை 48,000. 50 இலட்சத்திற்கு மிகும் விற்பனைத் தொகைக்கு 2 விழுக்காடு என்று விற்பனை வரியை நாம் நிர்ணயம் செய்திருக்கிறோம்.

அதுமாத்திரமல்ல, சென்ற ஆண்டுதான் உணவகங் களுக்கான வரி விகிதங்களை விற்பனை வரி சீரமைப்புக் குழுவின்

பரிந்துரையை விட மிகவும் குறைவான ஸ்லாப் - படி முறை வீதத்தை அரசு நடைமுறைப் படுத்தியிருக்கிற காரணத்தால் 25 இலட்சத்திற்கும் குறைவாக உள்ள உணவகங்களுக்கு முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளதால், உணவகங்களுக்கு மறுபடியும் வரி சீரமைப்பு செய்வதற்கு இயலாத ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் மூலமாக அந்த அசோசியேஷனுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இதைச் சொன்னதால் அந்த அசோசியஷனுக்கும் அவருக்கும் ஏதோ தொடர்பு இருப்பதாக யாரும் கருதத் தேவையில்லை. அவர்கள் கொடுத்த கோரிக்கையை அவர் பிரதிபலித்திருக்கிறார் அவ்வளவுதான்.

## உணவகங்களில் தற்போதுள்ள விதிகளைத் தொடர வேண்டிய நிலை

அவர் இன்னொன்று சொன்னார். உணவகங்களிலே தற்போது உள்ள இந்த படிமுறை - ஸ்லாப்விதியை நாம் தெடார வேண்டியவர்களாக இருக்கிறோம். அவர் கூறிய குறைகளை நீக்க வேண்டுமேயானால் உணவகங்களில் சார்ட்டர்டு அக்கவுண்ட் மூலம் கணக்கை தணிக்கை செய்து அதன் அடிப்படையில் வரிக் கணக்குகளை ஏற்றுக் கொள்ளலாம். இதில் 20% கணக்குகள் மாத்திரமே கணினி முறையிலே தேர்வு செய்யப்பட்டு ஆய்வு செய்யலாம். இந்தக் கருத்தை நான் பரிசீலித்து சுப்பராயன் அவர்கள் சொன்ன அந்தக் குறைபாடு நீங்குவதற்கு இயலுமா என்பதை அதிகாரிகளோடு கலந்து பேசி பிறகு அறிவிப்பேன் என்ற உறுதியை இங்கே அளிக்கிறேன்.

1996 - 97 ஆம் ஆண்டு வழங்கிய வணிக வரி சலுகையினால் நம்முடைய முதல் நிதிநிலை அறிக்கை - நான்காவது முறையாக இந்த அரசு பொறுப்பு ஏற்ற பிறகு - முதல் நிதி நிலை அறிக்கையில் வழங்கிய வணிக வரி சலுகையினால் இந்த அரசுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பு ரூ.370 கோடி என்பதை மறந்துவிடக் கூடாது. ஆனால் 370 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டாலும் கூட குரோத் ரேட் ஓரளவு இருந்த காரணத்தால் ஒரு பெரிய வீழ்ச்சி இந்த விற்பனை வரி வருவாயிலே நமக்கு ஏற்பட்டு விடவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

1997 - 98 ஆம் ஆண்டு வழங்கிய வணிக வரிச் சலுகையினால் அரசுக்கு 44 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டது. அதே ஆண்டில் உணவு விடுதிகளுக்கு அரசு விதித்த வணிக வரி மற்றும் பான் மசாலா, பரிசுச் சீட்டுகளுக்கு விதித்த வரி உயர்வினால் 17 கோடி ரூபாய் அரசுக்கு வருவாய் கிட்டியது.

## வணிக வரிச் சலுகையால் அரசுக்கு ரூ.40 கோடி இழப்பு

1998 - 99 நடப்பாண்டில் வழங்கிய வணிக வரிச் சலுகையினால் இந்த அரசுக்கு 40 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படும். அதேசமயம் இந்தியாவில் தயாரிக்கப்படும் ஐ.எம்.எப்.எல் வெளிநாட்டு மது வகைகளுக்கு அரசு விதித்துள்ள வணிக வரி உயர்வினாலும் கூடுதல் விற்பனை வரியில்செய்த மாற்றங்களினாலும் 310 கோடி ரூபாய் அரசுக்கு வரி வருவாய் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதிலே, இந்தக் கூடுதல் விற்பனை வரியிலே செய்த மாற்றம் என்ன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள் என்று கருதுகிறேன். கூடுதல்

விற்பனை வரி 100 கோடிக்கு மேல் என்று இருந்ததை 25 கோடிக்கு மேல் என்று மாற்றிய காரணத்தால் நமக்கு, அதிலே, அந்த வரியிலே அதிக வருவாய் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1998 - 99 ஆம் ஆண்டு வரவு - செலவு திட்டத்தில் வருவாய்க் கணக்கிலே செலவு 18 ஆயிரத்து 48 கோடி ரூபாய். வரவு 15 ஆயிரத்து 39 கோடி ரூபாய். இதிலே வணிக வரியின் மூலமாக 7 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் வருவாய் எதிர்பார்க்கப்படுகிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கடந்த ஆண்டை நினைத்துக் கொண்டு, 6 ஆயிரம்கோடி ரூபாய், 6 ஆயிரத்து சொச்சம் கோடி ரூபாய் என்று எல்லாம் இங்கே உரையாற்றியிருக்கிறார்கள். எதிர்பார்க்கப்படுவது வணிக வரியின் மூலம் 7 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## வரிவிதிப்பு முறைகளில் சீரமைப்பு

சென்ற 2 ஆண்டுகளிலே வரி விதிப்பு முறைகளிலே பல சீரமைப்பு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டது. நாணயமாக வரி செலுத்துபவர்களுக்கு நடைமுறைகளை எளிதாக்கி வரி விதிப்பு அமைப்பின் கடுமையைக் குறைத்து உள்ளது. இதன்ஒரு தொடர் நடவடிக்கையாக ரூபாய் 10 இலட்சத்திற்கு மேற்பட்டும் ரூபாய் 20 இலட்சத்திற்கு உட்பட்டும் மொத்த விற்பனை தொகை உடைய வியாபாரிகள் பதிவுபெற்ற பட்டயக் கணக்கர்கள் - 'சாட்டர்டு அக்கவுண்டெண்டு' தணிக்கை செய்ததன் அடிப்படையில் கணக்குகள் ஏற்றுக்கொள்ளப்படும். இதில் 10

விழுக்காடு கணக்குகள் மட்டும் துறையினரால் ஆய்வு செய்யப்படும். இதற்கான சட்ட முன்வடிவு இந்தக்கூட்டத் தொடரிலேயே அறிமுகம் செய்யப்படும். வணிகராகப் பதிவு செய்யத் தற்போதுள்ள மொத்த விற்பனைத் தொகைக்கான வரம்பு 75 ஆயிரம் ரூபாயிலிருந்து ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படுகிறது. இதற்கான சட்ட முன்வடிவு இந்தக் கூட்டத் தொடரிலேயே அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது.

ஒரு வணிகருடைய மொத்த வியாபாரத் தொகை ரூபாய் 10 இலட்சத்திற்கு மேற்படாமல் இருந்தால் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு, நிபந்தனைகள் என்றால், ஆவணங்களைப் பாதுகாத்தல், ரெக்கார்டுகளை வைத்துக்கொள்ளுதல் என்ற அந்த நிபந்தனை களுக்கு உட்பட்டு அவர்களுடைய கணக்குகளை தணிக்கைக்கு உட்படுத்தாமலேயே இறுதி வரி விதிப்பு செய்திட ஆணையிடப் பட்டுள்ளது. அந்த வணிகர்கள் விரிவான கணக்கு வழக்குகளைப் பராமரிக்க வேண்டிய அவசியம் இல்லை. அடிப்படைக் கணக்கு ஆவணங்களைப் பராமரித்தலே போதும் என்றும் நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது.

## விற்பனை வரிச்சட்டம் தமிழில்

விற்பனை வரிச் சட்டத்தை தமிழில் வெளியிடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. கடந்த ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தின்போது தமிழ்நாடு விற்பனை வரி சட்டத்திலிருந்து அட்டவணைகளை முதலில் வெளியிடவும், பின்னர் விற்பனை வரி சட்டத்தை முழுமையாகத் தமிழில் வெளியிடவும் முடிவு செய்யப்பட்டது. அதன் முதல் கட்டமாக 1997 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில்

உள்ள அட்டவணைகள் தமிழில் வெளியிடப்பட்டன. தற்போது விற்பனை வரிச்சட்டம் சட்டத்துறையின் மூலமாக தமிழ் ஆக்கம் செய்யப்பட்டு தயார் நிலையில் உள்ளது. ஆனாலும் கூட அந்த தமிழ் ஆக்கத்திலே பயன்படுத்தப்பட உள்ள சில தமிழ்ச் சொற்கள் வணிகர்களிடமும், வணிக வரித்துறையில் உள்ள அலுவலர்களிடமும் புழக்கத்தில் இல்லாத சொற்களாக இருக்கின்றன. உதாரணமாக மொழி பெயர்ப்பில் burden of proof என்பதற்கு சட்டத்துறை "நிரூபிக்கும் சுமை" என்று மொழியாக்கம் செய்திருக்கிறது. சட்டத்துறை - தமிழ்த்துறை அல்ல - சட்டத்துறை. ஆனால், அதனை "நிரூபிக்கும் பொறுப்பு" என்று எல்லோருக்கும் தெரிந்த தமிழிலே மொழி பெயர்ப்பு இப்பொழுது செய்யப்பட்டிருக்கிறது.

## SELF-ASSESSMENT

என்பதை, சட்டத்துறை, "தன் வரிக் கணிப்பு" என்று மொழி பெயர்த்து இருக்கிறது. அதை, எல்லோருக்கும் புரியக்கூடிய அளவிற்கு "சுய வரி விதிப்பு" என்ற தமிழில் எளிமைப்படுத்தப் பட்டிருக்கிறது. "சுய" என்பது சரியான தமிழ் மொழி அல்ல என்றாலும், வடமொழி என்றாலும் கூட, சுய மரியாதையைத் தன்மானம் என்று நாம் மாற்றிக் கொண்டாலும் கூட, இங்கே சுயமரியாதை என்றாலே தமிழிலே புழக்கப்பட்டுவிட்ட வார்த்தை என்ற காரணத்தால் "சுய வரி விதிப்பு" என்று தமிழில் எளிமைப்படுத்தப்பட்டுள்ளது.

## SUBJECT TO CONDITION

என்பதைச் சட்டத் துறை, "வரையறைக்குட்பட்டு" என்று மொழியாக்கம் செய்திருக்கிறது. அது சரியான மொழி பெயர்ப்பாக

ஆக முடியாது. எனவேதான், "நிபந்தனைக்கு உட்பட்டு" என்று மொழி பெயர்த்து இருக்கின்றோம். எனவே, இந்தத் திருத்தங்கள் எல்லாம் ஆன பிறகு அது வெளியிடப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## காலியிடங்களை உடனே நிரப்பிட ஆணை

விற்பனை வரிச் சட்ட வழக்குகளை விரைவுபடுத்த வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் இங்கே பேசும்பொழுது குறிப்பிட்டார்கள். சென்னை, கோவை, மதுரை ஆகிய இடங்களில் மேல் முறையீடு தீர்ப்பாயங்களில் நீதித்துறை உறுப்பினர்கள், கூடுதல் நீதித் துறை உறுப்பினர்கள் ஆகியோரின் பதவிகள் நிரப்பப்படாமல் இருந்தமையால் பல வழக்குகள் விசாரிக்கப் படாமலே தேங்கிக் கிடந்தன. இதன் காரணமாக வணிகர்களுக்குப் பல இடையூறுகளும், அரசுக்கு வருவாய் தேக்கமும் ஏற்பட்டு வந்தன. இவற்றைக் களையும்பொருட்டு, காலியிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, தற்பொழுது ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது தீர்ப்பாயத்தின்துணைத் தலைவர் மற்றும் நிர்வாக உறுப்பினர் பதவிகள் நிரப்பப்பட்டு, இந்த வழக்குகளை விரைவிலே முடித்திட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இங்கே வெட்டுத் தீர்மானங்கள் தந்துள்ள உறுப்பினர்கள், அவர்கள் இங்கே பேசுகின்ற வாய்ப்பைப் பெறாவிட்டாலும் அல்லது அவர்கள் பேசாவிட்டாலும்கூட, அவைகளைக் குறிப்பிடுவது என்னுடைய கடமை என்று கருதுகின்றேன்.

## வேளாண் இடுபொருட்களுக்கு வரி குறைப்பு

பா.ம.க. - 1 கட்சி உறுப்பினர்கள் ஐ.கணேசன், ஜி.கே.மணி ஆகியோர் வேளாண் இடு பொருள்கள் மீது விற்பனை வரி விதிப்பதைத் தவிர்க்க வேண்டுமென்று வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். வேளாண் இடுபொருட்களான யூரியா மற்றும் அமோனியம் பாஸ்பேட் உரத்திற்கு 5.3.97 முதல் 4 சதவீதத்தி லேயிருந்து 2 சதவீதமாக வரி குறைக்கப் பட்டிருக்கிறது. ஏற்கெனவே, - 97லேயே குறைச்சாச்சு. அதற்குத்தான் வெட்டுத்தீர்மானம் கொடுத்து இருக்கிறீர்கள். குறைத்தது தப்பு என்று.

மேலும், உறுப்பினர்களுடைய கருத்து ஏற்கப்பட்டு வேளாண்மைக் கான ஃபேக்டீரியா வளர்ப்பு, தழைச்சத்து, எரு மற்றும் பச்சை எரு விதைகள் போன்றவைகளுக்கு முழு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## வேளாண்மை விளைபொருட்களுக்கு வரி ரத்து

வேளாண்மை விளை பொருட்களின் மீது விதிக்கப்படும் வரியை ரத்து செய்ய வேண்டுமென்று பா.ம.க உறுப்பினர் கோவிந்தன் வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார். பொது மக்களால் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தப்படும் பின்வரும் வேளாண் விளைபொருட்கள் விற்பனைக்கு 17.7.96 முதல் விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அவை, கடலை, துவரை, பாசிப் பயிறு அல்லது பச்சைப் பயிறு, மசூர் உளுந்து, மோத்து, கேசரி, மிளகாய், புளி, தனியா, மஞ்சள், பெருங்காயம், மிளகு மற்றும் சிகைக்காய், வெல்லம், கரும் சீரகம் உள்ளிட்ட வேளாண் விளைபொருட்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் மணி அவர்கள், கயிறு உற்பத்தி செய்யும் குடிசைத் தொழிலுக்கு, கயிற்றின் விற்பனை வரி முழுமையாக நீக்க வேண்டுமென்று வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். ஆனால் அப்பொழுதே, கயிற்றின் மீதான விற்பனை வரி 17.7.96 முதல் விலக்கப்பட்டுள்ளது என்பதை அவருக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

## தேங்காய்க் கொப்பரைக்கு ஒரு சதவிகிதமாக வரி குறைப்பு

தேங்காய் கொப்பரைக்கு முழுமையான வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று எஸ்.என்.பாலசுப்பிரமணியன், டி.மணி, பி.ஆர். சுந்தரம் ஆகியோர் வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையின் போது மாநிலத்திற்குள் விற்பனை செய்யப்படும் தேங்காய், கொப்பரை போன்றவற்றிற்கு வரி 4 சதவீதத்திலேயிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. இதுவும் போதாது என்று இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தேங்காய் மற்றும் கொப்பரை மீதான வரியை, தேங்காய் கொப்பரைக்கு விதிக்கப்படும் வரி 2 சதவீதத்திலேயிருந்து ஒரு சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

நிதிநிலை அறிக்கை மீது நடந்த விவாதத்திற்கு இந்தச் சட்டமன்றத்திலே பதில் கொடுத்தபோது, வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படும் தேங்காய் மற்றும் கொப்பரைக்கும் 1 சதவீதம் வரி அறிவிக்கப்பட்டது. எனவே, முழு வரிவிலக்கு அளிக்க இப்போது இயலாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இதை ஏற்று வியாபாரிகள் மற்றும் வியாபாரிகளின் சங்கத்தினர் என்னைச் சந்தித்து மகிழ்ச்சி தெரிவித்து நன்றி கூறியிருக்கின்றார்கள்.

எனவே, அவர்களே முழு வரிவிலக்கு கோரவில்லை என்பதையும், திரு.சுந்தரம் போன்றவர்கள்தான் முழு வரிவிலக்கு கோருகிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுவெல்லாம் ஒரு பார்லிமெண்டேரியனுக்கு அழகு, ஒன்றைச் சொன்னால் அதைவிட இன்னொன்று கேட்க வேண்டும்; அதுதான் நல்ல, சரியான பாரிலிமெண்டேரியன் என்று பொருள். சர்.ஏ.டி.பன்னீர் செல்வத்தைப் பற்றி டாக்டர் கிருஷ்ணசாமி - இந்த கிருஷ்ணசாமி அல்ல - ஏ.ஆர். முதலியாருடைய குடும்பத்தைச் சேர்ந்த டாக்டர் கிருஷ்ணசாமி பார்லிமெண்டேரியன் என்ற ஒரு புத்தகம் எழுதினார். அதிலே அவர் குறிப்பிடுகிறார். ஏ.டி.பன்னீர் செல்வத்தைப் பார்த்து கேட்டார்களாம். 'நீங்கள் நல்ல பார்லிமெண்டேரியன் என்று சொல்கிறார்களே, திடீரென்று ஒரு நாள் ஆளும் கட்சியிலேயிருந்து ஏழைகளுக்கு எல்லாம் இலவசமாக வீடு கட்டித்தரப்படும் என்று சொன்னால் என்ன செய்வீர்கள்' என்று கேட்டார்களாம். அவர் உடனே சொன்னாராம், "அது மாத்திரம் போதாது, வீட்டுக்கு 200 ரூபாய் கொடுக்க வேண்டும் என்றும் சொல்வேன்" என்று பன்னீர்செல்வம் சொன்னாராம். இதுதான் நல்ல பார்லிமெண் டேரியனுக்கு அழகு என்பார்கள். அதைப் போலவே நம்முடைய சுந்தரம் அவர்கள் இங்கே இவ்வளவு வரிவிலக்கு கொடுத்த பிறகும்கூட, நான்கை இரண்டாக்கி, இரண்டை ஒன்றாக ஆக்கிய பிறகும்கூட, அதையும் விலக்கி விடு என்று குறிப்பிடுகிறார்கள். அவர்களே மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள். சுந்தரம் கவலைப்படத் தேவையில்லை என்று நான் அவருக்குக் குறிப்பிட விரும்புகின்றேன்.

மசாலாப் பொடிக்கு வரிவிலக்கு அளிக்க வேண்டிய அவசியம் குறித்து திரு.ஞானசேகரன், திரு.எஸ்.என். பாலசுப்பிரமணியன்,

திரு.நா.பெரியசாமி, திரு.சுந்தரம், திரு.நிஜாமுதீன் ஆகியோர் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். வணிகச்சின்னம் அல்லாத மசாலாப் பொடிகள் மீதான விற்பனை வரி 16 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகவும், 16 - லிருந்து 2 - ஆக.

திரு.ஆர்.சொக்கர் :- வணிகச் சின்னம் இல்லாத மசாலாப் பொடிகளுக்குப் ஏற்கெனவே 8 சதவிகிதம்தான். வணிகச் சின்னம் உள்ள மசாலாப் பொடிக்கு 16 சதவிகிதம்தான். ஆனால் இப்போது கொள்கை விளக்கக் குறிப்பிலேயும் அதைப் பார்த்தேன். 16-லேயிலிருந்து 2 என்று போடப்பட்டிருக்கிறது.

முதல்வர் :- என்னிடமுள்ள குறிப்பின்படி வணிகச் சின்னம் அல்லாத மசாலாப் பொடிகள் மீதான விற்பனை வரி, அது பதினாறா, பத்தா, அதுவல்ல. அது 2 சதவீதமாக குறைக்கப்பட்டிருக்கிறது. வணிகச் சின்னம் உள்ள மசாலாப் பொடியைப் பொறுத்தவரையில் அதன் மீதுள்ள விற்பனை வரி 4 சதவீதமாகவும் 27.3.1998 முதல் வரி குறைப்பு அதற்குச் செய்யப்பட்டிருக்கிறது. 4 சதவீதமாக அது குறைக்கப்பட்டிருக்கிறது. சின்னம் அல்லாதவைகளுக்கு 2 சதவிதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

வனஸ்பதி சமையல் எண்ணெய்க்கு முழு வரிவிலக்கு அளிக்க திரு.ஞானசேகரன் அவர்கள் வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். அவர் ரொம்ப நாளாகவே வனஸ்பதியைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறார். நான் அன்றைக்கே சொல்கிறபோது அதில் கொழுப்பு சக்தி ரொம்ப அதிகம் என்றும். அது வேண்டாம் என்றும் ஏற்கெனவே ஞானசேகரனுக்குச் சொன்னேன். கொழுப்புச்சக்தி இல்லையென்று சொன்னாலும்,

உருவாக்கிக் கொள்ள வேண்டாம் என்பதற்காக அது வேண்டாம் என்கிறேன்.

## சமையல் எண்ணெய்களுக்கு முழுவரி விலக்கு

சமையலுக்குப் பயன்படும் கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், சூரியகாந்தி எண்ணெய், பாமாயில் எண்ணெய், பருத்திவிதை எண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட அரிசி தவிட்டு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எல்லா சமையல் எண்ணெய்களுக்கும் **27.3.98** முதல் முழு வரிவிலக்கு அளிக்கப் பட்டுள்ளது. எனவே, வனஸ்பதிக்கு வரிவிலக்கு அளிப்பதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.கோவிந்தன் அவர்கள் தமிழகத்து மாணவர்களுக்குத் தேவையான நோட்டு புத்தகங்களுக்கு விற்பனை வரியிலேயிருந்து விலக்கு அளிக்க வேண்டி வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். தமிழகத்தில் வரி செலுத்தப்பட்ட காகிதத்தில் தயாரிக்கப்படும், மாணவர்களுக்குத் தேவையான நோட்டு புத்தகங்களுக்கு **5.3.1997** முதல் முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இந்தச் சலுகை உள் மாநிலத்தில் வரி செலுத்தப்பட்ட காகிதத்தில் தயாரிக்கப்பட்டு வெளி மாநிலத்திலே விற்கப்படும் மாணவர்களுக்கான நோட்டுப் புத்தகங்களுக்கும் **27.3.1998** முதல் நீட்டிக்கப்படுகிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழகத்தில் லாட்டரிசீட்டு விற்பனையிலே வரி ஏய்ப்பைத் தடுக்க வேண்டிய அவசியம் குறித்து திரு.ஐ.கணேசன், திரு.ஜி.கே.மணி, திரு.அப்துல் நாசர் ஆகியோர் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

## கவர்ச்சிக்கரமாக பரிசுச்சீட்டை உருவாக்கத் திட்டம்

தமிழகத்தில் லாட்டரி சீட்டு வணிகர்கள் செய்யும் வரி ஏய்ப்பைத் தடுக்கும்பொருட்டு, வணிகவரித் துறையில் உள்ள செயலாக்கப் பிரிவு அலுவலர்கள் அவ்வப்போது திடீர் சோதனை நடத்தி வரி ஏய்ப்பு தடுக்கப்படுகிறது. அதே நேரத்தில், வரி ஏய்ப்பு நடவடிக்கைக்களைக் குறைக்கும் பொருட்டு, லாட்டரிச்சீட்டு வணிகர்கள் இணக்க முறையில், படித்தள வீதத்தில் வரி செலுத்த சட்டத்திலும் வழி வகைகள் செய்யப்பட்டுள்ளன. 1997 - 98 ஆம் ஆண்டில் 11 கோடியே 26 இலட்சம் ரூபாய் இந்தப்பரிசுச்சீட்டு மூலமாக வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இந்த வருவாயை மேலும் பெருக்குவதற்கு, இந்தப் பரிசுச்சீட்டை நவீன முறையில் அறிமுகப்படுத்த வேண்டுமென்றும், இன்னும் அதற்காக பரிசுகளை அதிகப்படுத்த வேண்டுமென்றும், கவர்ச்சிகரமான அளவுக்கு இந்த பரிசுச்சீட்டுத் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்றும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. 1996 - 97, 97 - 98, 98 - 99 ஆகிய இந்த மூன்று ஆண்டுகளுக்கான நிதிநிலை அறிக்கையிலும் ஏராளமான வரிச்சலுகைகள் செய்யப்பட்டு இருக்கின்றன. அவைகளை யெல்லாம் நான் மீண்டும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் நினைவுபடுத்திக் கொள்ள முடியும் என்று நான் நிச்சயமாக நம்புகின்றேன்.

தற்பொழுது வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளை மாத்திரம் இங்கே நான் சொல்ல விரும்புகின்றேன். வணிகச் சின்னம் பெறாத வெண்ணெய் மற்றும் நெய் வகைகளுக்கு 4 விழுக்காடு வரியும், வணிகச் சின்னம் பெற்ற அந்த பொருட்களுக்கு 10 விழுக்காடு வரியும் உள்ளது. சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஆர். சொக்கர்,

திரு.வி.கே.லட்சுமணன், திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசன், எதிர்க்கட்சித் தலைவர் திரு.சோ.பாலகிருஷ்ணன் ஆகியோர் பதப்படுத்தப்படாத வெண்ணெய்க்கு (Unpasteurised) முழு வரிவிலக்கு அளிக்க வேண்டுமென்றும், தற்போது பிஸ்கட்டுகளுக்கு உள்ளது போல, வணிகம் மற்றும் வணிகக் குறிகள் (Trade and merchandised marks act) சட்டத்தின் கீழ், பதிவுபெறாத வணிகச்சின்னம் உள்ள நெய்க்கு வரியை 4 சதவிகிதமாக குறைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளார்கள். சட்டமன்ற உறுப்பினர் திரு.நா.பெரியசாமி, திரு.பி.ஆர்.சுந்தரம், திரு.வி.கே.லட்சுமணன் ஆகியோர் இதற்காக வெட்டுத் தீர்மானமே கொடுத்திருக்கிறார்கள். அவர்களது கோரிக்கையை ஏற்று வணிகம் மற்றும் வணிகக்குறிகள் சட்டத்தின் கீழ், பதிவு பெறாத வணிகச் சின்னம் உள்ள வெண்ணெய் மற்றும் நெய்க்கு வரி தற்போதுள்ள 10 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாக குறைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.பி.இராசன் விருதுநகர் மாவட்டம், சத்திரப்பட்டியில் மருத்துவத் துணிகளான Gauze and Bandage துணி வகைகள் விசைத்தறியில் உற்பத்தி செய்யப்படுகின்றன. விசைத்தறியில் உற்பத்தி செய்யப்படும் Gauze and Bandage துணிவகைகளுக்கு தற்பொழுது 8 விழுக்காடு வரி விதிக்கப்படுகிறது. Surgical Dressing Manufacturers Association இத்தொழிலை நம்பி சத்திரப்பட்டியில் 20 ஆயிரம் குடும்பங்கள் வாழ்கின்றன என்றும் Gauze and Bandage துணி வகைகளுக்கு முழு வரி விலக்கு அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளார்கள். எனவே இந்தக் கோரிக்கையை பரிசீலிக்க வேண்டுமென்று திரு.வி.பி.இராசன் கேட்டுக்

கொண்டுள்ளார். இதற்காக திரு.நா.பெரியசாமி வெட்டுத் தீர்மானமே கொடுத்துள்ளார்.

**பாண்டேஜ் துணிகளுக்கு முழு வரிவிலக்கு**

இக்கோரிக்கையைப் பரிசீலித்து, Gauze and Bandage துணிகளுக்கு ஒட்டுமொத்தமாக வரி விலக்கு அளித்தால், அரசுக்கு அதிக அளவில் வருவாய் இழப்பு ஏற்படும். ஏனென்றால், பெரிய வியாபாரிகள் அங்கே இருக்கிறார்கள் என்றாலும் சிறு உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில் விற்பனைத் தொகை ஆண்டு ஒன்றுக்கு 25 இலட்சத்திற்கு மிகாமல் உள்ள விசைத்றிதறி மூலம் Gauze and Bandage துணிகளை உற்பத்தி செய்யும் சிறு உற்பத்தியாளர்களுக்கு முழு வரிவிலக்கு அளித்து ஆணை பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிறகு வார்னிஷ், பற்றி கே.சுப்பராயன் கேட்டது

Sivakasi Picture Varnish Coaters' Association

அவர்களது விண்ணப்பத்தில் தாங்கள் செய்யும்

Picture Varnish Coating தொழில் குடிசைத் தொழில் என்றும்

Picture Varnish

தயாரிப்பதற்கு மூலப்பொருட்கள் யாவும் உள் மாநிலத்தில் வரி செலுத்தி வாங்கப் படுகின்றன என்றும், எனவே ஒப்பந்தப் பணிகள் என்ற வகையில் வரி விதிப்பு சரியில்லை என்றும் கூறி வரி விலக்கு கோரியிருக்கின்றார்கள். அவர்கள் கோரிக்கையை ஏற்று வரி விலக்கு அளிக்கப்படுகிறது.

இயந்திரங்களினால் செய்யப்படும் தீப்பெட்டிகளுக்கு 8 விழுக்காடு விற்பனை வரி உள்ளது. ஆனால் கையால் செய்யப்படும் தீப்பெட்டிகளுக்கு வரி விலக்கு உள்ளது. உற்பத்தியில் ஒரு சில பகுதிகளுக்கு இயந்திரங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் மெழுகுத் தீப்பெட்டிகள் கையினால் செய்யப்படும் தீப்பெட்டிகளுக்கு சமமாகாது என்றும், அவை வரிவிலக்கு பெற தகுதி வாய்ந்தது அல்ல என்றும் 1996 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் சிறப்பு ஆணையர் மற்றும் வணிக வரி ஆணையர் ஆணையிட்டுள்ளார். தற்போது தென்னிந்திய தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கம், இத்தகைய மெழுகுத் தீப்பெட்டிகளுக்கு முன்பு இருந்ததைப் போல தொடர்ந்து வரிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளனர். இவர்களது கோரிக்கையை இந்த அரசு பரிசீலித்து பகுதி இயந்திரத்தினாலும், பகுதி கையினாலும் செய்யப்படும் மெழுகு தீக்குச்சிகளுக்கு முழு வரி விலக்கு அளிக்க முடிவு எடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு.மணி குடிசைத் தொழிலாகச் செய்யும் ரொட்டி மற்றும் பண்டங்களுக்கும் விற்பனை வரியிலிருந்து முழு விலக்கு அளிக்க வேண்டும் என்று வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். 17.7.96 முதல் ரொட்டிக்கு குறைந்த வரியாக 4 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது. தற்போது 19.8.97ல் பேக்கரிகளில் தயாரிக்கப்படும் வணிகச் சின்னம் இல்லாத உணவுப் பொருட்கள் மீதான வரி 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. மேலும் சிறு தொழில்களுக்கு சலுகை அளிக்கும் வகையில் ரூபாய்5 இலட்சம் மொத்த விற்பனைத் தொகை உள்ள வணிகர்களுக்கு விற்பனை

வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறெல்லாம் எவ்வளவோ சிரமத்திற்கு இடையே சிலரது கோரிக்கைகளை ஏற்று, சிலரது கோரிக்கைகளை ஏற்க முடியாமல் அதே நேரத்தில் சுலபமாக வரிகளை வசூலிக்கக்கூடிய வகையில், ஏழைகளுக்கு எந்தவிதமான சிரமமும் இல்லாமலும், ஏழைகளுக்கு - நடுத்தர மக்களுக்கு கூடுமான வரையில் வரிவிலக்கு அளித்தும், வரியைக் குறைத்தும் அதே நேரத்தில் தாங்கக்கூடியவர்கள் மீது வரியை விதித்தும் இந்த அரசு தன்னுடைய வருமானத்தை வருவாயைப் பெருக்கிக் கொண்டு இருக்கிற அதே சூழ்நிலையில் - அன்றைக்குக் கூட சில உறுப்பினர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். இந்த வரி வசூலிப்பில் கண்டிப்பாக இருக்க வேண்டும்; இதிலே தீவிரமாக முயற்சிகள் வேண்டும்; திறமையாகச் செயல்பட வேண்டுமென்று சொன்னார்கள். நான் அன்றைக்குச் சொன்னதை மீண்டும் இங்கே நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

## ஆயத்தீர்வை மீதான வரிவிதிப்பை எதிர்த்து வழக்கு

இந்தியாவில் தயாரிக்கப்படுகிற வெளிநாட்டு மதுவின் மீதான 1981லிருந்து, அந்த அதிபர்கள் 1989 ஆம் ஆண்டு முடிய செலுத்த வேண்டிய ஆயத் தீர்வை மீதான வரி 57.46 கோடி ரூபாய். அவர்கள்செலுத்த வேண்டிய ஆயத்தீர்வை மீதான விற்பனை வரிதான் இந்த 57 கோடி ரூபாய். இந்த வரியை வசூலிக்க 1989லேயே நடவடிக்கை எடுக்கப்பட்டது. தி.மு.க. ஆட்சியிலே இருந்தபோது, அவர்கள் நடவடிக்கையை எதிர்த்து உயர்நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு

அரசுக்கு சாதகமாக அமைந்தது. எனவே அவர்கள் உச்சநீதி மன்றத்திற்குத் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீட்டிற்குச் சென்றார்கள். உச்சநீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றதே தவிர இடைக்கால தடையாணை விதிக்கப்படவில்லை. இடைக்காலத் தடையாணை இல்லையென்றால் அந்தவரியை வசூலித்து இருக்கலாம். வரி வசூலிக்கப் படவில்லை. இதற்கிடையிலே அவர்களுக்கு ஏதுவாக திராவிட முன்னேற்றக் கழக அரசு கலைக்கப்பட்டுவிட்டது. இப்போதும் அவர்களுக்கு ஏதுவாகத்தானே - இதையெல்லாம் செய்ய வேண்டுமென்பதற்காகத்தானே தி.மு.க ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு ஏதுவாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அப்போது கலைக்கப்பட்டது. அப்படி கலைக்கப்பட்ட பிறகு கவர்னருடைய ஆட்சி வந்தது. அந்த கவர்னர் பீஷ்ம நாராயண் சிங், கவர்னராக இருந்தபோது இந்தக் கோப்பு அவர்களுக்கு வந்தவுடன் அவர்கள் சொன்னார்கள்.

தடையாணைதான் இல்லையே, வரியை வசூலிக்கலாமே என்று கருதிப் பார்க்காமல், இது குறித்து உச்சநீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது, ஆகவே வசூலிக்க வேண்டாமென்று அவர், அவருடைய கருத்தை அதிலே, அந்தக் கோப்பிலே பதிய வைத்திருக்கிறார். கவர்னர் ஆட்சிக்குப் பிறகு 1991ல் நடந்த தேர்தலில் ஜெயலலிதா தலைமையிலே ஆட்சி அமைந்தது. அந்த ஆட்சி அமைந்த பிறகு கவர்னர் இடத்திலே இருந்த அந்தக் கோப்பு சுற்றி நிதி அமைச்சருக்கு வந்தது. நிதியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அந்தக்கோப்பிலே 31.7.91ல் கையெழுத்திடுகிறார். இப்படி ஒரு நிலைமை இருக்கிறது என்று அவர் ஒன்றும் கருத்துச் சொல்லவில்லை. அவர் ஒன்றும் கருத்துச் சொல்ல முடியாது. அவரெல்லாம் எப்படிக் கருத்துச் சொல்ல முடியும். நிதியமைச்சர்

கருத்துச் சொல்ல முடியுமா? நிதியமைச்சர் கோப்பிலே கையெழுத்து போடுகிறார். கையெழுத்து போட்டு முதலமைச்சருக்கு அனுப்புகிறார். 31.7.91ல் நாவலர் நெடுஞ்செழியன் நிதியமைச்சர் கையெழுத்து போட்டு முதலமைச்சருக்குக் கோப்பினை அனுப்பி வைக்கிறார்.

## ஒரு வருடம் 4 மாதம் கழித்து ஜெயலலிதா கையெழுத்து

முதலமைச்சர் அந்தக் கோப்பினைப் பார்த்துவிட்டு, ஒரு வருடம் நான்கு மாதங்கள், பத்தொன்பது நாட்கள் கழித்து அதிலே கையெழுத்து இடுகிறார். என்ன கையெழுத்து, இவ்வளவு நாட்கள் ஏன் தாமதம், உடனே வசூல் செய் என்றா? இல்லை. வெறும் கையெழுத்து. நிதியமைச்சர் என்ன கையெழுத்து இட்டாரோ, அதே கையெழுத்தை அவரும் இட்டார். எதற்கு நிதியமைச்சர் கையெழுத்து இட்டிருக்கிறார்? இப்போது வசூலிக்க வேண்டாம், வழக்கு முடியட்டும் என்று எழுதியிருக்கிறாரே கவர்னர், அதை ஏற்றுக் கொண்டுதான் நிதியமைச்சர் கையெழுத்து இட்டிருப்பதாகப் பொருள். அதையே திரும்பவும் முதலமைச்சரும் ஏற்றுக்கொண்டு, அவரும் கையெழுத்திடுகிறார். எனவே, அது வசூலிக்கப்படவேயில்லை. நம்முடைய ஆட்சி 1996 ஆம் ஆண்டு வந்தவுடன், அந்தக் கோப்பை எங்கெங்கோ சுற்றி, தேடிப்பார்த்து, கடைசியாக அதைப் பார்த்தபோது, இந்த வரியை வசூலிக்கச் சொல்லி உத்தரவிடப்பட்டது. அவ்வாறு வசூலிக்கச் சொல்லி உத்தரவிடப்பட்டதும் இந்த 57 கோடி ரூபாயைச் செலுத்த வேண்டியவர்கள் நம்மைச் சந்தித்து, தவணை முறையில் கட்டுகிறோம் என்றோ, அல்லது இரண்டு ஆண்டுக்காலம் தவணை கொடுங்கள் என்றோ யாரும் கேட்கவில்லை.

## தடையாணை நீக்கிட
## உயர்நீதிமன்றம் செல்ல உத்தரவு

இதற்கிடையிலே உச்சநீதிமன்றத்தினுடைய ஆணையும் வந்து விட்டது. அந்த வரியைக்கட்டத்தான் வேண்டுமென்று உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பும் வந்துவிட்டது. இதில் நாம் கவனமாகப் பார்க்க வேண்டும். உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பும் வந்துவிட்டது. உடனடியாகக் கட்ட வேண்டுமென்று அவர்களுக்கு நோட்டீஸ் போனதும், சிட்டி சிவில் கோர்ட்டுக்குப்போய் ஸ்டே வாங்கிவிட்டார்கள். உச்சநீதிமன்றத்தினுடைய ஆணைக்கு சிட்டி சிவில் கோர்ட்டிலே ஸ்டே கொடுக்கப்பட்டது. வழக்கினை நடத்துங்கள்; தீவிரமாக நடத்துங்கள் என்று சொன்னேன். வழக்கும் நடத்தப்பட்டது. அதில், 30 ஆம் தேதியன்று தீர்ப்பு. தீர்ப்பு வரும் என்று எதிர்பார்த்து, உட்கார்ந்திருந்தால் நீதிபதிசொல்லிவிட்டார். "மறுபடியும் மறு ஆய்வு செய்யப்போகிறேன்; மறுவிசாரணை நடத்தப் போகிறேன்" என்று சொல்லி விட்டார். சிட்டி சிவில் கோர்ட்டு நீதிபதி மறு விசாரணை நடத்தப் போகிறேன் என்று 'கம்ப்ளீட்'டாக எல்லாவற்றையும் 'ரீ-ஓப்பன்' பண்ணப் போகிறேன் என்று சொல்லி, மீண்டும் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நான் உங்களுக்கு உறுதியளிக்கின்றேன். தடையாணையை நீக்கி அந்தத் தொகையை விரைவிலே வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் துறைக்கு ஆணையிட்டதோடு, சிட்டி சிவில் கோர்ட்டினுடைய தடையாணையை நீக்கிட உயர்நீதிமன்றத்திற்குச் செல்லுமாறு ஆணையிட்டுள்ளேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படி ஒரு நிலைமை. யாரும் எதையும் செய்தாக முடிகிறது இன்றைக்கு நாட்டில். நான் எந்தத் துறையையும் குறை கூறவில்லை.

ஆனால், இந்த 57 கோடி ரூபாய் அரசுக்கு வந்து சேர்ந்தால், எத்தனை நல்ல காரியங்களை எத்தனை எளியவர்களுக்கான திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான் இதைச்சொல்கிறேன்.

## மாவட்ட ஆட்சித் தலைவர்களின் அலுவலகங்களுக்கு கட்டடங்கள்

இதற்கடுத்து, மாவட்ட நிர்வாகத்தைப் பற்றி யாரும் அதிகம் பேசவில்லை. காரணம், மாவட்டம் மிகவும் நன்றாக இருக்கும்போது எதற்காகப் பேச வேண்டும் என்று, பேசாமல் விட்டுவிட்டீர்கள் என்றே கருதுகிறேன். மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், இப்போது மிக முக்கியமாக, மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்களுக்குக் கட்டடங்கள் கட்டுவதுதான் இருக்கின்றது. ஏற்கெனவே இருந்த அரசால், நான்கைந்து புதிய மாவட்டங்கள் அன்றைக்கு உருவாக்கப் பட்டது என்றாலும்கூட, அதிலே எந்த மாவட்டத்திலும் கட்டடங்கள் கட்டப்படவில்லை. தூத்துக்குடிக்கு கட்டடம் கட்டப்படவில்லை. திருவண்ணா மலையில் கட்டடம் கட்டுவதற்கு முயன்று, அதிலே ஒரு தகராறு ஏற்பட்டு நின்றுவிட்டது. விழுப்புரத்தில் நாம்தான் கட்டி முடித்திருக்கிறோம். இந்த மாதம் அதனுடைய திறப்பு விழா நடைபெற இருக்கிறது. நாமே அறிவித்து, நாமேதான் கட்டி முடித்திருக்கிறோம். மற்றும் நான்கு மாவட்டங்களில் இடங்கள் பார்க்கப்பட்டிருக்கின்றன. அங்கெல்லாம் கட்டடங்கள் கட்டப்பட இருக்கின்றன.

இப்பொழுது மாவட்ட ஆட்சித் தலைவர்கள் புதிதாகப் பலபேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அது உங்களுக்கு நன்றாகத் தெரியும். சிலபேர் மாற்றப்பட்டிருக்கிறார்கள். புதிதாக வந்தவர்கள்,

ஏற்கெனவே இருப்பவர் எல்லோரும், நம்முடைய அரசின் திட்டங்களை, இந்த நிதிநிலை அறிக்கையிலே நாம் சொல்லியிருக்கின்ற திட்டங்களை 'இம்ப்ளிமெண்ட்'. நடைமுறைப் படுத்துவதற்குத் தக்க அறிவுரைகளைப் பெறுவதற்கும், அவர்களுடைய கருத்துக்களை அரசு பெறுவதற்கும் ஏற்ற வகையில் ஜூன் மாத முதல் வாரத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு, போலீஸ் அதிகாரிகளுடைய மாநாடு நடைபெற இருக்கிறது. அந்த மாநாட்டில், நிதிநிலை அறிக்கையிலே **1996 - 97, 1997 - 98, 1998 - 99** இவைகளில் அறிவிக்கப்பட்ட திட்டங்களில் எவையெவை எஞ்சியிருக்கின்றதோ, அவற்றை நிறைவேற்றவும், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே போன்ற திட்டங்களை நிறைவேற்றவும், மக்களுடைய அடிப்படை வசதிகளையெல்லாம் செய்து கொடுப்பது இந்த அரசினுடைய முக்கியமான குறிக்கோள் என்ற அந்தக் குறிக்கோளை நோக்கிப் பயணம் நடத்தவும் அந்த மாநாடு பெரிதும் பயன்படும் என்று கருதுகின்றேன்.

- இவ்வாறு மாண்புமிகு **முதலமைச்சர் கலைஞர்** அவர்கள், சட்டப்பேரவை உறுப்பினர்களின் விவாதங்களுக்குப் பதில் அளித்து உரையாற்றினார்.

சமையல் எண்ணெய்களுக்கு
முழுமையான வரி விலக்கு!

வெண்ணெய், மசாலா
பொடிகளுக்கு வரி குறைப்பு

மாணவர்கள் பயன்படுத்தும்
நோட்டு புத்தகங்களுக்கு வரி விலக்கு

பாண்டேஜ் துணி உற்பத்தியில்
ரூ 25 இலட்சம் வரை வரி விலக்கு!

கணினி மின் பொருள்களுக்கு
வரி குறைப்பு